
மருதாணி
நகம்
பூவை.எஸ்.ஆறுமுகம்

# மருதாணி நகம்

பூவை எஸ். ஆறுமுகம்

அழகுப் பதிப்பகம்
காரைக்குடி - 1.

அழகு 16
ஜனவரி 1963
உரிமை : பதிப்பகத்தாருக்கே

விலை : ரூ 3—00

அச்சிட்டோர் : வள்ளுவர் அச்சகம், காரைக்குடி.

# ' கல்கி ' வாழ்த்தினார் :

சோறுடைத்த சோழவளநாட்டின் மண்ணை வணங்கி நான் பேறுவைப்பற்றும் தருணங்களிலெல்லாம் பேராசிரியர் 'கல்கி' அவர்கள், பேட்டியின்போது என்னிடம் தெரிவித்த கருத்துக்கள் தாம் என்னுடைய இலக்கிய மனத்தில் வளம்காட்டி, வல்லமை ஊட்டி, என்னுடைய வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் உயிராகவும் உயிர்ப்பாகவும் நிலவுவது வழக்கம். "வரலாறு சொல்லி வைத்திருக்கும் நிகழ்ச்சிகளை மையமாக வைத்துக் கொண்டு கற்பனையை ஓட்டிச் சரித்திரக் கதைகள் பின்னுவது மிகவும் சிரம சாத்தியமான செயலேயாகும். அதற்காக, கிராமீயச் சுற்றுச்சார்பைக் கொண்டு கதை எழுதுவது சுலபமான காரியம் என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். சரித்திரக் கதைகளை எழுதும் பொழுது, கதை நடக்கும் காலம், மொழிநிலை, சமயம், கதைக் கருவுக்குத் தொடர்புடைய வேந்தர்களின் சமகாலத்திய அண்டை-அயல்நாட்டு மன்னர்கள், சமுதாய வாழ்வு போன்ற சகலவிதமான விவரங்களையும் நன்கு புரிந்து கொண்டுதான் கதைக்குப் பிள்ளையார்சுழி போட முடியும். அம்மாதிரியான கஷ்டங்கள், கிராமியக் கதைகளைப் படைப்பதிலும் இல்லாமல் இல்லை!" என்று தோற்றுவாய் ஒன்றினை அமைத்துக் கொண்டு, தொடரலானார் :

" உங்களுக்குக் கிராமத்துக் கதைகள் எழுதுவதென்பது ரெம்பவும் கைவந்த விஷயம் என்பதை உங்கள் கதைகள் உணர்த்துகின்றன. இவ்வகையில் நீங்கள்

தொடர்ந்து கவனம் செலுத்திஞல், பிற்காலத்தில் அதஞல் உங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். ஏனென்ருல், கிராமத்து மண்ணைப் பக்திசிரத்தையோடு மதித்துக் கதை எழுதுகிறவர்கள் ரொம்பவும் குறைவு தான். அதஞல்தான் சொல்கிறேன்... சிறுகதைகளுடன் பெருங்கதைகளையும் எழுதுங்கள் என்று!..."

பல்கலைச் செல்வரான 'கல்கி' அவர்கள் என் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் சொன்ன புத்திமதிகளை அவர்களது வாழ்த்தாகவும் ஆசியாகவும் மதித்து வணங்கி, முன்னேறி வருகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்வதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

உங்களுக்குத் தெரிந்த ரகசியந்தான்:

நான் பிறந்த மண் சிற்றூர்தான். 'பூவை மாநகர்' என்ற பெயரில் சரித்திர முத்திரை ஏதோ இருப்பது போலத் தோன்றுகிறதல்லவா ? ஆமாம், உண்மைதான்! இலக்கிய ஆர்வலர்கள், ஆறுமுகத்தை மறந்தாலும், 'பூவை'யை மறக்க முடியா தல்லவா ? நான் பிறந்த மண்ணையே என் புனைபெயராகவும் ஆக்கித்தந்த பெருமையும் கல்கி அவர்களையே சார்ந்தது. இப்பொழுது 'பூவை' என்ற பெயரிலுள்ள சரித்திர முத்திரை உங்கட் குப் புலஞகியிருக்க வேண்டும்.

கலைமணி கொத்தமங்கலம் சுப்பு அவர்கள், "பட்டிக் காட்டு மண் ரொம்பவும் புனிதமானது; தனி மகத்துவம் கொண்டது," என்று அடிக்கடி சொல்வது உண்டு. அது போல, பட்டிக்காட்டுப் பூவையர்க்கும் ஒருதனிச் சிறப்பு உண்டு; புனிதத் தன்மை உண்டு. ஏனென்ருல், அவர் களது மண்வாசி அப்படி.

பஞ்சவர்ணம்தான் இந்தப் புதினத்துக்கு நாயகி. பஞ்சவர்ணம், அசல் பஞ்சவர்ணக் கிளியேதான். கம்பர் வர்ணிக்கும் 'பெண் கனி' அவள். துடுக்குக்காரி. அதனுல் தான் அவளைத் தேடி அல்லல்கள் பல கட்டுச் சோறு கட்டிக்கொண்டு வருகின்றன. என்ருலும், அவள் அதிர்ஷ்டக்காரி!

ஆவணத்தாங்கோட்டை மண்ணுக்கு உடைய இந்தப் பஞ்சவர்ணம் முதன்முதலாக எனக்குத் 'தரிசனம்' தந்தபோது. அவளது தனித்த குணச் சித்திரம் என்னுள் ஆழப் பதிந்துவிட்டது.

அவள் ஒரு தனிப்பிறவி.

அகம் கண்டு, புறம் தெளிந்தவள்.

புறம் கண்டு, அகம் தெளிந்தவள்!

ஆனுல் ஒன்று.

அவள்பால் இயல்பாகவே ஊறித் திளைத்து விட்டிருந்த 'பால் உணர்வுக் கிளர்ச்சி'யின் காரணமாக, அவளது நடவடிக்கைகள் ஒன்றிரண்டு விரசமாகத் தோன்றலாம்; ஆனுல் அவற்றைக் கண்டு யாரும் 'மயக்கம்' கொள்ளக்கூடாது. காரணம் இதுதான்; அந் நிகழ்ச்சிகளின் பின்னே, புனிதம் மண்டிய குண நலம் ரசமான ஓவியமாகிக் கண்ணுமூச்சி காட்டும்!

கன்னி கழியாப் பெண் அவள். அவள் 'சிலாவத்தாக' மேனி தேய்த்துக் களித்துக் குளிக்கும் கட்டம். இந் நிகழ்ச்சியை ஓர் இளவட்டம் நோட்டம் பார்த்தானென்ருல், அதில் ஏதோ ஓர் அர்த்தம் இருக்க வேண்டாமா? பார்த்தவன் கோலப்பன். கதைத்தலைவன் பொறுப்பை இன்னெருவனிடமிருந்து அபகரித்துக் கொண்டவன். கோலப்பன் கோல நகை சிந்திஞலும்,

அவனைச் சுற்றிச் சுழன்ற புதிர்கள் ஒன்றல்ல; இரண்டல்லவே! இறுதியில், உச்சக்கட்டத்தை உருவாக்கும் புண்ணியம் தீக்குக் கிட்டுகிறது. 'நெசமான அன்பும் நேசமும் இல்லாத பொய்யான ஆளுகளுக்கு ஊடாலே, பொண்ணுப் பொறந்தவ நானு வாழ்ந்துப் பிடலாம்னு நெனைச்சதே குத்தமின்னு புரியறதுக்கு இம்மாங் காலமாயிருக்குது!' என்று அவளது அபலை மனம் அழுகிறது. ஆனல் அந்த அழுகை பிற்பாடு சிரிக்கும்பொழுது, பஞ்சவர்ணத்திற்கு எடுத்த எடுப்பில் மாரவேள் மன்மதனுய்க் காட்சி தந்த அந்தக் கோலப்பன், ஆண்டவனுகக் காட்சி கொடுக்கிருன்.

பஞ்சவர்ணத்தை நான் ஆளவில்லை.

அவள்தான் என் பேனுவை ஆட்சி செலுத்தினுள்.

அவள் சிரித்த பொழுதில், நான் சிரித்தேன். அவள் அழுதால், நானும் சேர்ந்து அழுதேன். அதனுல்தான் அவளது கற்பையும் உயிரையும் கட்டிக்காத்துக் காப்பாற்றும் கடமை எனக்குக் கிடைத்தது.

பெண்மையின் அரணுகப் பெண்மை மதிக்கப் பெற்று, வாழ்த்தப்பட வேண்டும். இத்தகைய சிந்தனைத் தெளிவுடன், நகர்ப்புறத்தே உலவிய பெண்கள் பலரைப் பல கோணங்களில் 'பார்த்து' நான் எழுதியிருக்கிறேன். இதேபோன்று, பட்டிக்காட்டுப் பாவைகளையும் நவீனமாகச் சித்திரித்து மகிழ வேண்டும் என்பது என்னுடைய நெடுநாளைய ஆசை.

இந்நவீனத்தில், முழுக்க முழுக்க நாட்டுப்புற வாடையே வீசுகிறது. இதுவே என் கனவு. உரையாடல்களில் தஞ்சை மாவட்ட வழக்குச் சொற்களே இயற்கையாக ஒலிக்கின்றன. இதுவே என் உரிமை.

ஆனால் ஒன்று. இத்தகைய வழக்குமொழிகளினால், கதை ஓட்டமோ, உரையாடல்களின் உட்பொருளோ பாதிக்கப்படவில்லை என்பதை ஏனைய வட்டப் பகுதியினர் உணரத்தக்க முறையில், முறையான விளக்கங்கள் அங்கங்கே ஒளிந்து கொண்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடும். இதுவே என் இயல்பு !

கொச்சை மொழியில் பாத்திரங்கள் பேசலாகாது என்று வம்புபேசும் அதிசயப் பேர்வழிகளுக்குப் பதில் சொல்ல எனக்கு நேரமில்லை.

கிராமப்புறச் சூழலை வைத்துச் சிறுகதைகள் எழுதுபவர்கள் குறைவு. இதே அமைப்புடன் கூடிய நவீனங்களை எழுதுபவர்கள் இன்னும் குறைவு. இதிலிருந்து, இம்மாதிரிப் படைப்புக்களை உண்டாக்குவதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை ஓரளவேனும் உங்களால் ஊகிக்க முடிந்தால், அதுவே எனக்கு ஆறுதல் தரும்.

'பூவையின் கதைகள்' என்ற என்னுடைய சிறுகதைத் தொகுப்பினை நடந்த மாதத்தில் வெளியிட்ட **அழகுப் பதிப்பகத்தினர்** இப்பொழுது 'மருதாணி நகத்'தை எழிலுற வெளியிட்டிருக்கிறார்கள். அடுத்தடுத்து என் புத்தகங்களை வெளியிடவும் இருக்கிறார்கள். பதிப்பகத்தாரின் அன்பு ஆழமானது.

பஞ்சவர்ணத்தை முன்கூட்டியே நீங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது 'உமா'. 'உமா' அதிபரின் அன்பு மகத்தானது.

பூவைமாநகர்
14—1—63

**பூவை. எஸ். ஆறுமுகம்.**

## நுழைவாயிற் சில சொற்கள்

காலத்தால் அழியாத பேரிலக்கியங்களை உருவாக்குவதில் தமிழகம் என்றுமே தயங்கியதில்லை. அவ்வகையில் இடம்பெறத் தக்கதொரு நூலாக மருதாணி நகத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். முற்றிலும் கிராமப்புறச் சூழ்நிலையிலேயே உருவாக்கப்பட்ட முழு நவீனம். இடை இடையே சிதறிவரும் கருத்துக் குவியல்கள் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். இந்நவீனத்தில் வரும் பாத்திரங்களை என்றுமே நெஞ்சில் நிலைத்திருக்கும் வண்ணம் உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர். 'உமா' வாசகர்களின் எண்ணங்களிடையே தவழ்ந்து வந்த நவீனத்தை தமிழ்ப் புத்தக உலகிடையே பரவ விட்டிருக்கிறோம்.

**கா. முத்து**
உரிமையாளர்
**அழகுப் பதிப்பகம்**

# மருதாணி நகம்

**திட்டி வாசல் :**

அன்பில் சோதனைகள் பிறக்கின்றன; சோதனை களினின்றும் அன்பு பிறக்கிறது. இதுவே வாழ்வு.

வாழ்வின் இந்த நியதி விளையாட்டிற்கு ஓர் இலக்குப் புள்ளிதான் காதல் என்னும் எழிற் கனவு.

நாட்டுப் புறங்களில் நேசம் பூப்பதும், பக்குவம் கொள்வதும் ஒரு தனிக் காவியம் போல.

பஞ்சவர்ணம் என்று அவளுக்குப் பெயர். சூது வாது களின் வாடைக் காற்று நெடி சொடுக்கும் புழுதியில் அவதரித்த பெண் அவள். அவள் பட்டிக்காட்டு மண்ணுக்கே ஒரு விளக்கு. அவள் குணம் அப்படி.

பெண் என்றால் தீ. தீயுடன் விளையாடுவதற்கு ஒரு வரம்பு வேண்டும்.

பஞ்சவர்ணம் விந்தைப் பிறப்புத்தான்!

அவள் போராடவேண்டிய பிரச்சினைகள் ஒன்றா இரண்டா?

அவள் கதையே ஒரு சிக்கல்; ஒரு சிருஷ்டி!

புரட்டுங்கள்; பஞ்சவர்ணத்தை ரசிக்கலாம்!...

# 1 பெண் கனி

பஞ்ச வர்ணக் கிளி என்ருல், அதன் அந்தத்திற்கும், சந்தத்திற்கும் கதை சொல்லவேண்டுமா? இல்லை, கதைதான் கேட்கவேண்டுமா? இரண்டும் தேவையில்லை; இரண்டுக்கும் தேவையில்லை அல்லவா?

காரணம் இதுதான்: பஞ்சவர்ணக்கிளி என்ருல், அதன் அழகு தனித் தன்மை வாய்ந்தது; அதன் குரல் தனித்து இயங்கும் பண்பு வாய்த்தது!

வளர்த்த பாசம் பற்றி, வருடிய நேசம் பற்றிப்பிடித்திருந்த அந்தக் கிளியை நொடிப்பொழுதிற்குள் பறக்க விட்டுவிட்டாள் அவள். ரவைப் பொழுதிற்குள்ளே நொடியில் குடம் சாய்ந்த ரேக்ளாவைப் போல அவளுடைய மனம் சங்கடப்பட்டது. பிறகு, முகவாய்க்கட்டையில் சுட்டு விரல் தொட்டுப் பிரமாதமாக யோசனை செய்தாள். யோசனை பக்குவம் பெறவேண்டாமா? ஆகவே, அவள் மண்ணில் மனம் பதித்தபடி, விண்ணில் சித்தம் பதித்தாள். மோகனம் முகிழ்த்த உடுக்கள் உடுக்குக் கொட்டி விளையாடின. அவள் கைகொட்டிச் சிரித்தாள். அடுத்த இமைப்போதிற்குள்ளாக, அவளது உடல் அசைந்து தள்ளாடியது. சிலும்பல் தட்டி ஒட்டிக் கிடந்த 'கஞ்சமலர்ப் பாதங்கள்' பசை விலகின மாதிரி விலகலாயின. 'தொபுகடீ' ரென்று விழுந்தாள் அவள்;

நீரலைகளின் உயிர்த்தத்துவம் கதை சொல்ல, அவள் நெஞ்சிறுக்கும் சிரிப்புச் சிரிக்கத் தொடங்கிவிட்டாள்!

கன்னிக்குத் துணையானாள் கன்னி!
நிலவுக்கு இணையானது நிலவு!
'பெண்கனி' அவள்!
அவள் பஞ்சவர்ணக்கிளி!

மூன்று கைவீச்சுக்குச் சுற்றளவு கொண்டிருந்தது அந்தக்கேணி. மலையாய்க் குவிந்திருக்கும் தென்னங் குலையைத் தலைசீவிக் கொத்திவிட்டதும், சுவைநீர் புன லாய்ப் பாய்ந்தாற்போல,அவ்வளவு நிறை பெருக்காகவும் துலாம்பரமாகவும், இனிப்பாகவும் இருந்தது கிணற்றுத் தண்ணீர். பூக்கரங்கள் இரண்டினையும் குவித்து, அந்த இடைவெளியில் நீர் குவித்து, நான்கு 'மடக்கு' குடித்தாள். கைகளை வீசி நீந்தி விளையாடிய அவளுக்கு மேனி வலித்தது. '...ப்பூ' என்று நையாண்டி படித்துவிட்டு ஒரு முறை முக்குளித்து எழுந்தாள். மறு படி அவளுக்கு 'அந்த நினைப்பு' மூண்டது. அரைக் கணம் மோனநிலை. தெளிந்து வந்த நீர் வெளியிடை அவளது எழிலார் வதனம் தெரிந்தது. பார்த்தவள் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவளுக்கு உடம்பை 'என்னவோ' பண்ணியது!...

பஞ்சவர்ணம் லேசுப்பட்டவளா?
அவள், அழகுக்கு அரும் பதவுரை
விழிகள் கற்பனையின் கரு.
உதடுகளோ, இன்ப உணர்விற்கு அரண்.
அழகுக்கு அரும்பொருள் அவள்.
பஞ்சவர்ணம் என்றால், பஞ்சவர்ணம்தான்!

தன்னைத்தானே நோக்கி, தனக்குத்தானே ரசித்த வாறு இருந்த அவள் மேலும் தன் பார்வையைக் கீழே தாழ்த்திப் பார்க்க ஒப்பவில்லை. மண் விலக்கி, தூசு தூவி, காடு கடந்து நாலு கால் பாய்ச்சலில் பறந்து செல்லும் அரிமளம் 'பொலி காளை' யைப் போல அவளது கன்னி மனம் ஆகியிருந்த அந்தரங்கம் அவளுக்கு மட்டுந்தான் அத்துபடி! கண்களின் பார்வை கட்டிக்காட்டிய விளிம்புக் கோட்டில் அழகுச் சுவை சேர்த்து, அழகுணர்ச்சி சேர்ந்து தெரிந்த 'தசைத் திரட்சிகளின்' மோகனம் அவளுள் மோகம் பரப்பியதோ? கைகளை முறுக்கிக் கொண்டாள்; விரல்களை நெட்டி பறித்தாள். கிணற்றின் சனி மூலையில் விளிம்பு பாய்ந்திருந்த வேப்பங்கட்டையில் ஒண்டியிருந்த வலதுகால் பாதம் விலகியது. பிறகு அங்கம் அங்கமாக அழுக்குத் தேய்த்தாள்; முழுகினாள். விண்மீன் தோழிகள் சிதறினர்!

இருந்திருந்தாற்போல, பஞ்சவர்ணம் கிணற்றின் அடியிலிருந்து மேலே அண்ணாந்து நோக்கினாள். ஏதோ ஓர் ஒலி படர்ந்து வந்துகொண்டிருந்தது. 'சீட்டி' ஒலியா அது? '—ப்பூ!' என்று அவள் திரும்பவும் தன்னுள் வாய்விட்டுக் கூறிக்கொண்டாள். கேணியின் சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த 'அணைகல்' வரிசையை ஒருமுறை கண்ணோட்டம் பதித்தவளாக, முதற்படியில் கால் பதித்தாள். அப்போது, நீரிடைப் பிரதிபலித்த உருவம் ஒன்றின் அசைவுக்கோலம் அவளை அசையாப்பதுமை யாக்கியது. 'ஆமாலே; மெய்யாலுமே யாரோ துப்புக்கெட்ட ஆம்பளைச் சென்மந்தான் களுக்க மாக நோட்டம் பார்த்துக்கிட்டு இம்மா நேரம் இருந் திருக்கும் போல!... தூ !சமைஞ்ச குட்டி ஒளிஞ்சு மறைஞ்சு மேலு குளிச்சாக்க, அதைக்கூடவா ஒருத்தன் ஒளிஞ்சிக்கிட்டுக் காணுவான்? யாரு அந்தப் போகுடிப்

பினுதிப் பய?.. இந்த ஆவணத்தாங் கோட்டைக்குள்ளா றவும் சரி, இதைச் சுத்தி கூடு கட்டிக் கிடக்கிற நாட்டுப் புறங்களிலவும் சரி, இந்தப் பஞ்சவர்ணத்தைப் புரிஞ்சிக் கிட்டவங்க உண்டனத்தான் இருக்க வேணும். ஊம், வரட்டும், சொல்லுறேன்!' என்று கருவிக்கொண்டே, கண்ணில் தென்பட்ட கல் ஒன்றை எடுத்து கவண் வீசுகிற பாவனையில் கையைப் பின்னுக்கு இழுத்து ஒரே விச்சாக வீசினுள். உடனே, காறித் துப்பினுள்.

பஞ்சவர்ணம் இப்பொழுது கிணற்றின் மேல் தளப் பரப்பில் நின்றுள். பருவம் செழித்த மார்பகத்துடன் ஈரம் சொட்டிய கத்தறிப்பூச் சேலை நேசம் பேசியது. நாற்புறமும் இரண்டு கண்களை வீசி அளந்தாள். இரை தேடும் ஜாதிப் பாம்பாக மாறி, உன்னிப்புடன் பார்வையை வலை வீசி விரித்தாள். ஈ, காக்கையைக் காணவில்லை அவள். 'பேடிப்பய மவன்...!'

ஆவரம்பத்தையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த கொட்டடி ரவிக்கையை எடுத்துத் தோளில் போட்டாள். அப்போது, சேகண்டி நாதம் மிதந்து வந்தது. 'ஆத்தாடியோ! ராக்காச்சி தேவதைக்குப் காப்புக் கட்டப் போறுவளே, இன்னிக்கு ரவ்வைக்கு! இப்பத்தான் நெனைப்பு மூளுது. சரி, சரி; சுருக்கணப் பரிஞ்சு, புதுசு கட்டிக்கிட்டுப் போவணும். என்னொடத்த சின்னஞ் சிறிசுக தெய்வானை, காத்தாயி, மாரியம்மா, பூவாயி அல்லாரும் சேகரமா வந்திருப்பாங்க. கரகம் ஆட்டம் ரொம்பவும் மோக்ளாவாயிருக்குமாக்கும்!' என்று நினைவுகளை மருக்கொழுந்துத் துணுக்குகளாக்கி, மனநாரில் தொடுத்த தருணம் மணவாடை வீச, அந்த வாடையின் விளைவாக துண்டுதறித்த ஞாபகங்கள் குழம்பிப் புரளலாயின. அவளது நயனச் செம்புகள் கண்ணீரைக்

கொட்டின. 'ம்...எம் பொசுப்பு அம்பிட்டுத்தான். நான் கொடுத்து வைக்காத கொடும்பாவி ஆயிப்புட்டேன்!'

எட்டடிக் குச்சு வீடு அது. இயற்கைத்தாய் சீர் தந்த அமைதிப் பொலிவு அங்கே 'பூத்திருந்தது. அமைதிக்கு அன்பு மட்டுந்தான் பண்பல்ல; ஆணவமும் கூட அதன் குணங்களில் ஒன்றுதான். குடிசையைச் சூழ்ந்திருந்த தோட்டத்தில் அப்படிப்பட்ட 'ஆணவம்' தலை நிமிர்ந்தது. சோளக்கதிர்க் கொண்டைகள் கெண்டை மீன்களைப்போலத் துள்ளி விளையாடிக்கொண் டிருந்தன. நாலு 'சால்' தண்ணீரை உண்ட கத்தரிச் செடிகளில் பிஞ்சுகள் தோன்றியிருந்தன. இதழ் விலக் கிப் பார்த்து, இதழ் விலக்கிச் சிரித்தவண்ணம், வண்ணம் பரப்பியிருந்த செடி கொடிகளைக் கடந்து குடிசையை அடைந்தாள்; மூங்கில் தட்டியில் காய்ந்த சேலையைத் தட்டி உதறினாள்; ரவிக்கைத் துணியை எடுத்தாள்.

மறைவிலே நாணம் மறைந்தது!

அழகிலே அழகு பிறந்தது!

ஒரு பாகத்திற்குப் பிசிறு மடங்காமல், பர்மாக்காரி யின் முடியைப் போலச் செழித்து வளர்ந்திருந்த கேசத்தை 'ஆத்தியெடுத்து' கொண்டை போட்டாள். செவ்வந்திப் பூவைச் செருகினாள். சிந்தூரப் பொட்டு இட்டாள். 'ஜிகினா' தூள் பளபளத்தது. சந்தைப் பேட்டைக் கண்ணாடியில் அவள் உருவம் சமைந்தது. சமைந்த பெண் 'களுக்' கென்று சிரித்தாள். சிரிக்கமாட் டாளா பின்னே? வெட்கம் கவ்வியது. கைகள் வதனத் தைக் கவ்வின. திரைவிரித்த நாணத்திற்குத் திரை செலுத்தி, பின் திரை நீக்கியது மென்காற்று. விரிந்த

கண்கள் மீண்டும் அதிசயம் பூண்டு விரித்தன. குந்தியிருந்தவள், 'விசுக்' கென்று எழுந்தாள்; கைப்பிடியில் அசைந்தாடிய வேப்பங்கன்றை விலக்கிப் பார்த்தாள். 'யாரோ கூத்து நடத்திருப் போல, சத்தமுந்தி முனிசாமி கண்ணோட்டம் ஏதோ தெரிஞ்சிச்சு... இப்ப யாதொண்ணையும் தடம் காண ஏலலையே? கண்கட்டு மாயமாங் காட்டியில்ல நடப்பு இருக்குது?

தாரை, தம்பட்டம் ஒலி முழங்கின. மேளமும் மத்தளமும் முரசொலி கிளப்பின. உடுக்குச் சத்தம் வீரிட்டது. ஒலி வடிவத்தில் இயங்கி ஒளி வடிவம் பெற்றுத்திகழ்ந்த கூப்பிடு தொலைவு நிகழ்ச்சிகள் அவள் மனப் படுதாவில் நிழலாக உயிரூட்டின.

வடித்திருந்த சோளக் கூழை எடுத்து ஆறவைத்து, ஆறு அகப்பை அள்ளி எடுத்து, குறிஞ்சிப்பாடி வட்டியில் கொட்டினாள். நீராகாரம் ஊற்றினாள். உப்புக்கல் தூவினாள். கலக்கினாள். நாலுமடக்கில் குடித்தாள்; ஊசி மிளகாயும் வெங்காயமும் நாக்கில் சூடு தந்து சுவை தந்தன. ஈரக்கையை அப்படியே புடவையில் அப்பித் துடைத்தாள். சுருக்குப் பையில் இருந்த வெற்றிலைச் சருகை எடுத்து மடித்து, பாக்குவெட்டிப்போட்டுக் கொண்டு, சுண்ணும்பை சிறுக எடுத்துக் குதப்பினாள். வெளியே புறப்படப்போனாள் அவள்.

அப்போது, 'தேநீர் கேத்தல்' அவளது கால் பட்டுத் தடுமாறி விழுந்தது. கள்ளிப்பெட்டி கவிழ்ந்தது; துணிமணிகள் கவிழ்ந்தன.

அதே சமயத்தில், அவள் உடம்போடு மோதிய அந்த உருவத்தை 'உடும்புப் பிடி' யாகப் பற்றினாள்.

சுவரொட்டி விளக்கை எடுத்து நேர்முகமாகப் பிடித்தாள். முகம் தெரிந்தது!

" யாரையா நீ ?"

" அசலூரு ...!"

" அதான் எழுதிக்கெடக்குதே ஒம் மூஞ்சிப் புறத்திலே !... எந்த ஊரு உனக்கு ?

" மூக்குடி !..."

" எங்குடிசைக்கு வசமா நீ எதுக்கு வந்தீயாம் ?"

" சும்மா !"

" சும்மாவா ?"

" ஊகும், சொமந்துக்கிட்டுப் போவத்தான் வந்திருப்பே !"

" ம் !..."

" என்ன அது ...ஊங் கொட்டுறே ?"

" வந்து ..."

" புரியுது. கண்ணிலே கையிலே ஆப்புடறதைச் சுமந்துக்கிட்டு மூச்சுக் காட்டாம ஓடிப்பிடுறத்துக்குத் தான் நீ வந்திருக்க வேணும்."

" வாய்ச் சத்தியமாய்ச் சொல்லுறேன். அப்படியெல்லாம் சம்சயப்படாதே !"

" ஒனக்கு வாக்கப்பட்டவளை அழைக்கிறது கணக்கிலே, படாதே, புடாதேன்னு பேசுறீயே ? ஒனக்கு ஈரலிலே பித்தா, இல்லே, எலும்பிலே பித்தா ?—கேக்கிறேன் இந்தப் பொண்ணு !"

" சிவ சிவா ! நான் அனுதையுங்க !"

"நாங்கூடத்தான் அறுதை! அதுக்காவ, ஆளு சனம் இல்லாத ஒரு பொம்பளை வாழுற குடிசைக்குள்ள, அதுவும் லா பறிஞ்ச இம்மா நேரத்திலே நீ அடி எடுத்து வைக்கிறதுக்கு மனம் துணிஞ்சி யிருந்தீன்னு, அதுக்குள்ளே என்னமோ ஒரு கதை, அல்லி அரசாணி மாலையொப்ப குந்திக்கிட்டுத்தான் இருக்கோணும்!"

"அய்யய்யோ, அதெல்லாம் ஒரு தப்புத் தண்டா இல்லீங்களே?"

"பின்னுடி, நீ இங்கே வாரத்துக்கு என்னு முகாந்திரமாம்?"

"பசிச்சுது! வந்தேன்!"

'பசி' என்ற சொல்லைக் கேட்டதும், பஞ்சவர்ணம் துடித்துப்போனுள். கண்ணீர் பொசிந்தது.

"பசிக்குதாங்காட்டி?"

"ஊம்!"

"சாமி சத்தியமா?"

"சாமி சத்தியமாத்தான்!"

"பாவம்!"

கை விளக்கு அந்தப்புதியவனை நாடியது.

இளவட்டம்.

பசியின் முதிர்ச்சி.

கைப்பிடிப்பைத் தளர்த்தினுள் பஞ்சவர்ணம்.

அவன் விலகினுன்!

விளக்கும் கையுமாக உள்ளே பாய்ந்தாள். கூழ் கொஞ்சம் எஞ்சியிருந்தது ஊற்றிக் கொடுத்தாள். குடித்தான். 'கல்லாப் பெட்டியில்' தலைசாய்த்துக் கிடந்த

'ராஜாமுடி' வெள்ளிப் பணங்களில் இரண்டை எடுத்தாள். "இந்தா, இதை வச்சுக்கிடு. ஒரு ரூவாக் காசு இருக்கு. கூப்பிடுற தொலையிலே ராக்காச்சி ஆத்தா கோயிலு இருக்கு. அங்கனே பசியாறிக்கிடு. ஓடு," என்று துரிதப்படுத்தினாள்.

வந்தவன்கதை பழங்கதையாக இருந்த வேளை பார்த்து, அவள் அவனை மறுதரம் அலட்டினாள். "இந்தா, ஒன்னைத்தான். ஒம் பேரு என்ன?" என்று வினைச் சொடுக்கினாள்.

"கோலப்பன்!" என்ற பதில் புறப்பட்டு வந்து சேர்ந்தது.

"சரி நீ போவலாம். என்ன, தயங்கிறே? எம் பேரு ஒனக்குத் தேவைப்படாது... நடையைக்கட்டு. இந்தா, நில்லு. இதைமட்டுக்கும் காதிலே வாங்கிக்கிடு. எப்ப பசிக்குதோ அப்ப இங்காலே வா. ராத்திரி, பகல் எப்பவானாலும் வா. பகலுக்கு வந்தீன்னா, திரமாக் கிடைக்கும் திங்கிறதுக்கு. சாயாக்கடை லாவாரம் எனக்கு! அம்புட்டுத்தான். நீ போய்க்க!"

அவள் 'விடை' கொடுத்தாள்.

அவன் போகத் தொடங்கினான்.

அடுத்ததாக, அவளை அடுத்து வந்தது இன்னொரு சந்தேகம்.

"இந்தாப்பாரு!"

அவன் அவளை உன்னிப்பாய்ப் பார்த்தான்.

அவள் முல்லைச் சிரிப்புச் சிந்தினாள். சிரிப்பில் அழகு தவழ்ந்து விளையாடியது. அந்த விளையாட்டில் கருவம் கூட்டுச் சேர்ந்தது.

"இந்தா ஒன்னைத்தான். என்னா அப்பிடிப் பாக்கிறே, அப்படியே லபக்கினு முழுங்கி ஏப்பம் விட்டுப்புடுறது மாதிரி?"

அழகுக்கு அழகு தூது சென்றதோ?

"வந்து... நீதானே ஒன்னைப் பார்க்கச் சொன்னே? அதானுக்கும் அப்பிடி சிலாவத்தாப் பாத்தேனுக்கும்!"

அழகின் கருவமே அழகிற்கு வாய்த்துவிடும் கரும் புள்ளி எனலாமோ?

"சம்பப் பேச்சுக்கார ஆம்பளைதான் போலே...!"

"வந்து...!"

"ஆமா, நீ கொஞ்ச முன்னுக்கு என்னோட கேணிப் பக்கம் நடந்து வந்தீயில்ல?"

கோலப்பனின் கோலம்தவழ் முகம் வேர்வையின் கரை கட்டி விளங்கியது.

"வ...ந்...து..."

"சபாசு, வந்தீல்லே!"

"ம்... ஆமா ...பஞ்சவர்ணம்!"

"கூத்தைப் பாருங்கடியோ, கூத்தை!...எம் பேரான பேருகூட மட்டுப்பட்டிருக்குதே இந்த மம்முதனுக்கு? பலே ராசான்னும் பலே ராசா...சோக்கு ராசா!"

அவளது நையாண்டிப் பேச்சில் அவன் உள்ளம் மறுகினான்; உடல் குலுங்கினான். அவளை விழுங்கி விடுபவனென விழி அழுத்திப் பார்த்தான்.

"இன்னாங்கிறேன்...மொறை மச்சான் பாக்கிருப்லே மறுகடுத்தமும் அம்மாந்தூரம் பாக்கிறே?......சும்மா கிளம்புங்கிறேன்!" என்று உத்திரவிட்டாள் பஞ்ச வர்ணம்.

கோலப்பன் போய்விட்டான்.

மிளகாய்ப் பானையை இறக்கினாள்; 'தம்பிக் கோட்டைச் சூரிக் கத்தி' ஒன்று வந்தது. அதைத் தன் இடுப்பில் சொருகிக்கொண்டாள். குடிசையின் தெருப் புறப்படல் கதவை வழி அடைத்தபின், அவள் மார்பகத் துணியை இழுத்து விட்டவளாக, நடை பயின்றாள். கைவளைகள் குலுங்கின; தண்டை கொஞ்சியது; மிஞ்சி பண் இசைத்தது. விழி பதித்து, வழி மடங்கி, தடம் பார்த்து, தடம் மறுகி நடந்தாள் அவள். நெருஞ்சி முட்களை அருட்டினாள் அவள். ஐயனார் கம்மாயை ஒதுக்கினாள். நிலவை ஒதுக்குவாளா?

ராக்காச்சி அம்மன் கோயில் வந்தது!

ஊராளும் தேவதை ராக்காச்சி!

சித்திரா பௌர்ணமித் திருநாள்; அன்றைக்குத் தான் காப்புக் கட்டுத் திருவிழா ஆரம்பம்.

பொய்க்கால் குதிரை ஆட்டம் ஒருபுறம் நடந்தது. கரகம் விளையாட்டு மறு தொங்கலில் அத்தளிப்பட்டது. சிலம்பக்கழிகள் மோதி விலகி நிர்த்துளிப்படுத்தியவா

திருந்தன. கன்னி கழிந்த பெண்கள் தாலிகள் குலுங்க ஓர் ஓரமாக நின்று கும்மி கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

இன்பத்தின் எல்லைப் புள்ளியில் பக்தி கனிகிறது!

பக்தியின் தொடுசரத்தில் இன்பம் தொடுக்கப் படுகிறது.

உலகாளும் அம்பிகை, மறக் கருணையின் முத்திரையில் அறக் கருணையின் அபயம் பதித்து விளங்கினுள். தஞ்சமென வந்தவர்கட்கு, அஞ்சேல் என்று சொல்லிக் காட்ட தெய்வமணிக் கரங்கள் இரண்டும், போதாதா? எஞ்சிய இரு கைகளில் திரிசூலமும், பலிகொண்ட அசுரன் தலையும் வடிவுகாட்டின. அவள் வடிவழகி! திரிலோக சுந்தரி அவள்! பாவ நாசினி ஆயிற்றே?

ஐயனுர் குதிரையும் சன்னுசித் தெய்வமும் காவல் நிற்க, ராக்காச்சித் தாய் நின்றுள்.

வந்த பஞ்சவர்ணம் 'தேட்டம்' கணித்து ஓர் ஓரமாக நின்றுள். கை தொழுதாள். 'ஆயி! இந்த ஏழைப் பொண்ணைக் காப்பாத்து. இந்தக் கடுத்தம் தேரோட்டத் தன்னைக்கு ஒனக்குப் பள்ளயம் படைக்கிற வளமைப்படி மேலைக்கும் செஞ்சுப்பிடுகிறேன்!"

சிவப்புப் பொட்டிட்டு, திருநூறு பூசி முடித்ததும், பூசாரி நீட்டிய பூச்சரத்தை உச்சித் தலையில் செருகிக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டாள்.

"ஏலே...பஞ்சவர்ணம்!"

அவள் திசை திரும்பினுள். "வாலே. தெய்வி!"

"இந்தாப்பாரு, நம்ப காத்தாயி!"

"வாடியம்மா வடிவு!"

"ஆமாடி ஆத்தா, பெரிய மனுசி!"

"சொன்னாலும் சொல்லாட்டியும் அது ஊரு நாட்டுக்கு ஒசந்த பொண்ணுதானுக்கும்!"

"இல்லீயாங்காட்டி...!" என்று ஆமோதித்தாள் தில்லைக்கண்.

அவளை வெட்கம் பூண்கட்டப் பார்த்தாள் பஞ்ச வர்ணம். அப்போது அவள் பார்வை எதிர்ப்புறம் திரும்பி மருண்டு உருண்டு கொண்டிருப்பதையும் அனுமானம் செய்யத் தவறவில்லை, "என்னடி குட்டி, அங்கிட்டர்லயே அம்மாந்தூரம் முழிச்சுப் பாக்கிறே?" என்று கேட்டவாறு அவளும் திரும்பினாள்.

'இளசு'கள் சிலர் முண்டாசு கட்டி, வெற்றிலை மென்று திரிந்துகொண்டிருந்தனர்.

'ப்பூ!' என்று இப்பொழுதும் பஞ்சவர்ணம் முத்தாய்ப்புப் பொத்தினாள். பிறகு, "வாங்கடி நாம நடப்பம்!" என்று தோழிகளை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

வளையல் கடை அது.

"ஐயாவே!"

"யாரு?...அடி ஆத்தே! எங்க பஞ்சவர்ணமா? வா ஆயி! இப்பத்தான் ஒன்னைக் காணமேன்னு தவியாத் தவிச்சுக்கிட்டிருந்தேன். சதா காலமும் நீதானே தாயி எங் கண்ணுக்குள்ளாற விளையாட்டுக் காட்டுறே!" என்றார் வளையல் வியாபாரி.

"ஐயா, என் வரைக்கும் நீங்க தெய்வம் கணக்குத் தானுங்களே! பாசம் இன்னதினு கண்டுக்கிட ஏலாமத் தவிச்ச இந்த அறுதைக்கு நீங்கதான் பாசத்துக்கு அருத்தம் சொன்னீங்க; நீங்களே பாசமாகவும் இருந் தீங்க. ஒங்களை நான் எண்ணுத பொளுது கிடையா துங்க, ஐயா!"

பாசம் நான்கு முனைகளினின்றும் கண்ணீர் விட்டது.

"இன்னிக்குக் காப்புக்கட்டு ஆத்தாளுக்கு. காலாலே குருவி மண்ணை எத்திப்புட்டு அங்காலே குந்திக்கிடு ஆத்தா. ஒனக்குப் புது வளவி போடுறேன். செட்டி நாட்டுச் சரக்கு இது!" என்றார் கிழவர். அமர்ந்தவளின் பூங்கரம் பற்றி அமரிக்கையாக வளையல்கள் பூட்டினார். பிறகு சொன்னார்; "என்னைப்பாரு வருணம்! ஒங் கண்ணாலத்தன்னைக்கு நான் வந்து இருந்து ஒந் தங்கக் கைக்கு எப்ப வளவி பூட்டுவேனோ, அப்பத்தாம்மா என் மனசுக்குக் கிலேசம் குறையும். இந்தக் கிழட்டுப் பொணத்துக்கும் செகல் தப்பி வருது தங்கம்!"

வெட்கம் வந்த சுவட்டில் வேதனையும் தடம் பதித்தது. பஞ்சவர்ணம் நீர்சோர, தலையை நிமிர்த்தி னாள்; "ஐயா, நீங்க எழுதிக்கெடப்பீங்க, ஐயா!" என்றாள். வளைகள் முழங்கின.

அது சமயம், 'ஆய், ஊய்!' என்று முழக்கச் சத்தம் படர்ந்து ஒலித்தது.

பஞ்சவர்ணம் பதட்டத்துடன் எழுந்தாள்; ஓட்டமாக ஓடினாள்.

ஈசானியப் பகுதியில் நின்ற நாவல் மரத்தடியில் பெரிய கும்பல் காணப்பட்டது.

பஞ்சவர்ணம் மூச்சு வாங்க நின்றாள்.

பசி என்று வந்த கோலப்பனை ஐந்தாறு இள வட்டங்கள் வட்டமாக வளைத்துக்கொண்டு கைக்கழி களால் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

கோலப்பன் 'வாகு' தெரிந்தவனாய்த்தான் இருக்க வேண்டும்!

குமரிக்குக் குருதி கொதித்தது. ஓடினாள். நழுவி விழுந்த ஒரு கம்பைப் பற்றினாள் அவள். அதை வசமாகப் பிடித்துக்கொண்டு வாய்ப்பாக சுழற்றி விட்டாள்.

"ஏ, பஞ்சவர்ணம்! இந்தாப் பாரு, நானு கோவிந்தன்!..."

"தெரியுது!"

"நான் முத்தையா!"

"ச்சூ!..."

"ஓம் மொறை மச்சான் நான்...வீரப்பன்!"

"அல்லாம் தெரியுமே!"

"நானு பூச்சி!"

"ம்"

,,நானு சன்னாசி!"

"ப்பூ...போ...!"

"பழசு பட்டதையல்லாம் மறந்துப் பூட்டியாடி?"

"சீ!"

உரு வரவழைக்கப்பட்ட பத்திரகாளி ஆனாள் பஞ்ச வர்ணம்.

நிலவின் பொலிவில் கழிகள் சுழித்தன.

வளைக்கரத்தில் ரத்தம் வழிந்தது.

'இளஞ்சிங்கங்கள்' அறுவரும் 'கடலே கதி' என்று பரிந்து விட்டனர்.

"ப்பூ!"

கண்ணீர் வழிந்து செந்நிறம் பாய்ந்து ஓடிக் கொண்டேயிருந்தது.

கோலப்பன் நினைவு தப்பியவனாக, பஞ்சவர்ணத்தின் மடியில் கிடந்தான்.

"தங்கச்சி தெய்வி, ஓடிப்போயி மணியக்கார எசமானருகிட்டே காதைக் கடிச்சு, நடந்த அநியாயத்தை விழுக்காட்டி, கையோட அவங்களை இட்டுக்கிட்டுவா எங் குடிசைக்கு! அதுக்குள்ளே, பக்கத்தாலே மொட்டை வண்டி பிடிச்சு, இந்த ஆம்பளையை என் நிழலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயி, வைத்தியம் வாகடத்துக்கு வகை செய்யிறேன்!" என்றாள் பஞ்சவர்ணம். நா தழு தழுத்தது. நெஞ்சு எம்பி எம்பித் தணிந்தது. அவளது தோளில் கிடந்தது கோலப்பனின் வலது கை. அவனுடைய மேனியைத் தொட்டுத் தடவிக்கொண்டிருந்தாள். அப்பால், அவனது விழிநீரைத் துடைத்தெடுத்தாள்.

ஆனல் தன் கண்ணீரைத் துடைக்க மட்டும் அவளுக்குப் பாதை புரியவில்லையோ?

# 2 இச்சை !

நாவித அம்மையப்பனின் சாம்பல் மேட்டுச் சேவல் கூவவில்லையென்ருல், பொழுது விடியாது; ஆமாம், விடியவே விடியாது!

பஞ்சவர்ணம் கண் விழித்தபோது, அசதி கண் உறங்கியிருந்தாற்போல ஓர் உணர்வு பரவி யிருந்தது. இனம் பகுத்துத் தெளிவு கண்டு கொள்ள முடியாத உள்ளக்களிப்பு ஊறிக்கொண்டிருந்ததையும் அவள் தெள்ளத் தெளியக் கண்டறிந்தாள். இன்பக் கனவொன் றைக் கண்டு துயில் கலைபவளைப் போன்ற நிலையில் இருந்த அவள், சடுதிக்குள், மனம் பேதலித்தாள். முல்லை மென் விரல்கள் அவளுடைய தாமரைக் கன்னங் களை அணைந்து, பிறகு அவை அந்தக் கோல விழிகள் இரண்டையும் விலக்கியபோது, மன அமைதியும் விலகி விட்டதாகவே அவளுக்குப் பட்டது. பட்ட மரக்கிளையாய் அவளது ஆசைக்கனவு நொறுங்கி விழுந்துவிட்ட மாதிரி அவள் தவியாய்த் தவித்தாள்.

கொதித்த நெஞ்சத்தின் தவிப்பு விழிவளையக் கரை களில் கொதிநீரைக் கொண்டுவந்தது. கண்ணீரில் மனச் சுமை இறங்கி விடுவது இயல்பு. ஆனல், அவளுக்கு அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படவில்லை. ஒன்றை நினைக் கப்போய், ஒன்று ஒன்பதாகக் கிளை வெடித்தது. முருங் கைப்போத்தின் ஒரு கிளையில் ஒன்பது கணுக்கள் முளைக் குமே, அப்படி. கண்களைத் துடைத்துக்கொண்டாள் அவள்; ஆனல், சுடுநீரைத் துடைத்துக்கொள்ளவில்லை.

சுற்றிச் சூழ நோக்கினாள். ஆலயத்தைச் சூழ்ந்திருக்கும் புனித மயமான அமைதியை அங்கே கண்டாள். ஆனால் அவள் தெய்வத்தைக் காணவில்லை.

தென்பாரிசமாகப் பக்கவாட்டில் தலையைத் திருப்பி விட்டாள் பஞ்சவர்ணம்.

வசமிழந்த வடிவத்தில், அலுங்காமல் நலுங்காமல் படுத்துக்கிடந்தான் கோலப்பன்; மல்லார்ந்து கிடந்தான். நெற்றிமேட்டின் தலைப்பில் கட்டுப்போடப்பட்டிருந்தது. சல்லாத் துணியின் வெளிப்புறப் பரப்பில் மஞ்சளும் ஆடாதுடைச்சாறும் கலந்து உருவான மஞ்சட் பச்சை நிறம் பரவியிருந்தது. முடிச்சுக் கிழிசல்களின் பிணைப்பு முனையில் ‘கெட்ட நீர்’ ஒட்டிப் படலாய்க் கனத்திருந்தது. தாழிடப்பட்டிருந்தன இமைக்கதவுகள். இதழ்பிரிக்கப் படாத போக்குடன், அரும்புகட்டிக் காணப்பட்டது மீசை. சவடால் இல்லாத வெள்ளை மனசு அவனுடையது என் பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது முக விலாசம்; உதயத்தின் முதற் சுடர் சிந்திச் சிதறி வந்து அவன் மேனியில் அணைந்தது.

திருப்பதி மரப்பாச்சியை கண்கொட்டாமல் பார்த் துக்கொண்டேயிருக்கும் பாலகிக்கு அடுத்தபடியாக ஆனாள் அவள். கோலப்பனின் கோல முகத்தை அழுத் தம் பதித்துப் பார்த்தாள் பஞ்சவர்ணம். ‘பாவம், தன் நெனைப்பு அத்துப்போய் கடுந் தூக்கமாத் தூங்குது இந்த ஆம்பளை. இது யாரு, எந்த ஊரு, ஏதுக்காக அந்தப் படுசுட்டிப் பயலுககிட்டப் போய் ஆப்புட்டது, ஏன் இதை அந்தத் தறுதலைங்க நையப்புடைச்சானுக... இங்கிற சங்கதிக்கெல்லாம் ஒரு தாக்கலும் மட்டுப்பட லையே? ராவு மணியக்கார ஐயா வந்து கேட்ட கேள்விங்

களுக்கு பொண்ணுப் பொறந்த என்னுலே ஒப்புக்குக்கூட ஒரு தகவலும் தர ஏலலேயே! அல்லாம் சீலேத் தலேப் பிலே முடிஞ்ச தாட்டம் கமுக்கமாயிருக்குதே?...

கன்றின் குரல் கனிந்து வந்தது.

பருவம் தப்பிக்காய்த்த ஊசி மிளகாயைக் கடித்த மாதிரி அவள் சுள்ளாப்புடன் எழுந்தாள்.

அடுத்த காலேவீசம் நாழிகையில் அவள் நல்ல மூச்சுப் பறித்தாள்: வாசல் முகப்புப் படலேத் திறந்து வைத்தாள் பஞ்சவர்ணம்.

அது சில்லுப்போன தகரம்; துரு ஏகமாய் மண்டி யிருந்தது. பழசு. "பஞ்சவர்ணம் டீ கடை" என்னும் எழுத்துக்கள், ஆவணம் கதீஜா பாட்டியின் தயவால் கிடைத்த சுண்ணும்பிஞல் தீற்றப்பட்டிருந்தன.

புலரிப் பொழுது.

இதோ, தேத்தண்ணீர்க்கடை ஆரம்பமாகிவிட்டது.

இனிமேல், பஞ்சவர்ணத்தை யாராலும் பிடிக்கமுடி யாது. ஏனென்ருல், அவள் யார் பிடிக்கும் அகப்பட மாட்டாள். வியாபார நேரம் தொடங்கி விட்டதென்ருல், அவளுக்குக் காரியத்தில்தான் கண். கண்களில் தீட்சண் யமும், கருத்தில் கவனமும் இருக்கும். 'லாவாரம்ஞ எனக்கு லாவாரம்தான். அப்பாலேதான் சொந்தம் சோவாரி அது இதுவெல்லாம். கையிலே மடியிலே நாலு காசு புழங்கிஞத்தானே நாளேப்பின்னேக்கு என்னே யும் பொண்ணுத் தோணும் எஞ்சாதி சனங்களுக்கு! இல்லாப்போஞ செத்த பொணத்துக்குக் கொடுக்கிற மரு வாதையைக்கூட, இந்தப் பட்டிக்காட்டிலே தர ஒப்பமாட் டாகளே?'

அவிந்த இட்டலித் தட்டுகளை ஆறு 'ஈடு' எடுத்து, நனைந்த துணிக்கிழிசலில் கொட்டினாள் அவள்; சின்னாத்தா சிறுமி. வயசு ஒன்பதுக்குமேல் தள்ளாது. சுட்டிப் பெண். அவளுக்கு எடுபிடி. சின்னாத்தா அகப்பையை அரிசி மாச்சட்டியில் இட்டு எடுத்து இட்டிலித் தட்டின் குழிகளில் ஊற்றிக்கொண்டிருந்தாள். பஞ்சவர்ணம் கேத்தலில் நெருப்பைத் தள்ளிவிட்டு ஊதினாள். கண்கள் எரிந்தன; நெருப்பும் எரிந்தது. தலையை விசையுடன் திருப்பினாள். "ஏடி, இன்னம் கொஞ்சம் தெரமாத்தான் ஊத்தேன். கையிலே தேளை வச்சுக்கிட்டிருக்கிற மாதிரிஏன் பயந்து சாகிறே? நான் எம்பிட்டு வாட்டி ஒனக்குப்படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கேன்,ஊராருங்க சல்லிக்காசுகூட நம்மளுக்கு வாணும்னு! அண்டை அசல வங்கபணம் அமைத்தா வருதின்னுக்க, ரொம்ப ரொம்ப எக்காளந்தான் வரும். ஆனா பின்னாடி, நெய்யா தின்னதுக்கு ரத்தமா வாயாலே எடுத்தாக வேணுமிங்கிற லவிதப் பேச்சை யாரு இந்தக் கலி காலத்திலே ரோசிக்கிறாக? ஊம்! என்று ஒரு மூச்சுப் பேசித் தீர்த்தாள்.

சின்னாயிக்குப் பயம் உண்டாயிற்று. ஒன்பது குழிகளிலும் இன்னும் கொஞ்சம் கொஞ்சம் மாவை ஊற்றினாள். அதன் மூலம், தனக்கு நேரவிருந்த பாவத்திலிருந்து மீண்டு, தன் அக்காவுக்குப் புண்ணியம் சேர்த்துக் கொடுத்ததாக ஓர் ஆறுதல் படர்ந்தது.

பஞ்சவர்ணம் சிரிப்பதில் எப்போதுமே கஞ்சத்தனம் காட்ட இசையாதவள். 'பொம்பளை சிரிச்சாப் போச்சு; போயிலை விரிச்சாப் போச்சின்னு சும்மாச்சுக்கின்னாலும் யாரோ துப்புக்கெட்டுச் சொல்லி வச்சாக்க, அதுக்காக, சிரிக்கப்புடாதா? ப்பூ...!'

ஆதித்த பகவானின் இளங் கிரணங்கள் முதுமை கொண்ட பாங்கில் சூடேறியபடி, கடையின் உட்பக்கக் கூடத்தில் தவழ்ந்தன.

"தங்கச்சியோ!"

"யாரு? டேடே! வா, தாத்தா!"

"சொகமா, பேத்தி?"

"சொகத்துக்கு என்ன கொறைச்சல்? பெத்த அப்பன், ஆத்தா மூஞ்சியைக் காணுறதுக்குப் பொசுப் பத்த கட்டையாகிப் பிட்டாலும், ஒங்கமாதிரி முடி வெளுத்தவங்க புண்ணியத்தாலே நல்லாத்தானுங்க இருக்கேன்."

"ம்...சரி; தாகத்துக்குக் குடுப்பீயா?"

"தாரேன், தாத்தா. பசியாறலையா?"

"பொழுது இல்லே. கம்மங்காட்டான் தாக்கிலே இன்னைக்கு நடவு. கோடை வெள்ளாமையிலே ரவை யுண்டு குந்தகம் வந்தாலும், நாம தரையிலே குந்திப்புட வேணும். அதாலேதான், சுடு தண்ணியை வாய்க்கு உணக்கையா ஊத்திக்கிட்டுப் பொடி நடையாப் பறிஞ்சா, அப்பாலே திரும்பு காலிலே இட்டலி தோசை தின்னிட்டாப் போவுது," என்றார் கிழவர்.

வெந்நீர்க் கேத்தலில் 'பதம்' பார்க்க, இடதுகை ஆள்காட்டி விரலை வைத்துப் பார்த்தாள் அவள். பிறகு, குறிஞ்சிப்பாடிக் குவளையில் வெந்நீரைப் பிடித்தாள்; தட்டுக் கரண்டியில் தேயிலைத் தூளைக் கொட்டினாள். கண் மூடிக் கண் திறந்தாள். "தாத்தா, இந்தா குடி."

பாட்டன் கை தங்கக் கை. ஆனால் வெள்ளிப் பணத்தைத்தான் நீட்டினார். சில்லறை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டினார்.

"அக்கா," என்று பிஞ்சுக் குரலொன்று அவளைத் தோள் தட்டிக் கூப்பிட்டது. திரும்பினாள். நின்ற சிறுமியைக் கண்டதும், காணாததைக் கண்டது போல அவ்வளவு மகிழ்ச்சியும், காணவேண்டியதையே கண்டு விட்டதில் அத்துணை ஆறுதலும் பெற்றாள். "குணவதி தங்கச்சியா? மணியக்கார ஐயா ஏந்திருச்சுப்புட்டாங்களா?" என்று வினவினாள்.

"ஆமா, அக்கா. வழக்கம்போல வெள்ளனவேதான் அப்பாரு ஏந்திருச்சிட்டாங்க. வளமையாக்குடுக்கிற அஞ்சு இட்டிலி இன்னைக்குக் காணாது. யாரோ நாலு மூணு ஆளுங்க விருந்தாடிக வந்திருக்காங்க. அதாலே கொஞ்சம் கூடுதலாத்தான் பலகாரம் வேணும்."

"எம்புட்டு ?"

"ரெண்டு கைவீச்சுக்கு தாங்க அக்கா!" என்று பதில் கொடுத்தாள் மணியக்காரரின் மகள். மூச்சின் இழையைத் தொடர்ந்து, "இப்பத்தான் நெனைப்பு வருது. ஆமா, நேத்திக்கு ராவு ஆத்தாளுக்குக் காப்புக் கட்டுறது நடந்து முடிஞ்சடியும், என்னமோ வம்பு தும்பு நடந்திச்சாம். ஒங்க பேருகூட அடிபட்டிச்சுதே? என்ன அக்கா, சங்கதி?" என்று பையக் கேட்டாள்.

பஞ்சவர்ணம் இந்த சில நாழிகைப் பொழுதாக ஏதோ ஒன்றை மறந்திருந்த செயல் அவளுக்குப் புலப் பட்டது. 'ஒங்க பேருகூட அடிபட்டிச்சுதே?' என்று குணவதி சொன்ன பேச்சை விரித்துப் பிரிக்க நாட்டம்

கொள்ளவில்லை அவளது பெண் மனம். 'பாவம், ஊருக்குப் புதுசா வந்த ஒரு இளசை அடாபுடியா நாலு ஆறு பேருங்க சுத்தி வளைச்சுக்கிட்டு அடிச்சுப் போட முனைஞ்சாக்கா, இந்தப் பஞ்சவர்ணம் குட்டி கையைக் கட்டிக்கிட்டு 'தன்னுனே' கொட்டு முழக்கத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டா நிப்பா? இல்லே கேக்கிறேன்!...'

உண்டான பணத்தை நீட்டிச் சென்றுள் சின்னப் பெண்.

உண்டாகிவிட்டிருந்த கிலேசத்தை மாற்றி மறைக்க வேண்டி, சந்துஷ்டியை வரவழைத்துக் கொள்ள வேண்டியவள் ஆனுள் பெரிய பெண். வியாபாரத்தை நோட்டம் பார்த்த கணக்கிலேயே நேர்வசமாக பார்வையைச் செலுத்தினுள். செலுத்தப்பட்ட காசு பணத்திற்கு மிச்சம் மீதியை எண்ணிக் கொடுத்த வாறே, அவள் உள்ளே பார்த்தாள். 'பொளுது நெடுக ஓடுது. இன்னமா மூக்குடி ஆளு அசதி தெளிஞ்சு கண்ணைத் தொறக்கலே?...ஐய, பாவம்!' அனுதாபக் குறிப்பு ஓடியது, காதளவோடிய கெண்டை விழிகளிலே மூக்குடியான் தோன்றினுன், பார்த்த முகத்தைப் பார்த்தாள். தெரிந்த முகம் தெரிந்தது. நயனமடல் களிலே ஊர்ந்த இளநகை, உதட்டுக் கங்கில் தீக்கங் காகச் சிவந்தது. ரோஜா இதழ்களைத் தாங்குவதால், காம்பும் இலைத்துணுக்கும் பெருமைப்படுவது சகஜம். அவள் முகமும் அப்படிப் பெருமைப்பட்டது, அப்படி மகிழ்ந்தது. அவள் பட்டிக்காட்டு ரோஜப்பூ!...

காக்கை உட்காரக் கண்டால், பொட்டைச் செம்மறி உடம்பைச் சிலுப்பிக் கொள்ளாதா? அவளும் அப்படியே இயங்கினுள்.

"பஞ்சு!" என்று ஒரு குரல் கேட்டது.

அவள் தலையை உயர்த்தினாள். "அட, நெருப்பா? வா, அண்ணாச்சி!" என்றாள்.

வந்தவன் எகத்தாளமாகப் புகை பிடித்துக் கொண்டே படிக்கட்டில் ஏறினான். சுருட்டின் தொங்கலி லிருந்த நெருப்பில் புகை புறப்பட்டது.

பஞ்சவர்ணம் நாசியைப் பொத்திக் கொண்டாள். "ஒங்களைத்தான்... இங்கிட்டாலே சத்த பாருங்க," என்றாள். "புகை பிடிக்கக்கூடாது!" என்று சாணித்தாள் கிழிசல் ஒன்று எச்சரிக்கையைச் சுமந்துகொண்டு, வாயு பகவானை 'தனது' பண்ணிச் சமாளிக்கவேண்டிய இக்கட் டில் தத்தளித்தது.

'நெருப்பு'க்குப் படிப்பு 'கோழி முட்டை.' பேந்தப் பேந்த விழித்தான்.

அவளுக்குத் 'தடம்' புரிந்தது. ஆகவே மெல்ல நடந்து, அந்த மனிதனின் வாயிலிருந்த சுருட்டைப் பிடித்து எடுத்துத் தூர வீசி எறிந்தாள். எரிந்த தீயுடன் வாசல் ஈரம் உறவு பூண்டது. 'நம்ம நாடு கொத்தடிமை நீங்கிப்பிடும், விடிமோச்சம் வந்துப்புடும்னு நம்ப பூவத்தக்குடி காங்கிரசு செட்டியாரு சதா கூட்ட நாட்டம் போட்டு பேசிக்கிட்டு வாராங்க. அவுங்க பேச்சுப்போல, அது வந்தாலும், இது ஒத்த ஆளுங்களுக்காச்சும் கண்ணு முழிப்பு வரும்!...'

கர்ப்ப ஓட்டத்தில் ஐந்தாறு தூற்றல் விழுவதுபோல, அவள் மனக்கொம்பிலிருந்து தொடர்பு இற்ற போக் குடன் 'இல்லாத பொல்லாத' நினைவுகள் உதிர்ந்தன.

காலம் ஊர்ந்தது.

அவள் ஊறவில்லை.

உருமப்பொழுது நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போதுதான் அவளுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வேறு யாராவது அவளைத் தொட்டுக் கிள்ளியிருந்தால், லேசில் விடுவாளா?—ஊஹூம், அந்தச் சம்பம்தான் அவளிடம் சாயாது. பசி வயிற்றைத் தொட்டுக் காட்டிய தால் அவள் சும்மா இருந்தாள். அவளுள் ஏற்பட்ட அந்தப் பசியின் உணர்வு, வேறொரு பசியின் வரலாற்றை அவளுக்கு ஞாபகப்படுத்தியது. விசுக்கென்று கல்லாப் பெட்டியை மூடினாள்; உள்ளே பாய்ந்து சென்றாள். கோலப்பன் துயில் கள்ளியின் மடியில் தலைவைத்தவாறு தான் இன்னமும் இருந்தான். கும்பகர்ணத் தூக்கமோ, என்னவோ?

பஞ்சவர்ணம் அடி தளர்ந்து நடந்து சென்றாள். கோலப்பன் படுத்திருந்த குறுந்திண்ணையை நெருங்கி னாள். முழந்தாளிட்டு அமர்ந்தாள். தளர்ந்திருந்த ரவிக்கை முடிச்சை இரு கைப்பெரு விரல்களும் முடிச்சுப் போட்டன. சேலை முந்தானையைக் கொய்து, வேர்வை நெற்றியைத் துடைத்தாள். கன்யாகுறிச்சி அழகு மஞ்சள் என்றால், கெட்டிச் சரக்கு; மஞ்சளின் புள்ளிகள் மயில்க்கண் புடவையில் ஒட்டியிருந்தன.

அண்ணாந்த பார்வை தப்பாமலேயே இன்னமும் அவன் கிடந்தான்.

"இம்...இந்தாப் பாருங்க!"

அவள் கைகளைக் கொட்டினாள்.

அவன் எழும்பினால்தானே?

"ஊஸ்...!" என்று சீழ்க்கை ஒலி கொடுத்தாள்.

அவன் உடம்பில் கடுகத்தனை சலனமாவது உண்டாக வேண்டுமே!

கடைசியில், ஏதோ ஒன்றை எண்ணி, எண்ணிய எண்ணத்தை வலுப்படுத்தியவளாக, தன் இரு கரங்களையும் பதனமாகத் தொட்டு அவனை எழுப்பினாள்.

'சூ, மந்திரக்காளி!' போட்டு, மூன்றே முக்கால் நாழிகை வசம் தப்பிக் கிடந்து, பின், கெடு முடிந்து துயில் நீங்குபவனைப்போல, கோலப்பன் எழுந்தான். கண்களைக் கசக்கிக்கொண்டு, விழித்து விழித்துப் பார்த்தான். சுற்று முற்றும் பார்த்தான். அப்புறந்தான், அவன் பஞ்சவர்ணத்தை ஏறிட்டு நோக்கலானான்.

"நான் இங்கணே எப்பிடி வந்தேன்?" என்று பெரிய கேள்வி ஒன்றைச் சிறிய கண்டத் தொனியில் சொடுக்கி விட்டான் அவன்.

அவளுக்குச் சிரிப்புப் பாதியும் 'சள்ளை' பாதியும் ஏற்பட்டது.

அவளுடைய இரண்டுங்கெட்ட மௌன நிலையில் அவனது தவிப்பு வளர்ந்தது. தவிப்பில் நடந்த கதையின் முன்கதைச் சுருக்கமும் சிறுகச் சிறுக நடைபழகத் தொடங்கியது. "என்னை அடிச்சுப் போட்டுப்புட்டு மறுகி ஓடின அந்தப் பயலுக யாரு, தெரியுமா ஒன...க்...கு?" என்று சினம் மூள வினவினான் அவன்.

"அதெல்லாம் மறுகாப் பார்த்துக்கிடுவோம். இப்பைக்கு எதையும் மண்டையிலே கொண்டுக்கிடாதீங்க. வாய் கொப்பளிச்சுப்பிட்டுக் குந்துங்க. ரெண்டு இட்டிலி புட்டுப் போட்டுக்கிட்டு, ஒரு லோட்டா சாயாத் தண்ணி ஊத்திக்கிடுங்க. இந்தாப் பாருங்க, இப்ப நான் செப்றதைக் காதிலே வாங்கிக்கிடுங்க. ஒங்க பகையாளி இனிமேலே எனக்கும் சென்ம விரோதிதான். இது ஆத்தா பேரிலே வச்ச ஆணையாட்டந்தான். என்னைப் பத்தி மனசுக்குள்ளாற நானே ஒசத்தியா நெனைச்சுக் கிட்டு, பதில் வெட்டாட்டம் நடக்கச் சம்மதிக்காதவ நான். ஒண்ணு சொல்றேனுங்க. நான் அன்புக்குத் தொண்டூழியம் செய்வேன். ஆனா அதிகாரம் படிச்சாக்க, அது யாராயிருந்தாலும் சரி, அவுகளுக்கு நானே அதிகாரி ஆகிப்புடுவேன். மனசை அலட்டிக்கிடாம இருங்க; சுண்ணும்பு கிள்ளிப் போடறதுக்குள்ளே சுருக்கண ஓடியாரேன்," என்று கூறிச்சென்றாள்.

கோலப்பனுக்கு களிப்பூறல். எரு பூசிய கட்டாந் தரையில் சிதறியிருந்த கோழி இறகுகளை எட்டி எடுத்தான். மூலிகைச் செடியின் முட்கள் சில அவன் பார்வையில் தைத்தன.

பஞ்சவர்ணம் 'மிஞ்சி' ஓசை காட்ட வந்தாள். இட்டிலி, துவையல், எண்ணெய் சகிதம் வந்தாள். "மூஞ்சி கழுவலே? . ம் . மூசு மூசுன்னு அல்லாத்தையும் செஞ்சு முடியுங்க!" என்று துரிதப்படுத்தினாள்.

அவன் முகம் கழுவிக்கொண்டு வந்தான். அவள் ஏந்தி நின்ற திருநீற்றைத் தொட்டு நெற்றியில் பூசினான். காலைப் பலகாரம் உச்சிப் பொழுதில் நடந் தேறியது, ஏப்பம் பறிந்தது. கையிலிருந்த இறகுகளைக் காட்டி 'சாடை' பேசினான்.

'ராத்திரி ஒங்களுக்குக் கோழிச் சூப்பி வச்சுக் குடுத்தேன். கண்டங் கத்தறி வேர் சொரசம் செஞ்சு தந்தேன். ம்...!" என்று பெருமூச்செறிந்தாள் அவள்.

அவனுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அவன் நிலையை 'இனம்' கண்ட அவள் நலியாமல் தலையை வேறுபுறம் திருப்பினாள். அப்போது, "ஊஷ்... ஊஷ்!" என்று சீட்டிச்சத்தம் தட்டியைப் பிய்த்துக்கொண்டு ஓடி வந்தது. கும்மி கொட்டும்போது பாதங்களை மாற்றி வைப்பதுபோலச் செய்தபடி, எதிர்ப்புறம் நோக்கினாள் அவள். மேனி துடித்தது; ரத்தம் சூடேறியது; தாழ்வாரத்தின் வரிசைக் கம்பு ஒன்றை உருவினாள்; கையில் அதனைத் தாங்கியவளாக, வெளியே வந்தாள். நிமிர்ந்து நின்றாள். அசல் தமிழச்சி போலவே தோன்றினாள். இளமையின் கவர்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

முன்தினம் திருநாள் மைதானத்தில் கோலப்பனை வளைத்து மடக்கிக்கொண்டு நையப்புடைத்த எதிரிகள், கடைக்குக் கீழ்ப்பக்கம் பிரிந்த ஒற்றையடிப்பாதை மருங்கில் கொன்றைக் கன்றுக்கடியில் வாட்டசாட்டமாகச் சுற்றி நின்றார்கள். சொல்லிவைத்த கதையாக, அவர்கள் அவ்வளவு பேர்களும் அவளை விழுங்கி விட்டுத்தான் மறுகாரியம் பார்க்கும் அர்த்தத்துடன் காட்சி தந்தார்கள்.

காலம் ஒரு கனவு

காலத்தின் முன்கதையோ ஒரு பொற்கனவு.

இன்பச் சுவையின் முத்திரை பெற்ற சம்பவங்கள் என்றாலோ, அவை மாசுபடாத பனங்கள்ளை அளவறிந்து சுவைப்பதற்குச் சமதை ஆகும்.

நிகழ்ச்சிகளில் அவலச் சுவை தெளிக்கப் பெற்றால் இதயத்திலும் துயரம் தெளிக்கப்படுகிறது.

இதுவே வாழ்வு!

பஞ்சவர்ணம் பதுமையானுள். காலம் எனும் கம்பங் கூத்தாடியின் கைப்பதுமையானுள். ஆகவே, அவளது மனம் சுழன்றது; மெய் சுழன்றது; எண்ணச் சுவையும் சுழன்றது. செய்நேர்த்தி இல்லாத களர் நிலமென அவள் காணப்பட்டாள்! 'நேத்து ராவு அய்யனர் குருதை வாசல் திட்டிலே எப்படிக்கொத்த தீவினை மூளயிருந்துச்சு! என்னமோ, என்னுேட அப்பன் ஆயி செஞ்ச புண்ணியந் தான் ஒருவாகிலே தப்பிக்க ஏலுச்சு. ம்... அப்பன் ஆயி மூஞ்சியைக் காணுறத்துக்குப் பொசுப்பு அத்துப்போனு லும், அவுங்க யாபகமானும் வருதே, அதுமட்டுக்கும் கெடும் பில்லே!... ம்...நெனைச்சாக்க, நெஞ்சுக்குருத்து உருகிப்பிடும் போலல்ல இருக்கு!... அந்த ஆம் பிள்ளைங்க சாடாப் பேரும் எம்மாந்தூரம் ஆட்டாசி பண்ணி, என்னைப் பாத்து எம்மாங்கொத்த கேள்வி கேட்டுப்பிட்டானுங்க? ...புறம்போக்கு இளசுக! ம்... வரட்டும், வரட்டும். எப்பவும் காத்து ஒரு திக்காலேவா அடிக்கும்?...ஊம்!'

நேசத்துடன் பசுவைக் கூப்பிட ஒரு கனைப்பு கனைக்கும் காளை.

கோலப்பன் கனைத்தான்!

அவர்களை நெருங்கிச் சென்ருள் பஞ்சவர்ணம். "மருவாதையாச் சொல்லிப்பிட்டேன். தேரோட்டம் கழிஞ்சு ஊர்ப்பஞ்சாயத்திலே ஒங்க அம்மாம் பேரு மான மும் ஆலாப்பறக்கிறதுக்குள்ளாற, இப்ப ஒரு பொம்பளை கைக்கு அலுவல் வச்சுப்புடாதீங்க. மூச்சுக் காட்டாமப் பறிங்க!" என்று எச்சரித்தாள்; பிறகு, ஏழெட்டுத்தரம் காறிக் காறித் துப்பினுள். எச்சல் அவர்கள் மேல் பட் டதோ, என்னவோ? தறுதலைகளின் ஆறு தலைகளும் ஆறுதல் பறிபோன முடிவுடன் மறைந்தன

பக்கத்துக் குடியிருப்பிலிருந்து உடுக்குச் சத்தம் மிதந்து வந்தது.

பஞ்சவர்ணத்துக்குக் கள்ளச்சிரிப்பு வந்தது. 'எம்பிட்டு எச்சி பட்டதுவே பெரும் புண்ணியம்னு நெனைச்சுத்தான் அந்த ஆறு சிங்கங்களும் அசிங்கமா நடந்துக்கிடாம நழுவிப்புட்டாங்க போலே! போவட்டும், போவட்டும். எனக்காகத் தவம் கெடக்குறவங்களுக்கு இந்த ஒரு மருவாதைகூடக் குடுக்கலேன்னா, நல்லாயிருக்குமா ?'

துணை வந்த அந்தப் புது முகத்தைப் பார்த்து நகை பயின்றாள் அவள். அவனையும் கூட்டிக்கொண்டு உள்ளே கூடத்தில் குந்தினாள். "ஒங்களை ஒண்ணு கேக்கிறேன். சவாப்புச் சொல்லுவீங்களா ?" என்று கேட்டாள்.

"சொல்லுறேனே!" என்று பச்சைப்பாலகன் போலத் தலையை உலுக்கினான்.

விஷம் தோயாத பார்வையையும், வெள்ளையான சிரிப்பையும், சோர்வு மாறாதிருந்த முகத்தையும் மறுமுறை எடைபோட்டுக் கணித்தபின், "ஒங்க கதையை எனக்கு முழுக்கச் சொல்லோணும்," என்று இச்சைப் பட்டவனிடம் கேட்பது போல் அவ்வளவு உரிமையுடன் உரைத்தாள்.

எங்கேயிருந்து புறப்பட்டு அத்தனை வேர்வைத் துளிகளும் அவன் முகத்தில் கூடாரம் போட்டுக்கொண்டனவோ? அவன் சாவதானமாக முறுவல் சிந்தினான். பிறகு, அடிமடியில் கட்டி வைத்திருந்த ஒரு துணிப் பொட்டலத்தை எடுத்து அவிழ்த்தான். தங்கத்தாலிச் சரடு ஒன்று பளபளவென்று மின்னியது. " இதான் பஞ்சவர்ணம் எங்கதை !..." என்று மறுமொழி ஏவினான் கோலப்பன் !

# 3 இதோ, கொடி மின்னல்!

விவு தெரிந்த காலத்தைத் தொடர்ந்து, பஞ்சவர்ணத்தைக் காலவினை மட்டும் தொடரவில்லை; அதிசயத் திருக்கூத்துக்களும்தான் தொடர்ந்து வந்திருக்கின்றன. அலுப்பின்சுமையை இறக்கிவைக்க எண்ணிய அவள், ஓய்வின் நிழலில் ஒதுங்க எத்தனம் செய்யும் வேளைகளிலெல்லாம்;அவளது நினைவின் நிழல்களே அவளுக்குப் புகல்.அளித்து வந்திருக்கின்றன. அப்பொழுதெல்லாம் அவளுக்கு மனத்தின் வலி குறைவதற்குப் பதிலாக, மண்டைஓட்டின் வலி வளரவே செய்தது.

'ஊம், எங்கதையே ஓவியமாத்தான் வாய்ச்சுக்கெடக்குது. நானு பொறந்த கதையை நெனைப்பேனு? இல்லே, இப்ப நடப்பிலே நானு எத்தி மிதிச்சுக்கிட்டு வார சங்கடங்களை மனசிலேருந்து வெலக்கியடிப்பேனு? அதுவும் பத்தாம, இந்தப் புது ஆம்பளை பூடகமாப் பேசி வார விடுகதைப் பேச்சைத்தான் கூட்டிவச்சுப் பாப்பேனு?... ஆத்தா மூத்தவளே! ராவு வந்தா, மம்மல் வருது. அது கணக்கொப்ப, இந்தப் பொண்ணுப் பொறந்த சென்மத்துக்கும் ஒரு நல்ல பாதையைத் தடம் காட்டப் புடாதாங் காட்டி? இந்த மட்டுக்கும் எங் குதிகாலிலே குத்தியிருக்கிற நெருஞ்சி முள்ளுகளோட உபாதையவே தாளுறத்துக்கு எனக்குச் செகல் இல்லாம திக்குமுக்காடிக்கிட்டு இருக்கிற நேரத்திலே, மேலே மேலே சோதனைகளை ஏவி என்னை முன்னடியான் சாமி சுடுகாட்டுப்புறத்தாலே வெந்து மடிஞ்சிட செஞ்சுப்புடாதே. ஊருக்குஒசந்தவளே,

குஞ்சுக்கிட்டவா தாய்க் கோழி கைவரிசையைக் காட்டுகிறது ?...இது ஒனக்கு அடுக்குமா ?...' என்று வாதனைப் பட்டாள் அவள்.

நேத்திரங்கள் சுடுநீரைக் காட்டின ; மனம் நினைவுகளைக் கொட்டின ; உந்திக்கமலம் வெய்துயிர்ப்புத் துளிகளை ஓட்டின. தாழ்ந்து எழும்பியது நெஞ்சம். தஞ்சம் அடைய அண்டிவந்த அமைதியின் கழலடிகளிலே அவள் பாதம் பதித்துக்கொண்டாள். நாலு சொடுக்குப் பொழுதுக்கு முந்தி கோலப்பன் கோலநகை சிந்தி, கோலம் நிறைந்த தங்கத் தாலிச் சரட்டை ஏந்தி, பின் கதையை மிச்சம் வைத்து, முன்கதை ஒன்றைக் கோடிட்டுக் காட்டிய நிகழ்ச்சி அவள் முன்னே பதம் பிடித்துக் காட்டியது. 'இதான் பஞ்சவர்ணம் எங்கதை!' என்று சொன்ன வாய்மொழியின் வாய்மையை உணர வகை புரியாமல், ஊமைக் கனு கண்டவள்போல அவள் வெந்து நொந்து மனம்மறுகி நின்றாள். மப்பு மந்தாரம் போடத் தலைப்பட்ட வானம் அவளது முகத்திற்கு இடம் மாற்றிக் கொண்டது, முகில் அணை நிலவானாள் அவள்.

கோலப்பனின் கைப்பிடிப்பிலே ஊசலாடிய மங்கலச் சரடு அவளுக்கு உடைமை கொண்ட உயிரை ஊசலாட வைத்தது.

"இந்தாப் பாருங்க !..."

"ஊம் !"

"சாடைகாட்டி, இதான் எங்கதையின்னு, தோதுப் பட்டுப் போயிடுமாங்காட்டி ?"

"போவாது !"

"பின்னே?..."

"பின்னே என்னவாம்?..."

"கதை முச்சூடையும் ஒரே மூச்சிலே புட்டு வச்சாத் தானுங்களே பொண்ணுப் பொறந்தவ நானு அத்துபடி பண்ணிப் புரிஞ்சுக்கிட ஏலும்?"

"மெய்தான், பஞ்சவர்ணம்!"

"அப்படின்னு, ஒங்க கதை சாடாவையும் ஒடைச்சு வச்சுப்புடுங்க நீங்க!..."

"ஆவட்டும்!" என்று கோலப்பன் விடை பொழிந்த நேரத்தில், வாசற்புறத்தே குரலொன்று குறுக்கிட்டு ஓட்டம் பிடித்து வந்து நின்றது.

பஞ்சவர்ணம் வாசலில் வந்து நின்றுள். கால் கொலுசில் பின்னி இழுத்த சுங்கடியின் முகதலேவை விடுவித்தபடி, பார்வைக்கு அழுத்தம் சேர்த்தாள்.

ஊர்த்தலேயாரி பதவிசுடன் நின்றுன்!

"கும்பிடுறேன் ஆத்தா!"

"முனியனு?... இந்தாலே பாரு, நீ எனக்கு மூத்த ஆளு. கும்புட கை ஒசத்தப்புடாது. மேலுக்குச் சொகமா இருக்கியா? என்னு சேதி, இப்பிடி இங்கிட்டு நாடிப் பறிஞ்சாந்திருக்கே? பட்டாமணிய ஐயா ஊருக்குள்ளாறத் தானே இருக்காவ?"

"எசமான் இப்பைக்கு வெளியே தெருவே நாட மாட்டாங்க. நாளேக்கு மைக்கா நாளு அவுக மண்டகப்படி யாச்சே, தாயி?...ம்...வந்து...ஒங்க காதிலே ஒரு தாக்கலே விழுக்காட்டச் சொன்னுக!"

"சொல்லு!" என்று அவள் சொல்லிக்கொண்டிருந்த பொழுது, கோலப்பன் தேநீர்க்கடையின் முகப்புப் படிக் கட்டில் வந்து நின்றான்.

அவனை ஒரு திருப்பம், திருந்திய பார்வை வீசிப் பார்த்து நின்றான் தலையாரி. பிறகு, இரண்டு தப்படி பஞ்சவர்ணத்தின் வசமாக நகர்ந்து நின்ற வண்ணம், "ஆயி, இந்த ஆளை அடிச்சுப்போட்டதுக்காக மொதலாளிகிட்ட புகார் வச்சீங்கல்ல, அது விசயமாய்ப் பேசறத்துக்கு ஒங்களை கையோட அவுக அழைச்சுக் கிட்டு வரச் சொன்னாங்க!" என்றுதெரிவித்தான்.

அவளது கனிஇதழ்களின் கங்கில் கனிவின் மலர்ச்சி தடம் பதித்தது. "ரொம்ப தங்கமாப் போச்சுப்பா. இந்தாலே, எச்சி துப்பி காயிறத்துக்குள்ளே பறந்து வந்துப்புடுறேன். இம்மாம் பொழுதுக்கும் பசியாறல்லே," என்று நல்லதனமாகச் செய்தியைத் தூது அனுப்பி வைத்தாள் அவள். 'பொட்டுப் பொழுதுக்கு முன்னாடி நானு கமுக்கமா நேந்துக்கிட்டது ஆயி காதுக்கு எட்டி யிருக்கும்போல. என் விசயத்திலே எட்டியிருக்கல்லே தான் ஆத்தா ஒசந்தவ!' அவள் வாய் கொள்ளாமல் தன்னுள்ளே சிரித்துக்கொண்டாள்!

ஆவணத்தாங்கோட்டைக்கு வாய்த்த நல்லதிர்ஷ் டங்கள் ஒன்றிரண்டு உண்டென்றால், அவற்றின் தலை விதியை உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தவர் அவ்வூர் மணியக்காரர்தான். பட்டாமணியம் ஆவுடை யப்ப அம்பலகாரர் என்றால், எட்டுக்கண் விட்டெரியும்.

கொடிகட்டி வாழ்ந்த பாரம்பரியத்தின் முத்திரையை அவரது அமுதச் சிரிப்பில், அன்பு மொழியில் காண முடியும். அவருக்குக் கிடைத்த சைகோன் சொத்து.

பிறந்த மண்ணில் புழுதியை எழுப்பவில்லை; புகழை எழுப்பியது. அவர் பாடுபட்டு தேயிலைத் தோட்டத்தில் கங்காணியாக அலுவல் பார்த்து உழைத்துச் சேகரம் செய்த நிதி அநீதியை அளிக்கவில்லை; நீதியை அளித்தது. அவருக்கு உண்டாகியிருந்த பெரிய மனிதத் தனம், சுற்றுவட்டம் பதினெட்டு வட்டங்களுக்குள்ளாக திருவுளச்சீட்டின் மூலம் நிர்ணயிக்கப்பெற்ற ஆறுகரைத் தலைக்கட்டுக்களுக்குத் தலைமை ஏற்கவல்ல ஊருக்கு உயர்ந்த பதவியை அருளியது. அவர் மனத்தில் ஊர் மக்கள் வாழ்ந்தார்கள். ஆகவே, அவர் அவ்வூர் குடி ஜனங்களின் உள்ளங்களிலே வாழலானார்.

அம்பலகாரரைப் பற்றி இன்னொன்றையும் சொல்லி விட வேண்டும். மனிதர் மிகவும் கண்டிப்பான ஆசாமி. திருகுகள்ளியை வாங்கரிவாளால் லாந்திச் சீவி வீசுவதைப் போன்று கச்சிதமாகப் பேசுவார்; கச்சிதமாக நடப்பார். 'ஆத்தாடியோ! அம்பலகார அய்யாவுக்கு சொல் பேச்சு தடம் மாறினா, கெட்டாப்பிலே கோவம் உண்டான வந்திப்புடுமே! அவருகிட்ட பழகிறதும் தீ கிட்டாலே பழகுறதுவும் சமந்தானுக்கும். நெருப்பை யாச்சும் ஊதி அணைச்சுப்புடலாம். இவரு கோவத்தை ஊதி அணைக்கவே முடியாதே!' என்று தலையாரி அடிக்கடி பாடம் ஒப்புவிப்பான்.

தலையாரி தலை முண்டாசுத் துணியை அவிழ்த்துக் கட்கத்தில் திணித்துக்கொண்டு வாய் பொத்தியவாறு அந்தச் சீமை ஓட்டு வீட்டின் தலைவாசலை மிதித்து நின்றான்.

அப்பொழுது, சொல்லிக் கூப்பிட்ட மாதிரியாக, அம்பலகாரர் வாசலில் தலையைக் காட்டினார். குமிழ்

பறித்த வெற்றிலைச் சாற்றைக் கூட்டிக் குதப்பி, வலது கையின் இருவிரல் இடுவலில் வழியனுப்பினார். "என்னடா ஆச்சு?" என்று அதிகார தோரணையில் வினவிடுத்தார்.

"இப்ப வந்திடுமுங்க அந்தப் பொண்ணு!"

"சரி. நீ போயி, சாம்பான் தாக்கு தொளி உழவுக்கு ஏற்பாடு பண்ணு. உச்சி கழிஞ்சு, ரெண்டு சோத்துப் பறுக்கையை அள்ளிப் போட்டுக்கிட்டு வாரேன்," என்றார் அவர். காற்றில் பறக்க முனைந்த கட்டுக் குடுமியின் முடி இழைகளைக் கோதிவிட்டு முடிந்துகொண்டார். திடீரென்று மப்பு கலைந்தது. வெயில் சுள்ளாப்பாய் எரித்தது.

"கங்காணி அய்யாவுக்குக் கும்பிடுறேனுங்க," என்ற குரல் கேட்டது.

அம்பலகாரர் திசை மாறினார்.

குவிந்த பூங்கரங்களுடனும், குவியாத செவ்விதழ் மூரல் நகையுடனும் பஞ்சவர்ணம் நின்று கொண்டிருந்தாள்.

"வாம்மா!"

கிழக்கு மேற்காக இருந்த முற்றத்தில் தென்புறம் கிடந்த நார்க்கட்டிலில் அவர் குந்தினார். அவள் அவரது பாதத்தை ஒட்டி அமர்ந்தாள்.

"தாகத்துக்கு மோருத்தண்ணி வேணுமா?"

"வேண்டாமுங்க. இப்ப ஒங்க தயவுதாங்க வேணும்?"

"இப்ப மட்டுந்தானு ?"

"இல்லீங்க... இல்லீங்க... எப்பவுந்தான்!" என்று சொல்லி, நகத்தைக் கடித்துக்கொண்டாள் அவள்.

முத்தொளிர் பாலைச் சிரிப்பில், முத்துப்பற்கள் மட்டுந்தானு பளிச்சிடும்? துல்லிய மனமும் அல்லவா பளிச்சிடுகிறது? அவளது லாவண்யமும் லாகவமும் ஓங்கி வளர்ந்தன. சேலை முந்தானையை இழுத்து விட்டுக்கொண்டு, அவரை ஆழிய பார்வை கொண்டு தயவுடன் நோக்கினுள்.

"பஞ்சவர்ணம்!...

"ஐயாவே!"

"இப்ப என்னை நீ என்ன செய்ய வேணும்னு ரோசிக்கிறே?... ஊருக்கு ஊடாலே வம்பு தும்பு வச்சுக் கிட ஒப்பி, நீ நம்ப ஊர் இளசுக பேரிலே தாவா தொடுத் திருக்கே. எங் கடமையைச் செம்மைப்பட செஞ்சுப் பிடுவேன். அட்டியில்லே. ஆனு, நாளைப்பின்னைக்கு, இம்மாங்கொத்த நடப்பினுலே, ஒனக்கு தீம்பு வராமத் தப்பாதே, ஆயி?...அந்தச்சுருட்டை முடிக்காரப் புள்ளைக் கும் தீவட்டிக் கொள்ளைக் காரனுகளுக்கும் சமதையான போக்கு ஆச்சுதே?... அதுச்சரி. இந்தப் புதுப்புள்ளை... அதான்... கோலப்பன் ஒனக்கு வேண்டியவனு? சொந்தம் சோபாரியா?...இல்லே...?" என்று அத்துடன் உரையாடலைத் துண்டித்து, எதையோ ஒரு விவரத்தை உட்கருத்தாக்கி அறிய விரும்பும் நிலையில் தயங்கினுர் மணியகாரர்.

பஞ்சவர்ணம் சூட்சுமம் புரிந்தவள்; விதரணை பழகியவள். அவளுடைய தோழி கோவிந்தம்மா சொல்லு வாள், "ஏலே பஞ்சவர்ணம், நீ பொண்ணிலேயும் பொண்ணு கடைஞ்செடுத்த குட்டியாக்கும்!" என்று. அவள் வாய்க்குக் குழைவு சர்க்கரையைத்தான் போட வேண்டும்.

பெரியவரின் கேள்விக்கு அவள் பதில் சொல்ல வேண்டும். 'எடக்குமுடக்காக் கேட்டுப்புட்டாங்களே? என்ன சொல்லட்டும்?...' நெஞ்சின் அலைகளில் நினைவின் அலைகள் முயங்கின. செழிப்பும் சிருங்காரமு மாகக் காட்சி தந்த கோலப்பனை கண்ணின் கருமணி களுக்கிடையில் வைத்து மனக்கண்ணால் பார்த்தாள். இனம் புரியாத மகிழ்வும் இனம் புரிந்த சாந்தியும் ஏறின, ஏற்றம் புரிந்தன.

"பஞ்சவர்ணம்!..."

"வந்துங்க எனக்குங்க 'அதை' மனசுக்குப் புடிச் சிருக்குங்க!"

"அப்பிடியா. சந்தோசம். அவனைப் பத்திய விருத்தாந் தத்தை நீ அறிஞ்சுக்கிட்டியா?"

அவள் தடுமாறினாள். 'கேட்டப்பவே, பொத்திப் பொத்திப் பேசிச்சே 'அது?...' பிறகு, "ஆமாமுங்க!" என்று கூறிவிட்டாள்.

அதுதருணம், அங்கே வந்து நுழைந்த வளையற் காரக் கிழவர், "என்னத்தைப் பஞ்சவர்ணம் புரிஞ்சுக் கிட்டே நீ?...அந்த கோலப்பன் படுசுட்டி ஆளாம்!... தில்லுமுல்லு செஞ்சி கம்பி எண்ணினவனும்!"... என்று பதற்றமும் கவலையும் கலந்த குரலில் சொன்னார்.

மெய் விதிர்க்க, நிலைகுத்திப்போனாள் பஞ்சவர்ணம். வானத்துக் கொடி மின்னல் அவளுடைய நெஞ்சில் கொடி பின்னிப் பாய்ந்தது: 'அப்படின்னாக்க, அந்தப் பாவி மனுசன் காண்பிச்ச அந்தப் பொன்னு தாலிச் சரடு கூட உருட்டுப் புரட்டுச் சொத்துத்தானா?...மெய்யாலுமே நான் மோசம் போயிட்டேனா?...'

வீசம் நாழி கழிந்தது. பின்னர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளைப்போல, "ஐயா! எம்மனசு கண்ட கனவுக்கு தட்டுமறிச்சாப்பிலே நடக்க வாய்க்காதுங்க. எது எப்படியிருந்தாலும் அந்த மச்சாந்தான் எனக்குச் சகலமும்!" என்று தீர்ப்பு வழங்கினாள்!

# 4 மனக் கங்கு

பஞ்சவர்ணம், மணியக்காரர் வீட்டை விட்டு விரைவு பாய்ச்சி வெளியேறியபோது, காதளவு ஓடியிருந்த கயல் விழிகள் நீர் பாய்ச்சின. நெற்றியைக் கேசச்சுருள் மறைத்ததுபோன்று, நினைவைக் கோலப்பன் காட்டிய சரடு மறைத்தது. வழித் தடத்தை விலக்கிக் கிடந்த சாம்பான் குட்டையைப் போல, நெஞ்சுத் தடத்தி னின்றும் விலகிக் கிடக்கவில்லை அந்தப் புது மனிதனின் நினைவு முகம். பூவத்தக்குடி ஒற்றையடிப்பாதை, காளி யம்மன் காவுத் திடல், வியாழச் சந்தை, காயாம்பூ தேவர் தென்னந் தோப்பு, செட்டியார் பெட்டிக்கடை முதலிய ஊர்ப்பகுதிகளைக் கடந்து நடந்தாள் அவள். பேதைமைப் பண்பின் உணர்ச்சிச் சுழிப்பில் அப்போது அவள் மனம் கட்டுண்டிருந்ததால், நயனங்கள் மூச்சுக்கு மூச்சு கலங்கிக்கொண்டு வந்தன; நெஞ்சு முட்டி வெடித்துக் கொண்டு வந்த நெடுமூச்சு, கட்டுவிடாமல் விம்மிப் புடைத்த மார்பகத்தை எம்பித் தணியச் செய்தது. 'ஏதுக்கு எம் மனசான மனசு இம்மாங்கொத்த வகையிலே மாயம் புரியாமத் தவிக்குது? நான் செஞ்சது தப்பா? பாவம், அந்த ஆம்பளைக்கு ஒரு குந்தகம் வாரா தின்னுக்க, எனக்கு ஒப்பலே. அதாலேதான், மணியக்கார ஐயாகிட்டவும் அப்பிடி நறுக்குத் தெறிச்சதாட்டம் சங்கதியை ஒடைச்சு வச்சுப்புட்டேன். புண்ணைப் போத்திப் போத்தியா மூடஏலும்? ம்...எனக்கு வாக்குக் குடுத்தாப்பிலே, வார கிழமை தேரோட்டம் கழிஞ்ச கையோட, ஊர்ப் பஞ்சாயத்து கூட்டத்தான் போறுங்க. அப்பாலே நியாயமும் கெடைக்கத்தான் போவுது,

அதுக்கும் அப்பாலே...அப்பாலே... ஊருக்கு ஒசந்தவங்கன்னு தம்பட்டம் அடிச்சுக்கிட்டுத் திரிகிற அந்தச் சுருட்டை முடிக்காரன், அந்தக் கோணவகிடுக் குள்ளன், வீரப்பன், கோவிந்தன் அல்லார் விரோதத்துக்கும் ஆளாகத்தான் போறேன்; எம்பிட்டு நெஞ்சிலேயும் நெனப்பிலேயும் நிலேச்சு நிக்கிற இந்தப் புது மச்சான் நல்ல ஆம்பளேயா இருந்திட்டாக்க, மத்தப்படி எந்தத் தீவினே என்னைச் சோதிச்சாக்கூட, குத்தமில்லே!...ஆனுஇந்த மச்சான் நல்ல ஆளாவே இருந்திடச் செய்யப்புடாதா, ஆத்தா? வளேயல்கார ஐயா சொன்னதுக்கு நேரா எந்த ஒரு இடுசாமமும் நேராம இருக்கவேணுமே, சாமி!...'

புரண்ட எண்ணங்களிலே இதயம் புரள, உருண்ட நினேவுகளிலே ஊன் உருள, உயர்ந்த உள்ளத்துடன் தானும் உயர்ந்து, வளர்ந்த கனவில் தானும் வளர்ந்து, வாழ்ந்த நேசத்திற்கு வாழ்த்துக்கூறிய நிலேயுடன் அவள் நடைபயின்று நின்ற நேரத்தில், அவளுக்குரிய தேநீர்க்கடை அவளது பாதச் சுழியில் இலக்குக் குறித்தது.

இரணியவேளே நெருக்கத்தில் இருந்தது.

அசந்து உறங்கிக் கொண்டிருந்த கோலப்பன் அசைந்து கொடுத்தான். குறட்டை ஒலி அருட்டியது. அவனே நுனி விரல் தொட்டு எழுப்பிஞள் அவள். அவள் தன்னேயும் அறியாமல் சோற்றுக்கை விரல்களே 'நட்டுவக்காளி' தீண்டிஞற்போல உதறிஞள். உள்ளம் தீண்டியவனேத் தொட்ட உணர்வு தொட்டுக் காட்டிய குளிர் நடுக்கமோ, என்னவோ?...

கோலப்பன் தீயை மிதித்தவனேப் போன்று வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

அவள் அவனை உன்னிப்புடன் நோக்கினாள். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தவன், எதை வாரிச்சுருட்டிக் கொண்டு வந்தான் என்ற ஊகம் செய்ய அப்படிப் பார்த் தாளா? இல்லை; வாரிச் சுருட்டிக்கொண்டு வந்ததை வாரிச் சுருட்டிக்கொண்டு போகப்போகிறானோ என்ற கணிப்புக்குத் தடயம் காணவேண்டுமென்கிற தவிப்பில் அவ்வாறு பார்த்தாளா?

"என்னா பஞ்சவர்ணம், போன காரியம் என்னாச்சு?" என்று உரிமை ஓங்கிய குரலில் கேட்டான் அவன்.

"தோதுபோலமுடிஞ்சிருச்சுது!" என்று சுரத்து தணிந்த தொனியில் பதில் சொன்னாள் அவள்.

"உம் பேச்சு ஒரு தினுசா யிருக்கே?"

"ஒங்க போக்கு ஒரு மாதிரி போகுதுங்களே?

அவனுடைய நோக்கு அவளை எடை போட்டது. அவளது நோக்கம் அவனை எடை போட்டது. எடை களின் நிறுவை தட்டுத்தடுமாறியது போலவே, அவர்கள் இருவரின் பார்வைகளும் ஆடின; ஆட்டம் கண்டன.

குனிந்த தலையை நிமிர்த்தாமலேயே விசுப் பலகையில் குந்தியிருந்தான் கோலப்பன். இடது கால் முழந்தண்டில் அவன் தலை முட்டுக்கொடுத்துக் கிடந்தது.

"இந்தாப்பாருங்க. ஒங்க மூஞ்சியை நல்லா நிமிர்த்தி எம் மூஞ்சியைப் பாருங்க. நம்ப ரெண்டு பேர் மூஞ்சிக்கும் மூஞ்சிக்கும் ஊடாலே படுதாத்துணி விழுகப் பார்க்குது நம்ப ரெண்டு பேர் மூச்சுக்கும் மூச்சுக்கும் நடுவிலே மண்டையெழுத்து சதி செய்யப் பார்க்குது. இம்மாங் கொத்த வேளையிலே, எனக்கு உண்டாகியிருக்கிற இடுசாமங்கள் ஒண்ணு ரெண்டு இல்லே; என்னைச் சுத்தி

அலேகிற தீவினைகளை விரல் மடக்கி எண்ணிப்பிட வாய்க்காது. எல்லாத்துக்கும் காரணம் நானேதான் என்கிறதை நான் எப்பவும் மறைக்கவோ, மறக்கவோ முனைஞ்சது கெடையாது. அது கணக்கிலே, இப்பைக்கு உண்டாகி யிருக்கிற என்னோட இந்த நெலேமைக்கு நீங்களும் ஒரு வகையிலே மூலவேர் பாய்ச்சி நிக்கிறீங்க என்கிறதை நீங்க இனிமேயும் நெனைச்சுப் பார்க்காம இருந்தாக்க, பொண்ணாப் பொறந்த நானு நடுச்சாமம் கண்டு நாக்கைப் புடுங்கிச் செத்து மடிய வேண்டியது தான்!...”

பனிப்படலத்திற்குள் சிரித்தாடும் ரோஜாப்பூக்கள், காலே இளம் பரிதிக்கு முன்னே அசைந்தாடும் மெல்லிய பூங்காற்றைக் கண்டு பனி முத்துக்களை உதிர்த்துச் சிலிர்ப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அப்படித்தான் பஞ்சவர்ணம் நீருகுத்தாள்: கண்ணீர் உதிர்த்தாள்.

அவள் வடித்த கண்ணீரின் கரையிலே அவன் ஒளித்த கறை கரைந்ததா?–அவன் தவறு இழைத்தவன் மாதிரி, ஒரு கணம் தலேமுடியைப் பிய்த்துக்கொண்டான்; கைகளைப் பிசைந்தான். குறுக்கும் மறுக்கும் காலடி பாவி நடந்தான். பிறகு, நீர் கொழித்த தன்முகத்தை அவள் அருகில் நகர்த்திக்கொண்டு கூறினன்:

“இந்தாப்பாரு, ஒன்னைத்தான். மொதலிலே எனக்கு என்ன புரியிதுன்னு, நீ என்னைச் சுத்தமா நம்பலேங் கிறது புரியுது; நெஞ்சை ஒளிச்சு வஞ்சகமில்லேன்னு ஒரு பேச்சு ஊடாடும் நம்ம நாட்டுப் பக்கத்திலே. அதொப்ப, நான் ஒங்கிட்ட எந்த ஒரு ரகசியத்தையும் பொத்தி மூடல்லே. ஆனா, ஒம் மனசான மனசை கவ்வல் கம்பாலே மாட்டை நெருக்கி விரட்டிருப்பிலே, யாரோ

வெரட்டி வேடிக்கை பார்க்கிறுங்க. அப்பவே சொல்லோணும்னு ரோசிச்சேன். எனக்கு ஒரு சம்சயம் தட்டுது; இதுவேதான் ஒம் மனசுக்கும் சம்சயம் தட்டிக் காட்டியிருக்கவேணும். நான் ஒங்கிட்ட காட்டின தங்கத் தாலிச் சரட்டிலே சூது ஒண்ணும் கண்ணுமூச்சி காட்டலே; நான் ஒன்னோட மனசுக்குள்ளே ஒளிஞ்சு விளையாடறதுக்குப் பாதுகாவல் இருக்க வேணுமிங்கிறதுக்காகத்தான் இதை ஒனக்கின்னு செஞ்சுகொண்டாந்தேன். பூடகமாச் சொல்லி ஒனக்கு விளையாட்டுக் காட்ட ஆசைப்பட்டேன்; அதுக்குள்ள, எம்பிட்டு வேடிக்கை என்னையே ஆட்டிப் படைச்சிடும்போலயிருக்குதே?..."

மூக்குடியில் தனக்கிருந்த குடிக்காணியாட்சிப் பாத்யதை பூண்ட நானூறு குழி நஞ்சை, நாலு தாக்கு புஞ்சைத் திடல், ஏழெட்டு புளியமரங்கள்—இவைபற்றியும் கூறினான். கைவசம் இருந்த காசு பணத்தைக் குறித்தும் சொன்னான். போதாதா?...

கோலப்பன், கழுத்தைச் சுற்றிக்கிடந்த துவாலேயை எடுத்து முகத்தைத் துடைத்தான். சிவப்புப் படர்ந்திருந்த விழிகளைக்கொண்டு, அந்தப் பட்டிக்காட்டுப் பாவையைப் பதுமையாக்கிப் பார்த்தான். பதுமையைப் பார்த்தவன், பதுமையாகிப் போனான். மைத் தடங்கண்களில் தத்தளித்த சுடு வெள்ளம்தான் அவனை அவ்வாறு தத்தளிக்கச் செய்திருக்கவேண்டும்!...

"இந்தாங்க!..."

"சொல்லுவேன் ...!"

"நீங்க இப்ப சொன்னது ஒட்டுக்கும் ஓட்டை ஒடைசல் இல்லாத சங்கதிதானுங்களே?"

"ஆத்தா ஆணையான தாக்கல்தான்...!"

'ஆணை' வைத்துப் பதிலிறுத்த அவன் வாய்மொழி தேய்வதற்குள், அங்கு ஓர் ஆள் வந்தான். அவன் முத்தையன் வீட்டுப் பண்ணையாள்! அவனைக் கண்டதும்,கால்கள் பின்ன, வாசலுக்கு ஓடி வந்தாள் அவள். "என்ன காத்தா?" என்றாள்.

"எங்க மொதலாளித் தம்பி ஒங்கிட்ட வச்சுக்கிட்டிருந்த நேசத்துக்கு ஒப்புதலையாட்டம் குடுத்து வச்சிருந்த கொரநாட்டுக் கண்டாங்கிச் சீலை, காஞ்சீவரம் பட்டு ரவிக்கைத் துண்டு, புட்டாமாவு தகரம் அது இது எல்லாத்தையும் இப்பவே கையோட வாங்கியாரச் சொன்னிச்சு!" என்று விளக்கினான் அவன். வாசல்தான் நிலைப்பு!

தன் முதுகுப் புறத்தே மூச்சுக் காற்று பட்டு விலகுவதை உணர்ந்த அவள், பின்பக்கம் அலட்சியமாகப் பார்த்தபடி, காத்தானை நோக்கி, "நீ ஒப்பிக்கிற சாமான் சட்டு எதொண்ணும் என் வசம் இல்லேன்னு போய்ச் சொல்லிப்பிடு!" என்று முடிவு சொன்னாள்.

"மெய்யாலுமா தங்கச்சி?"

"ஐயோ, பாவம்!... பொய்யோடவே சதா அல்லும் பகல் அறுவது நாழியும் பழகிறதாலே ஒனக்கு நெசம்-பொய்யைக்கூட இனம் கண்டுக்கிட ஓடலேபோலே. தங்கச்சி-அக்கா சொந்தம் கொண்டாடுறத்துக்குத் அப்பாலே வா. வாய்க்கு உணக்கை வாரமாதிரி சுக்குக் காப்பியை திறமாப் போட்டு கொட்டாச்சியிலே தாரேன். இப்ப நீ எனக்கு அந்நியம் அசலாட்டம்...! ஓடிப்பிடு!..." என்று விரட்டினாள்.

குதிரில் தீ வைத்து, தீப்பொறிகளில் வாணப் பொறிகள் வண்ணம் பெற்று வானம் உயர எழும்பும்

போது, அந்தமாய்த்தான் இருக்கும். ஆனால், குதிர்ப் பொறி ஒன்று மேனியில் பட்டாலல்லவா அதன் உண்மை உள்ளம் புலன் தெளிய முடியும்? 'ஆத்தாடி!... பூச் சாண்டிப் பயம் காட்டுதே புள்ளே ?' என்ற எண்ணத்தை முறுக்கி வீசிவிட்டு, 'கட்டேலே கதி' என்று ஓட்டம் பிடித் தான் காத்தான். ஊர் காக்கும் பத்திரகாளியின் உச்சா டனம் பெற்ற முகத்தைக் கண்ட பாவனையில், அவன் ஓடலானான்!

பஞ்சவர்ணம் நெஞ்சில் திமிர்கொழிக்க, நேர்வண் ணப் பார்வையில் நேர்மை செழிக்க, பாளைவெடித்த பக்குவமாய்ச் சிரித்தாள். அவள் தொங்கல் தொடுசு இல்லாமல் சிரித்த சிரிப்பின் லாவண்யத்தைப் பார்த்துப் பரவசமடைந்தான் அவன். ஆனால் அதே பரவசம், கண்மூடிக் கண் திறப்பதற்குள், இருந்த இடம் தெரியா மல் மறைந்தது. 'இது என்ன புத்தம் புதுசான தில்லு முல்லுப் போக்கு! சுத்த போக்கணங்கெட்ட நடத்தையா யிருக்குதே?..."

தொண்டைக்குழியை வேலி கட்டி, ஆயிரம் பதினா யிரம் எண்ணங்கள் கூத்தாடலாம். ஆனால், இதழ்சேர்ந்து இதழ்விலக்கி அவற்றின் உண்மை அறிந்து, உள்ளம் தெரிந்து எடைபோட்டு முடிவுகட்டிச் சொல்வதில்தானே அவரவர்களின் வல்லமை தெரிகிறது?

கோலப்பனுக்கு வாய் ஊறியது. அவளை எதிர்க் கேள்வி கேட்டால்தான் நல்ல மூச்சுக் கிளம்பும் என்று ஒரு துடிப்பு. ஆனால் துடிப்பு உண்டான அளவுக்கு, துணிச்சல் உண்டாகக் காணோம்!

"சரி, போய்க் குந்துங்க. சோறு ஆக்குறேன். ஆக்கின குழம்பு வச்சு ஊத்துறேன். கைவேலை முடிஞ்

சடியும், இட்டிலி லாவாரத்துக்கு மாவு வேறே ஆட்ட வேணும். நான் உள்ளே போவட்டுமா?"

அவள் கேட்டுக் கொண்டிருக்கையில், கருக்கரிவாள் மீசை வைத்துக்கொண்டு முரடன் ஒருவன் வந்தான். "இந்தாலே, எங்க தேவர் ஐயா மச்சினப்புள்ளை ஒனக்கு அறந்தாங்கிச் சந்தையிலே வாங்கித் தந்த தங்க மோதிரத்தை கைக்கு மெய்யா வாங்கிட்டுப் பறிஞ்சாரச் சொல்லி உத்தரவு போட்டிருக்குது. ஒன் வாயிலே சீதேவி இல்லையாம். இந்தத் துப்பு ஊரு முச்சூடும் தமுக்கு கொட்டினுப்பிலே, பரவிப் பூடுச்சாம்.. ம்!" என எடுத்த எடுப்பிலேயே புட்டுப் புட்டு வைத்துப் பேசினுன் அவன்.

பஞ்சவர்ணத்தின் உறவு முறைக்காரனை வீரப்பனின் குடும்பத்தைச் சார்ந்த அந்தத் தடியனை எரித்துவிட முயன்ருளா அவள்? இல்லை. 'பாவம்' என்று 'மாப்பு' விட்டாளோ?"

"இந்தாப் பார்த்துக்கிடு. அந்த ஆம்பளையை இங்காலே ஒரு கடுத்தம் வந்திட்டுப் போவச் சொல்லு! மற்றத் தாக்கல் தகவலெல்லாத்தையும், நம்ம மணியக்கார ஐயா பஞ்சாயத்துக்குப் பின்னுடிதான் பேச வாய்க்குமா மின்னு நான் செப்பினதாய் அவுக காதிலே போடு! ம்... ஓடு! ..."

அந்தி சாய்ந்தது.

இரவின் நெடுங் கதவுகள் திறக்கப்பட்டன. கறுப்புப் பூச்சில் வெள்ளைப் புள்ளிகள் நெளிவு காட்டின.

வாய்ச் சவடால்காரனுக்குக் கசையடி கொடுத்தும் அவன் போகும் வழியாகத் தெரியவில்லை. ஆனபடியால்

வெளிப்புறத் தட்டியை இழுத்து மூடி, கம்பியை மூங்கில் சிம்பில் சேர்த்துக் கட்டிவிட்டு, வந்தவனை வெளியே நிறுத்தியபடி, அவள் உள்ளே போனாள். அப்போது அவளது உள்ளத்தைவிட்டு வெளியே புறப்பட்டுப் பெரு மூச்சுப் பறித்த கோலப்பன் பனைத்தூணுடன் அணைவு கொடுத்து நின்றான். "பஞ்சவர்ணம், நான் ஒம்மேலே வச்சிருக்கிற கொள்ளை ஆசைக்கு என்னென்னமோ குந்தகமெல்லாம் கை வரிசை காட்டுதே?..." என்று வேதனை காட்டப் பேசினான் அவன்.

அவனுடைய மனம் எனும் கங்கு உண்டாக்கிக் காட்டிய சூட்டிலே, அவனது மனக் கனவின் நாளங்கள் பொசுங்கிச் சாம்பலாக, துடித்துக்கொண்டிருந்தன!

"இந்தாப் பாருங்க. இனி நீங்கதான் எம் மச்சான்! எம்புட்டு இந்த முடிவை மாத்திறத்துக்கு கொம்பு முளைச் சவன் மானத்திலேருந்து குதிச்சாக்கூட முடியாதாக்கும்! நான் சொல்லுறதை வாங்கிக்கிடுங்க. கன்னி கழியாப் பொண்ணு நானு, முன்னைப் பின்னைத் தெரியாத ஒங்க வாய்ச்சொல்லை நம்பி, ஒங்களுக்கு அடைக்கலம் தந்து, ஒங்களுக்காவ என்னையே காவு குடுக்கத் துணிகாரம் கொண்ட என் பேச்சை நம்பப்புடாதா? நான் புதுப் பொண்ணு. இதுபத்தி ரவைகூட ஐயப்படாதீங்க!" என்று மன்றாடினாள் பஞ்சவர்ணம். கண்ணீரும் அவளுடன் மன்றாடியது.

அப்போது, "பஞ்சவர்ணம்!" என்று குரல் கொடுத்தபடி வந்த வளையற்காரக் கிழவர் வாசற்புறத் தட்டிக் கதவை அவிழ்த்துக்கொண்டிருந்தார்!

## 5 "எனக்குச் சதம் நீங்க!"

எள்ளினுள்ளே ஐக்கியப் பட்டுப் பொதிந்து இருக்கும் எண்ணெய்ச் சத்தியைப் போன்று, இயற்கையின் நியதிப் பண்பாட்டில் இரண்டறக் கலந்து நிலவும் இறைமைச் சக்தியின் அலகிலா விளையாட்டுக்களை எடை கட்டி எடை போட்டுக் கணிக்க நாம் யார்?

நாளை விடிந்தால், ஆத்தாளுக்குத் தேரோட்டம். ஆவணத்தாங்கோட்டை விழாக்கோலம் பூண்டு, கோல நகை சிதறிக் காட்சியளிக்கும் அந்தத்திற்கு ஈடு எடுப்பு கிடையவே கிடையாது!

உலகாளும் மாதாவின் அதிசயச் சக்தியின் பெருமைகளை உள் அழுந்திய பாவனையில் எண்ணி, வியந்த நிலையில், ஒரு நாழிகைப் பொழுது, விரல் வழி வழிந்த கொம்புத் தேனைப் போல நழுவி ஓடியதை உணர அவளுக்கு நெடு நேரம் பிடித்தது. பிடித்து வைத்த மண் பாவையானாள் அவள்.

அவள்: பஞ்சவர்ணம்!

முகம் கழுவி, மாடத்தில் 'கொட்டுக்கடையில்' இருந்த விபூதி - குங்குமத்தை அள்ளி நெற்றியில் தீற்றிக் கொண்டாள் அவள். 'பொண்ணுப் பொறந்த தாய் நீ. நான் உங் குஞ்சு. என்னோட நிலவரத்தைக் கூட்டு மொத்தமாப் புரிஞ்சவ நீ. என் மனசைத் தெளியவச்சு, என்னோட மனசான மனசைக் கட்டிக்காக்கவேண்டியது ஒங்கடமையாச்சுதே, ஆத்தா! எம்பிட்டு மானம் மரியா

தையை நல்ல தனத்தோட வாழவைக்கவேண்டியதும் உம் பொறுப்பாச்சே தாயி? கனிஞ்ச மாம்பழம் கல்லடி பட்டா, தரையிலே சாயும். ஆனா, எம் பேதை நெஞ்சைக் குறிவச்சு சுக்கான் கல்லாலே வீசி அடிக்கிறானுங்களே போகுடிப்பசங்க சிலபேரு! என்னாலே இப்படியாக்கொத்த தீவினைகளையெல்லாம் எப்படித்தான் தாள ஏலும்? நீ மனசு கொண்ட புண்ணியவதி! ஆனதாலே, எனக்கு ஒரு நல்ல பாதையைச் சுட்டிச் சொல்லு. அப்பாலேதான் ஊருப் பஞ்சாயத்திலே எனக்கு ஒரு நல்ல கியாதி உண்டாகும்! அதுக்குப் பின்னாடிதானுக்கும், நான் அந்த நேச மச்சானை மனசொப்பிக் கட்டிக்கிடவும் வாய்க்கும்! அப்ப தான், பணத்தைத் தலையிலே வச்சுக்கினு கூத்தாடுகிற இந்த ஆவணத்தாங் கோட்டைக் குடிசனங்களுக்கு இந்தப் பஞ்சவருணம் குட்டியோட குணத்து மணமும் அத்துபடியாகும்!...ஆமா...ஆமா!...'

அகல் விளக்கு, சுற்றிச் சூழ்ந்து அம்பாரம் கட்டிக் கொண்டிருந்த இருட்டைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

இராச் சாப்பாடு நடந்து கொண்டிருந்தது.

'கும்பளான் கருவாடு' மணத்தது. ஆக்கின குழம்பு உணக்கையாக இருந்தது. ஆவணம் குண்டு சட்டியில் ஊறிய அகப்பையும், குறிஞ்சிப்பாடி 'வாணக்கச்சட்டி'யில் நெளிந்த கரண்டியும் மிகவும் சுறு சுறுப்புடன் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தன.

கோலப்பன் 'ஆவ்!...' என்று ஏப்பம் பறித்தான்!

வளையல்காரக் கிழவர் ஒரு பிடி இறக்கமாகத்தான் சாப்பிட்டிருக்கவேண்டும். அவர் விட்ட ஏப்பம் சுருதியில் சற்று இறங்கியிருந்தது.

வெற்றிலைக் குட்டான் காலியாகிக் கொண்டிருந்தது. குடிசையின் பனை ஓலை இடைவெளி வழியே விண்ணின் தண்ஒளி கள்ளம் பாய்ச்சி, கருணை பாய்ச்சிச் சிந்தி வழிந்தது.

பஞ்சவர்ணம் சிந்தனையின் வசப்பட்டுப் போனவளாக, பனைமரத் தூணுக்குத் துணையானாள். தனக்குத் துணைவந்த தொல்லைகளை ஒரு விதமாக எல்லை கடத்தி விட்டு, தீவிரமான ஒரு முடிவுக்கு உடந்தைப் பட்டு நின்றாள். அவர்கள் இருவரும் மாறி மாறி, மாற்றி மாற்றி, அவளைச் சாப்பிடும்படி வேண்டியதன் பேரில், 'அஞ்சாறு பருக்கை'களை வயிற்றினுள்ளே செலுத்தி வைத்தாள். உண்டது ஒட்டவில்லை. எப்படியோ, ஏப்பம் புறப்பட்டது. நெஞ்சத்துக்கவலைகள் மன உயிரின் சக்தித் துளிகளை உண்டதனால் விளைந்தஏப்பமோ என்னவோ?...

ஊராளும் தெய்வத்திற்கு அன்று தினம் 'ஊர்த்துவக்காளி' யின் புனைவடிவம். மேலக் கட்சி ச.மு. செல்லப்ப சேர்வை உபயம். எல்லாம் தடபுடல்தான். கால்தூக்கி ஆட முனைந்த மூத்தவளின் போக்கிற்கு ஒரு வழியைக் காட்டி, அந்த வழியில் கண்கள் திறக்கப் பெற்று ஆடிமுடித்த அற்புதப் பெருங்கதைக்கு விளக்கம் சொல்லவல்ல தெய்வத் திருவிழாவாயிற்றே! கொட்டு முழக்கு, தாரை தம்பட்டம், சங்கம், சாரங்கம் எல்லாம் முழங்கிக் கொண்டிருந்தன. நெஞ்சில் வாழ்பவனை நினைவில் வாழ்த்தியபடி, கூப்பிடு தொலைவினின்றும் ஒலி பரப்பியவாறிருந்த நாத இசைப்பாட்டின் பண்பாட்டில் மனம் நெகிழ்ந்து போய்க் காணப்பட்ட பஞ்சவர்ணம், தலையை பலி ஆட்டுக்கிடாவை யொப்ப சிலிர்த்த வண்ணம், ஒரு தப்படி நடந்துபோய், கிழவரின் பக்கம் நின்று, "ஐயாவே, கொஞ்சப் பொழுதுக்கு இங்கிட்டாலே

கொஞ்சம் தள்ளி வாறீங்களா? ஒரு சங்கதி கேக்க வேணும்!...” என்று கூறினாள். கிழவர் எழுவதைக் கண்டதும், தன் அன்பு மச்சானின் திசைக்கு மாறி, “இந்தாலே திரும்பிடுறேனுங்க ... ஒங்களைத்தானே!...” என்று செய்தி அளந்து, சிலிர்க்கும் புன்னகை மொக்குகளைக் கட்டவிழ்த்து விட்டவளாக, கொண்டைப் பூவைச் சமன் கொண்டு திரும்பினாள் !

தோட்டம் வந்தது.

வேப்ப மரத் துண்டில் அமர்ந்தார் வளையல் வியாபாரி.

எதிர் வசமாகக் குந்தினாள் பஞ்சவர்ணம். தோட்டத்தின் மையத்தில் பூதாகாரமாகத் தோன்றிய சோளக் கொல்லைப் பொம்மையையே இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். சோள மணிகள் ‘கொண்டை கட்டி’க் காற்றில் அசைந்தாடி, நிலவில் அணைந்தாடிக் கொண்டிருந்தன.

அப்பொழுது கிழவர் கேட்டார் :

“ஆமா, பஞ்சவர்ணம்! அப்பறம் ஒம் முடிவுதான் என்னவாம்?”

“எதைப் பத்திக் கேட்கிறீங்க ஐயா?”

“அல்லாம்...அந்தப் புள்ளே கோலப்பன் விசயமாத்தான்!...” என்றார் பெரியவர்.

“புதுசா என்னாங்க முடிவும் ஆரம்பமும் இருக்குது?... அந்த மச்சான்தான் இனிமே எனக்குச் சதமுங்க!...”

“ஒரே திட்டந்தானா, ஆயி?”

"ஆமாங்க!"

"அந்த ஆளேப் பத்தி புகைஞ்சுக் கிட்டிருக்கிற கதை...?"

"அல்லாம் கட்டுக் கதையுங்க!"

"ஊம்" என்று நெடுமூச்சு விட்டார் முதியவர்.

"என்னுங்க அப்பிடி மூச்சு வாங்குறீங்க?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா, பஞ்சவர்ணம்! ...வந்து..." என்று தம் பேச்சில் இடையீடு கட்டி, இடுப்பில் கட்டி வைத்திருந்த கடுதாசி ஒன்றைப் பிரித்துக் காட்டினுர் அவர்.

"என்னுங்க அது...துண்டுக் காயிதம்?"

"பினுங்குச் சீமைக் காயிதம்!... என் ஒடப்பொறந்தா மவன் காயாம்பூவை ஒனக்கு நெனேப்பு வருதா? ஒரு வாட்டி, அம்மன் கரக ஆட்டத்திலே மையப் புள்ளியா நின்னு ஆடிச்சே, அந்தப் புள்ளேயாண்டான் பொறக்கு மாசம் அக்கரைச் சீமையிலேருந்து இங்கிட்டு வந்து குதிக்கப் போவுதாம். சேதி போட்டிருக்குது!..." என்று விளக்கம் ஈந்தார்.

காலத்தின் ஈகையினுல், நினேவுகள் சட்டை உரித்துக்கொண்டன. பஞ்சவர்ணம் ஒரு கணம், பலாச் சுளேக்கு வசப்பட்ட ஈ ஆனுள்!...

"ரொம்பப் பதனமான இளசாச்சுங்களே அது!" என்று மதிப்பீடு தெரிவித்தாள் கன்னிப் பெண். "ஆமா, அதுக்கு இப்ப என்னுங்க?" என்று குறுக்கே பாய்ந்தாள் மையல் அழகி.

"வந்து...அதுக்கும் இதுக்கும் ஒட்டு முட்டுப் பேச்சில்லே!...என்னமோ ரோசனை ஓடிச்சிது. சொன்னேன், தங்கச்சி!..." என்று நழுவினார் அவர்.

நழுவிய நினைவுகளின் பிடியில் நழுவியவாறு இருந்தாள் பஞ்சவர்ணம்.

ஒரு வியாழச் சந்தைக் கெடு. தடுமன் காய்ச்சல் பிடித்து, ஒண்டிக் கட்டையாகக் கிடந்தாள் அவள். அப்போது வந்த வளையல்காரக் கிழவர் அவள் மீது அன்பு வசப்பட்டு, சுடுதண்ணீர் வைத்துக்கொடுத்து, 'நொய்க்கஞ்சி' காய்ச்சித் தந்தார். அன்று தொட்டு அவள் உள்ளம் தொட்டவரானார் கிழவர்!...

"பஞ்சவர்ணம்!... இந்த ஊருப் பெரிய எடத்துப் புள்ளைங்க கிட்டேயிருந்து ஒனக்கு ஏதாச்சும் சாமான் சட்டு வந்திச்சா? ... இல்லாததும் பொல்லாததுமான பேச்சு ஊர்ப்புறத்திலே நடமாட்டம் காட்டுதே, தாயி? ..."

"ஐயா!..." என்று அழைத்தாள் அவள். பிறகு குதிகாலின் அடியில் படிந்து கிடந்த குறுவி மணலை ஒரு கொத்து அள்ளி எடுத்தாள். "இந்தாப்பாருங்க...இந்த மண்ணுதான் நம்மளோட வாழ்க்கைக்கு ஒரு நீதி பகவானுட்டம்! இந்த மண்ணிலே கண்ணு முளிக்கிறோம்; இதே மண்ணிலேதான் கண்ணை மூடுறோம்...! இதுக்கு இடைப்பட்ட ரவை நேரத்துக்குள்ளே, இதே மண்ணை நம்பி மனுசங்க கட்டி விளையாடுற வேடிக்கைக் கூத்து இருக்குதுங்களே, இதுகளுக்கெல்லாம் நாம ஈடு குடுத்துத்தான் தீரவேணும்!... ஆனதாலே, இந்த விதிக்கு நானு மட்டும் தப்ப முடியுங்களா?...என்னை என் மச்சான் நம்புது; நீங்களும் நம்பித்தான் தீருவீங்க!

இன்னம் ரெண்டு பொழுது விடியட்டும். பஞ்சாயத்து வரட்டும். எல்லாக் கதை காரணங்களையும் நீங்களே புரிஞ்சுக்க வாய்க்குமுங்க!" என்று தீர்க்கமான அழுத்தம் பதித்துப் பேசிய அவள், எதிர்ப்புறம் பதட்டப்பட்டுப் பார்த்தபொழுதில், சோளக் கொல்லைப் பொம்மை தீப் பற்றி எரியக் கண்டாள்!



# 6 கங்குல் நிலவு

பொன்முலாம் பூசினாற்போல செழித்துக் கொழித்துக் காட்சியளித்துக் கொண்டிருந்த சோளமணிக் கதிர்களுடன் கொஞ்சி மகிழ்ந்து திளைத்து விளையாடிக்கொண்டிருந்த பூஞ்சிட்டுக்கள், கவண் கற்களின் உதவியில்லாமலேயே சிட்டாய்ப் பறந்தோடின. பட்டுத் துகள் பட்டுத் தெறித்ததற்கு இணையாக, ஒளிவிட்டு-ஒளி வெட்டிப் பாய்ந்து, சிதறிப் படர்ந்த தீக்குமிழ்கள் காற்றிலும் கடுகிப் பறந்தன; காற்றுடன் மறுவிப் பிணைந்தன. சோளமணிகளைத் தின்றுவிடாமல்இருக்கவேண்டிப்பரண் அமைத்துக் கட்டப்பட்ட அந்தச் சோளக் கொல்லைப் பொம்மையின் பரிதாபகரமான உருவம் மேலும் பரிதாபத்தை வருந்தி அழைத்துக் கொண்டது. வாழ்விற்கும் வீழ்ச்சிக்கும் ஒரே துருவப் பார்வையாக அமைந்து 'உண்மைச் சாட்சி' சொல்லியது அது!

பஞ்சவர்ணம் தீயிடை மெழுகானாள்; கங்குலின் நிலவானாள்; மணல்தரை மீன் ஆனாள்; வலை கண்ட பிணை ஆனாள். வாழ்வை ஆரம்பித்து வைத்து, வாழ்விற்கு வாழ்த்துத் தெரிவித்து, வாழ்வை ஒத்திகை செய்து பார்க்கத் துடித்துக்கொண்டிருந்த அவள் - நல்வாழ்வு கிட்டவேண்டுமே யென்று 'நேந்து' கொண்டு தவம் இருந்த அவள்-கனவுகளைத் தன்னுடைய கயல் நீலவிழி மணிகளிலே வளரச் செய்து, அந்தக் கனிவின் கனவில் பண்புடன் நடமாடித் திரிந்த அவள், இப்பொழுது "இனிமே நானு செத்துமடிஞ்சு சிவலோகம் போனதாட்டமேதானுக்கும்!" என்று கனன்றாள்; கதறினாள்;

சுழன்முள் ! வளையல் வியாபாரியுடன் உரையாடிக்கொண்டிருந்த பேச்சை அந்தரத்தில் நிறுத்திவிட்டு, அந்தரமாகச் சுற்றிய தீக்கங்குகளை நாடி ஓடினாள் அவள். பூங்கரங்களை வீசியவாறு கணப்புக் கட்டையாய்ப் பொலிந்த கருவேலங்கழியைப் பலம் பாய்ச்சி வெளியே இழுத்தாள். பிறகு, பிடிமண்ணை உள்ளங்கை கொண்டமட்டும் அள்ளி எடுத்து நெருப்பின்மீது 'காட்டத்துடன்' வீசியெறிந்தாள். எரிந்த காட்சி அவ்வளவு லேசில் நின்றுவிடுமா? ஆத்திரத்தின் எல்லையைக் கடந்து வெளியே வந்த வேளையில் தன் மேனியில் பச்சைத் தண்ணீர்த் துளிகள் பட்டு விலகியதை அவள் உணரவே, பின்புறம் சாரையாய்த் திரும்பலானாள்.

கோலப்பன் கடகால் நிரம்ப நீர் எடுத்து வந்து, தீயை நோக்கிக் கொட்டினான். கொடிகட்டிச் சிரித்த நெருப்பு கோடி காட்டி அணையத்தொடங்கிற்று. வேதனை ஒரே மூச்சில் அடங்குவது கிடையாது. தீயும் அவ்வினந்தானே? வயசை மறந்து விரிந்துகிடந்த வஞ்சத்தை மறக்க முடியாமல், தூக்கமாட்டாத சோர்வுச் சுமையுடன் தூக்கிவந்த செப்புக்குடத்தை சோளக் கொல்லைப் பொம்மையின் பாதத்தில் போட்டு விட்டு உட்கார்ந்தார் கிழவர். காரை முள் காலைப் பதம் பார்த்த அதே சடுதியில் கருக்கரிவாள் ஒன்றையும் அவர் பார்த்துவிட நேர்ந்தது!

வளையற்காரரின் கையிலிருந்த கருக்கரிவாளை எட்டி நின்றவாறு பார்த்துவிட்ட கோலப்பன் அவரை நோக்கி நடந்துவந்தான். கிழவரைக் கூப்பிட, அவருடைய பெயருக்காக, தும்மல் பறிக்கும் நேரம்வரை தயங்கினான். அந்தப் பெயர் நினைவை மறக்கவே, "ஐயா!" என்று விளித்துக்கொண்டு கீழே குனிந்து, அவருக்கு அருகாகக் குந்தினான். லேஞ்சில் கட்டிவைத்திருந்த தீப்பெட்டியை

எடுத்து ஒரு குச்சியைக் கிழித்தான். தீ வந்தது. தீப் பிடித்த பொம்மை கறுப்புமயமாகக் காட்சியளித்தது. வைக்கோலும் துணிக் கிழிசலும் நிறைந்திருந்த பொம்மை பசித்த வயிராக ஏங்கிக் கிடந்தது. அடுத்த தீக்குச்சியைத் தீமருந்தில் உரைத்தபோது, பஞ்சவர்ணம் அழைக்கும் குரல் ஓட்டி வந்தது. ஆகவே, அவன் கையிலிருந்த நெருப்பை ஊதி அணைத்தவனாக, அவளை நோக்கி ஓட்டமெடுத்தான்.

கோலப்பன் குறிவைத்துச் சேர்ந்த இடத்திலே, பஞ்சவர்ணத்தின் உடும்புப் பிடிப்பில் காத்தான் முடங்கிக் கிடந்ததைக் கண்டு தெளிந்தான். 'அன்னிக்கு ஒரு தக்கம் இந்த மனுசன்தானே இங்கே நாடிவந்திருந்தான்?' அவன் தன்னுள் கிளை விட்டுக் கிளை பரப்பி நின்ற ஐயத்தைப் போக்கவோ, தன் ஐயத்திற்கு வேறு போக்கிடம் காட்டவோ பிரயத்தனப்படாமல் நின்ற நிலையிலே, அவன் ஒரு காட்சியைக் கண்டான். அந்தக் காட்சி: பஞ்சவர்ணம் பத்திரகாளியாகி உருமாறினாள்: எதிரே கைகட்டி, வாய் பொத்தி நின்ற காத்தானின் 'சேக்கை'ப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியதோடு அமைதி கொள்ளாமல், வாய் வழியே ஊறிய எச்சிலைத் தரையில் துப்பினாள்.

"தூத்தேரி! நீயும் ஒரு ஆம்பளைச் சென்மமா? ஒனக்குக் கஞ்சித்தண்ணி ஊத்துறவங்களுக்கு ஒனக்கு உண்டான மட்டுக்கும் கடமையைச் செய்யிறதுதானே? அதுக்காக, ஏதுக்கு இப்படி வந்து ராவுப் பொழுதிலே தீவைக்க மனசொப்பினே? பணத்திலே புரளுரவுகளுக்கு பணத்தோட கயிட்டம் புரியாது; ஆனா, என்னை மாதிரி மண்ணுமேலேபுரளுற ஏழை பாழைங்களுக்குப் பணம் காசைப்பத்தி ரொம்ப சிலாவத்தாத் தெரியுமே! நீ

தீ வைச்ச கை யோடவே, விசயம் என் நேத்திரத்துப் போக்கிலே பட்டுச்சுது; தப்பிச்சேன்! இல்லாங்காட்டி எனக்கு இருக்கக்கூடிய இந்தப் பச்சைச் சோளக் கொட்டைங்ககூட கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமப் பூடுமே? நீ ஒதுங்கின சாதியிங்கிறதுக்காக நான் ஒனக்கு 'மாப்பு' விட்டேன். இல்லேன்னு, இப்பவே ஒன்னை அந்தத் தெக்குப் பக்கத்துக்குப் புளியமரத்து ஒண்டலிலே கட்டிவச்சி, விளாசியிருப்பேன்! அப்பாலே, ஒம் மொதலாளி வந்து என்னை என்ன செஞ்சிடுவாரின்னும் ஒரு கை பார்த்திக்கிட்டுருப்பேன்! ம், நானு கைகூடி வர லேங்கிறதுக்காவ, எம்புட்டு மண்ணிலே அநியாயம் செஞ்ச பாவத்துக்கு, ஒருநாள் இல்லாட்டி ஒருநாள், ஆத்தா சுமையாக் கூலிகுடுக்காமயா இருக்கப்போறுள்?"

வெஞ்சினம் வறுத்தெடுத்துக் கொட்டிய சொற்கள் சூடு ஆறவில்லை.

அதற்குள், வளையற்காரர் சோணமுத்து அம்பல காரர், கையில் தவழ்ந்த கருக்கரிவாளுடன் அங்கு வந்தார் அவளிடம் அதைக் காட்டினர். நிலாக் கதிர்களில் சூரிக் கத்தி பளபளத்தது. அதை 'லபக்'கென்று லாந்திப் பறித்துப் பார்த்தாள். 'முத்தையன்' என்ற எழுத்துக்கள் தேய்ந்திருந்தன. 'அக்கரைச் சீமைப் பணத்துக்கு இம்மாங்காணும் மவுசு இருக்கில்லே? வரட்டும், வரட்டும் ஒரு கை பார்த்துக்கிடுறேன்! அல்லாம் அந்த முத்தையன் பண்ணுற தகிடுதத்தம்தான்; புரிஞ்சுக்கிடுச்சு! புரிஞ்சுக் கிட்டேன்!'

கண் விழித்துக் கண் மூடுவதற்குள், காத்தான் சூழ்ந் திருந்த சப்பாத்திக்கள்ளி வேலியைத் தாண்டிக்கொண்டு ஓடினுன். அவனுடன் கூட வேறொரு உருவமும் எழுந்து விரைந்து பாய்ந்து மறைந்தது. கையிலிருந்த அரிவாளை

கைக்குள் 'லாகு' கொடுத்து அமுக்கி நீட்டி வீசினாள். 'ஆ!' என்ற குரல் கேட்டுமறைந்த அதே அவசரத்தில், அந்த ஆளும் மறைந்துவிட்டான்! அந்தக் கத்தி திரும்பவும் அவளிடம் சரணடைந்தது!

அணி நிலவு அழகின் மணிமண்டபமானது.

பஞ்சவர்ணத்திற்குத் தன்னைச் சூழ்ந்திருந்த இருள் பயம் கொடுத்தது. கொடுக்கப்பட்ட பயத்தினின்றும் பயங்கரக் கற்பனைகள் முளைத்தன. இதே நிலையைத்தான் முதியவரும் நிர்ணயம் செய்தார். ஆனால், கோலப்பன் மட்டும் எதற்கும் கலங்காத பாவனையில், கள்ளமின்றி மனம் விட்டுச் சிரித்தான். "நீ யாதொன்னுக்கும் மலைப்புத் தட்டி நிக்காதே, வருணம்! நானு இருக்கையிலே, நீ எதுக்கு வீணா மனசைக் குலுக்கிக்கிடுறே?" என்று கேட்டுச் சாந்திப்படுத்தினான். அச்சொற்கள் பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு அளித்த ஆறுதலின் கனபரிமாணம் இவ்வளவு அவ்வளவா?

வளையற்காரரும் கோலப்பனும் வாசலில் துண்டை உதறிப் போட்டுக் கட்டைகளைச் சாய்த்தார்கள்.

ஆனால், பஞ்சவர்ணம் மட்டிலும் நடு ராத்திரிக்குப் பிறகுதான் கண்களை மூடினாள். அப்பொழுது அவளது தலைச்சுமை இறங்கியிருந்தது. 'நல்ல மூச்சு இப்பத்தான் அண்டுது. அந்தப் பயலுங்க தந்த துணிமணிகளை அதே சோளக்கொல்லைப் பொம்மை எரிஞ்ச எடத்துக்குக் கீழே தீ வச்சுப் பொசுக்கிப்புட்டேன். ரெண்டொரு நகைநட்டையும் காடுமாத்தி வீசிப்புட்டேன். இனிமே எம்பாடு விட்டிச்சுது! ஊம்... விடிஞ்சாக்கப் பஞ்சாயத்து!...'

# 7 கூடிய ஊர்ப் பஞ்சாயத்து

ராக்காச்சி அம்மன் கோயில் திடலில் ஒட்டி உறவாடத் தலைப்பட்ட பரபரப்பு, நொங்கு வீசியெறியும் நேரத்திற்குள்ளாக ஆவணத்தாங் கோட்டைச் சுற்றுச் சார்பு பூராவிலும் சுற்றிப் பற்றிவிட்டது. தீ பரவ காற்று போதும்; சேதி பறக்க வாய் போதும்!

மணியக்காரர் ஆவுடையப்ப அம்பலகாரர் தலைக் கட்டில் கட்டுமானத்துடன் நடக்கவிருந்த ஊர்ப் பஞ்சாயத்துக்கு அன்றுதான் 'கெடு' வைக்கப்பட் பட்டிருந்தது. பாலசூரியன் வானத்திலிருந்து கிளம்பின வுடனே, குஞ்சும் பொடிசுகளும்கூட தேர் முட்டித் தடத்தில் குறுக்கும் நெடுக்குமாகத் திரியத் தொடங்கி ஞர்கள். கதிரவன் ஏறுமுகம் காட்டிஞன். செய்நேர்த்தி அலுவல்கள், தண்ணீர் இறவை, தோட்டக் கடன்கள் போன்ற அன்ருடப் பணிகளை ஒரு வழிப்படுத்தி முடித்த ஊர்க்காரர்கள் பசியாறி, வாய்க்குள் வெற்றிலைக்கிழிசலைப் போட்டு மென்றுகொண்டே, புகையிலை நறுக்கும் கையுமாக நடையைக்கட்டிஞர்கள். தேரோட்டம் முடிந்தும்கூட, கடையைக் கட்டாமல் இருந்த இரண் டொரு அங்காடியினர் ஈயை விரட்டியதுடன் மனநிம்மதி கொண்டார்கள். சுண்டுகளை ஓட்டி மேய்க்க அத்துணை சுளுவில் முடிந்துவிடுமா? பேய் ஆனலும், அதற்கும் சொந்த மண் என்ருல் ஒரு மதமதப்பு இருக்குமாமே?

"ஏலே மூக்கா! ஒங் காதுக்கு ஏதாச்சும் துப்பு விழுந்திச்சாடா? ஊர் சுத்துறவனுச்சேடா நீ? ஒரு சேதியை மிச்ச சொச்சம் வைக்க மாட்டியே? ராவு,

காத்தாளை பஞ்சவர்ணம் வூட்டுக்கு ஏவினுளுமே நம்ம பங்காளிப் புள்ளை முத்தையன்? இதுக்கு ஏன்தான் இப்பிடிக் கோணப்புத்தியோ?"

"கோணவகிடு எடுத்தாக்க, அப்பாலே புத்தியும் கோணமாணலாப் போயிட வேண்டியதுதானுங்களே மாமு?"

இப்படி ஓர் உரையாடல்.

இதோ வேறு இருவர்:

"என்னுங்கிறேன் காவான்ளு! இப்ப நடக்கப்போற பஞ்சாயத்தாட்டம்...இந்த அஞ்சு வருசத்துக்குள்ளே... இம்மாம் பெரிய பரபரப்பை வேறெதுவும் உண்டாக்கினது கிடையாதாம். எனக்குக் கூட ஒண்ணுமே மட்டுப் படலே! பாவம், அந்தக் குட்டி பஞ்சவர்ணத்தோட வாழ்வும் தாழ்வும் மணியக்காரர் நாவிலேதாளுக்கும் குந்தியிருக்குது!"

"நூத்திலே ஒரு தாக்கல் தம்பி!"

சோமு அம்பலம் கேணி:

"ஆத்தா அஞ்சுகம்! பார்த்தீயாடி ஒங்க ஆச்சிமவ பஞ்சவர்ணத்துக்கு வந்த இடுசாமத்தை? ரவையிலே பறிஞ்சாந்து, தீப்பந்தம் வீசிப் பறிஞ்சிருக்காளும் யாரோ ஒரு போக்கணங்கெட்ட பயமவன்! வசங்கெட்ட இளவட்டங்க பணத்தை வீசி பொண்ணுப்பொறந்தவ மனசைப் பிடிச்சுப்பிட கனுக் காணுருங்களே, இந்தக் கதையை எங்கணே போய்ச் செப்புறதாம்?"

"அயித்தை, ஒங்களுக்குப் புரியாத தவசல் இல்லே பஞ்சவர்ணத்தைச் சாமானியமா நாம எண்ணப்புடாது அது அல்ப சொல்பமான பொண்ணு இல்லவே இல்லே

அதுவே நெருப்பு கணக்குதான்! ஆனபடியாலே, வேறே நெருப்பு எதுக்கும் மசியமாட்டா! ஊர்ச்சனங்க ஒண்ணடி மண்ணடியாச் சேர்ந்து எதிர்த்தாத்தான் என்ன? அல்லாருக்கும் மேம்பட்டவ ஒருத்தி ஊருக்கு ஒசந்த தலையா மானத்திலே குந்திக்கிட்டு இருக்கையிலே, யாரோட திருவிளையாட்டு வந்துதான் கன்னி கழியாப் பொண்ணை என்ன செஞ்சுப்பிட முடியும்?"

"ஆமா, ஆமா! நல்லாச் சொன்னீங்களே! உருப்படியான பேச்சுத்தான், அயித்தை!"

இந்தப் பேச்சுக்கு அனுசரணையாக நின்றார்கள் ஏனைய பெண்கள்.

நெருஞ்சிமுள் பத்தையில் கால் பதிந்துவிட்ட நிலையில் பஞ்சவர்ணம் அதிர்ந்தாள்; உள்ளத்தின் வேதனை உடல் முழுவதற்குமாய்ப் பரவி ஊடுருவியது. ஊடுருவித் துளைத்த துயரங்கள் அவளை கணுக்காலுக்குக் கணுக்கால் அரித்துக் குடைந்தது. வண்டு குடைந்த பழத்திற்கு ருசி மிகுதி. ஆனல், துன்பம் குடைந்த மனத்துக்கு எல்லையிலாத் தொல்லைதான் நிகர லாபம். 'கருவில் அமைந்தபடி', வாழ்வின் சூட்சுமங்கள் அமைத்துக் காட்டும் ஐந்தொகையின் புள்ளிக் கணக்கு இது!

ஒன்றுவிட்ட உறவென வாய்த்திட்ட சின்னுத்தாளை பலகாரக் கடைக்குக் காவல் வைத்தாள். அவளுக்குக் காவல் நிற்கும் தலைச்சுழியை எழுதிக் காட்டிய கோலப்பனிடம் நெருங்கி என்னவோ அந்தரங்கம் பேசினள். குளித்து முழுகினள்; மஞ்சள் பூச்சு துலாம்பரமாய்த் திகழ, தும்பைப் பூவின் காம்பீர்யம் மின்ன விளங்கினள் அவள். கொட்டடிப் புடவையை ராமேசுவரம் வர்ணப் பேழையிலிருந்து எடுத்துக் கட்டிக்கொண்டாள். அந்தப்

பூச்சிகளை விரட்டிவிட்டு, நாவற்பழ நிற ரவிக்கையைப் போட்டுக் கொண்டாள். ரவிக்கையின் கீழ்ப்பகுதி முடிச்சை இறுகக்கட்டி முடித்துக்கொண்டே, ஈரத்தட்டி ஓட்டை வழியே பார்வையிட்ட பொழுது, ஜோடி விழிகளின் ஆர்வத்துடிப்பையும் அவள் கண்டுகொள்ள வாய்த்தது. 'இந்த மச்சான் துடுக்கான அவசரக்கார ஆம்பளை!' உதடுகளின் மடிப்பில் சிரிப்பு மடியலாமா?

பஞ்சவர்ணம் பற்களைக் கடித்துக்கொண்டாள். முன் இரவின் பின்பகுதியில் கோலப்பன் மெல்லவந்து தன்னை நெருங்கியதைக் கண்டு அவள் கண்டங்கருவளைப் பாம்பென பதட்டம் பூண்டு எழுந்து துடித்தாள். "யாரு நீங்களா?... வாய் வார்த்தையாய் அப்பவே எச்சரிக்கை செஞ்சுபுடத்தான் ரோசிச்சேன். ஆனா, இந்த ஊரு சனங்களுக்குத் தென்படாத நல்ல மனசை—ஓங்க நல்ல மனசை நான் இனம் கண்டதாலே, மூச்சுக் காட்டாம குந்திக்கிட்டேன். இப்ப சொல்லுறதை மறந்துப் புடாதீங்க. இந்தக் கிணத்து நீரை வெள்ளம் கொண்டு பூடாதுங்க. ஆனதாலே, நம்ப ரெண்டு பேரும் ஊர் மெச்ச கண்ணாலம் கட்டிக்கிடுறத்துக் குள்ளாற, இம் மாதிரியான எந்த ஒரு தப்பு எண்ணமும் இனிமே ஓங்களுக்கு உண்டாகப்புடாதுங்க!... ஓங்களை நம்பி யிருக்கிற என்னை ஊருக்காரங்க கடைசி பரியந்தம் நம்புறதுக்கு வகை செஞ்சு கொடுங்க போதும்!..." என்று பதனமாகப்பேசி, கோலப்பன் படுக்கவேண்டிய இடத்திற்கு 'இலட்சுமணன் கோடு' ஒன்று கிழித்துவிட்டு, மீண்டும் ஒரு சிரிப்பைக் கொட்டிச் சென்றாள் அவள்.

"இந்தக் கோலப்பன் எப்பவும் மனிசனாவே நடந்துக் குவான். சாமி சத்தியம் இது!" என்று 'தனது' சொன்ன

சொற்கள் நந்தியாவட்டப் பூக்களைப் போல துலாம்பர மாக ஒலித்து வெண்மை காட்டின!

அவள் வெளிப்புறம் வ ந் த ா ள். கோலப்பனை நோக்கினாள். "மச்சான், புறப்படுங்க. வெய்யிலு கல்லா வுக்கு நெருங்கிக்கிட்டிருக்குது. மணியக்கார ஐயா வந்திருப்பாங்க," என்று துரிதப்படுத்தினாள். 'மெனக் கெட்டு' சிவப்பு ரேக்கு சொட்டச் சொட்ட தேநீர் தயாரித்தாள். அவள் ஒரு மடக்குப் பருகினாள்; அவனுக்கும் ஒரு குவளை நீட்டினாள். கையெடுத்துக் கும்பிட்டபடி, அவள் கடையை விட்டுப் புறப்பட்டாள். கோலப்பன் திருநாகேஸ்வரம் துவாலையைத் தோளில் சரியவிட்டவாறு அவளைப் பின்தொடர்ந்தான். அவர்கள் இருவரையும் பின் தொடர, அங்கங்கே பல பல கண்கள் காத்திருந்தன என்பது பரம ரகசியமாக்கும்!

ஐயனார் குதிரையை எல்லைக்குக் காவல் வைத்து, உருவாகத் தக்க நீதியின் உச்சாடனத்திற்கு ராக்காச்சித் தேவதையை முன்புறத்துச் சாட்சியாகக் கொண்டு 'ஊர்ப் பஞ்சாயத்து' கூடியிருந்தது. ஊர்க்குடியிருப்பின் ஆறு கரைக்காரர்களுக்குத் தலைமை ஏற்றார் ஆவுடையப்ப அம்பலக்காரர். 'உருவு முடி' போடப்பட்டிருந்த குடுமி யின் மயிரிழைகள் அடிக்கடி காற்றில் பறந்துகொண்டி ருந்தன. வாய் எச்சிலை உமிழ்ந்து கொட்டிவிட்டு, விரிப்பில் வந்தமர்ந்தார் அவர். பிறகு, ஒரு தரம் சுற்றிச் சூழ நோக்கினார். வீரப்பன், கோவிந்தன், கருப்பையா, சன்னாசி, ரங்கன் ஆகியோர் பதவிசாக ஒருபுறம் நின்றார் கள். மறுபக்கத்தில் பஞ்சவர்ணம் கைகட்டிக் காத்து நின்றாள். சற்றே விலகி, நாலுமுழம் தள்ளி, கோலப்பன் நின்றான். சனி மூலையில் புளியமரத்துண்டில் காத்தான் கட்டப்பட்டிருந்தான். 'ஆமா; இந்த வியாச்சியத்திலே

சம்பந்தப்பட்ட ஆளுங்களிலே ஓட்டு வீட்டுக்காரர் மவன் முத்தையனை மட்டுந்தான் கண்ணுப்புறத்தாலே காணலே. அந்தப் பிள்ளை மேலேஉள்ள குத்தம் ஒண்ணு ரெண்டா? பாக்கி அத்தனை புள்ளைகளும் எம் பேச்சுக்குக் கட்டுப்பட்டு வந்திருக்குதுங்க! ஊம்!" அவரது எண்ணங்களின் சக்தி முனைப்பாக இயங்கியது. அவர் தன் வசத்திற்கு வந்து, பஞ்சாயத்தைத் தொடங்க வாய்திறந்தார். அப்போது, வளையற்காரக் கிழவர் வேர்வை வழிய ஓடிவந்து ஒரு செய்தியைக் கூறினர்.

அந்தச் செய்தி: 'பெரிய இடத்துப் பிள்ளையான முத்தையன் தன் வீட்டுப் பெரிய கிணற்றில் விழுந்து சாகப் பிழைக்கக் கிடக்கிருனும்!'

# 8 "உன்னைப் புரிஞ்சிக்கிட்டேன்!"

தீக்கணப்புக் குழிக்குள் தன்னை உடந்தையாக்கிக் கொள்ளும் இரும்புக்கழி, நெருப்புப் பொறிகளின் வெம்மை ஏற ஏற, அதன் போக்கிலே, நெளிந்து வளைந்து கொடுக்கும் இயல்பும் பக்குவப்படத் தலைப்படுவது இயல்பேயல்லவா? அதைப் போலத்தான், பஞ்சவர்ணத்தின் குணநலனும் அமைந்திருந்தது. 'ஊருக்கு ஒப்ப ஒட்டிப் போகத்தான் வேணும். இதுதான் நாட்டு வழக்கம்; இதுவேதானுக்கும் தலைமுறை தத்துவமான பேச்சாகவும் இருந்து வருது. இப்பிடி யிருக்கிற காலத்துக்கு, பொண்ணுப் பொறந்தவ நான் ஒண்டி வெட்டி நின்னு, வெட்டிப் பேச்சுப் பேச வாய்க்குமா?... நானும் ஊர்ச் சனங்களை யொத்து, அததுக்குத் தக்கனை அமைஞ்சிருந்து வாழ்ந்துக்கிட்டு வந்திருந்தாக்க, எனக்கும் மனசுக்கு வாகான தெம்பும், வசமான நம்பிக்கையும் அத்துபடியாகி வந்திருக்கும்!... என்னமோ, ஒண்ணுக்கும் நான் குடுத்து வைக்கலே; ஒண்ணும் கை கூடியும் வரல்லே!... இம்மாங் கொத்த நேரத்திலே, வானத்து நிலாவு மண்ணுக்குக் குதிச்சதாட்டம் கீழச்சீமை ஆசாமி... அதான் இந்த மச்சான் எங் கண்ணிலே பட்டுச்சு... இப்ப, மனசிலே படமாட்டம் பதிஞ்சிருச்சு. இதோட நேசமானும் எனக்கு ஆத்தா மூத்தவ கிருபையாலே பலிதமடைஞ்சி, எனக்கும் ஒரு பிடிமானம் உண்டாக்கி, எம்பிட்டு மானமும் காப்பாத் தப்பட்டுப் பிடுமின்னு ரோசிச்சு, நெஞ்சிலே சந்தோசம் ஊறித் தெளிய நின்னுக் கிட்டிருக்கையிலே, பொட்டுப் பொழுதுக் குள்ளாற, பொட்டு விட்டுப் போனப்பிலே

எம்மாம் பெரிய இடுசாமமெல்லாம் தடம்காட்டியிருச்சுது உசிர் உள்ளமட்டுக்கும் ஒடம்பு கொள்ளாத கிலேசம்!... என்ன செய்யட்டும்?'

ஆற்றாமையின் நுண் உணர்வு பெருமூச்சாக வெடித்தது. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் ஒட்டாது அல்லவா? அதுமாதிரி, அவளுள் எழுந்த எண்ணங்கள் நிறபேதம் காட்டி, ஒன்றுடன் ஒன்று உறவு செய்யாமல் விலகியே இருந்தன. எண்ணங்களும் நினைவுகளும் தறி சுழன்ற வேகத்தில், அவளுக்குத் தன்னுணர்வை உண்டாக்கியது, எதிரில்நின்றுகொண்டிருந்த ஐயனார் குதிரை. ஏதோ ஒரு நிகழ்ச்சியை அவள் சில கணங்கள் வரை மறந்திருந்தாள். அது இப்போது மனத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடுவது துலாம்பரமாகப் புரிந்தது. சுற்றிச் சூழ நோக்கினாள். சாத்தன் குடியிருப்பு 'சாவன்னா-மூனா' வைத் தவிர, சொச்சப் பேர்கள் எல்லோரும் பறிந்து விட்டிருந்தார்கள். வெறுமை வெளியில் நிரந்து பரவிக் கிடந்த உண்மையின் தாத்பர்யத்தைப் பஞ்சவர்ணம் உணரலானாள்; அக்கணத்தில், முத்தையன் கிணற்றிலே விழுந்து சாகப் பிழைக்கக் கிடப்பதாகச் சேதி சொன்ன நடப்பையும் தெளிந்தாள்.

இதயத்திற்கு மாற்று உரைத்துக்காட்டும் உரைகல்லாக அமையவல்லவை விழிகள். பேசாத நெஞ்சிற்கு பேசவல்ல ஓர் ஒலிக்கலவையாக அமைந்து பேசும் சக்தியைக்கொண்டு விளங்குகிறது, இந்தக் கண்கள். நயனங்களில் சுழித்தோடும் நீர்க்கலப்பில்தான் உள்ளத்தின் கரையும் தெரியமுடியும்.

பஞ்சவர்ணத்தின் உந்திக் கமலத்திலிருந்து ஓர் அதிர்ச்சி புறப்பட்டது. உலை கொதிப்படையும் அளவுக்கு

அவள் மனமும் கொதித்தது. கொதித்த நீரில் வெஞ்சினம் கரைந்தது; இரக்கம் தேங்கியது. 'ஐய்ய, பாவம்!' என்று தன்னுள்–தனக்குத்தானே அனுதாபப் பட்டுக் கொண்டதுடன் நிற்காமல், முத்தையனின் உருவை ஒரு தரம் உள்ளக்கிழியில் எழுதிப் பார்த்துக் கொண்டு, உருவத்தின் உரிமைக்குரல் ஓங்கி நிற்கும் அந்தச் சீமைஓட்டு வீட்டைக் குறிவைத்து நடந்தாள்; ஓடினாள்!

அவளுடன் கூட அந்த நினைப்பும் ஓடியது, அந்த நினைப்பில் முத்தையனின் நினைவுமுகம் தெரிந்தது.

சித்திரை நிலவில், வசந்தத் தென்றலில், அழகு மணிச் சிரிப்பில், எழில் மண்டிய மாணிக்கப் பார்வையில் தன் விளையாட்டுத் தோழனாக வாய்த்த முத்தையனை நினைத்துப் பார்த்தாள். கூட்டாஞ் சோறு பொங்கிச் சாப்பிட்ட நாள் ஒன்றா, இரண்டா? தேர்த் திருநாளில் கட்டுஞ் சோற்றைப் பகிர்ந்து உண்ட நடப்புக்கள் ஒன்றா, இரண்டா?... களத்துமேட்டில் கஞ்சிக் கலயம் சுமந்து சென்று பசி தீர்ந்த சம்பவங்கள் ஒன்றா இரண்டா? 'இப்படிப்பட்ட வகையிலே மனசு தண்டனிட்டுக் கிடந்த என்னைக் கடோசீலே ஏமாத்திப்புட நெனைச்சிருச்சே அது?... இம்மாந்தொலைவு கெட்ட நடத்தையுள்ள ஆம்பளையானபடியாலேதான், அன்னைக்கு ஒரு கடுத்தம் நேரங்கெட்ட நேரத்திலே என்னைத் தேடிக்கினு வந்து, கெட்ட நோக்கத்திலே குந்திக்கிட்டிருந்திச்சுப் போலே! ம்... நல்ல பாடம் கத்துக் குடுத்துப் புட்டேனுக்கும்!...'

ஓடினவள் நின்றாள். மறுகணம், அவளுள் 'இரக்க சிந்தை' விழிப்புக்கொண்டது. 'அது என்னதான் கெட்டதாவே இருக்கட்டும். அதுக்காவ, அதோட அந்திம காலத்திலே அது மூஞ்சியையாச்சும் ஒரு திருப்பம் காணும இருக்கலாமா?...கூடாது!...'

நெல் மணிகள் முற்றக்கனிந்ததும், அவற்றின்மீது ஒட்டிக்கிடக்கும் பனிமணிகளை உதிர்த்து உதறிவிடுவதை ஒப்ப, அவள் தன் கண்களிடைத் தேங்கிய சுடுநீரைச் சிதறிவிட்டாள். அந்தம் காட்டிய கைவிரல் நகங்களிலே விளங்கிய மருதாணி ரேக்கைப் பார்த்துப் பூரித்து, அடங்கிவிட்ட 'அந்த நினைப்பு' ஒன்றுடனேயே அவள் அப்பொழுது ஓடிக் கொண்டிருந்தாள்!...

காலத்தோடு அவள் கால்களும் தேய்ந்தன!

திருநாளூர்த் திருப்பத்தில் குறுக்குச் சாலிட்டு ஓடிய ஒற்றையடிச் சுருக்குப் பாதையில் ஆவணத்தாங் கோட்டை அழகு மடங்கிய நேரத்தில், "இந்தாப் பாரு' பஞ்சவருணம்!" என்று குரல் அனுப்பி மடக்கி நின்றான் கோலப்பன்.

"நீங்க இந்த மட்டுக்கும் வூட்டை நாடிப் பறியலையா? கடையிலே ஆளுப்பேரு வேறே நாதியே இல்லீங்களே?"

"எனக்கு இங்கிட்டு ஒரு சோலி வந்திருச்சு. போக வாய்க்கலை. ஆமா நீ இப்ப எங்கனே ஓடிக்கிட்டு இருக்குறே?"

"வந்து...நானு அந்தச் சீமோட்டுக்காரங்க வூட்டுப் பக்கம்...!"

"மெய்யாலுமா? அம்மாந் தொலைவுக்கு மேக்கரிச்சுப் போயிருச்சா சங்கதி?"—அரளிப் பூக்கள் அவன் நயனங்களை அண்டின!

"என்னுங்குறேன், சொல்றீக?"

"ஒனக்கு வைரியான ஆளு அந்த முத்தையன்...!"

"புரியாம இல்லீங்க!"

"அவன் ஒம்புட்டு மானத்துக்கே உலே வச்சுப்பிட கங்கணம் கட்டி, தோளுத்துண்டிலே முடிஞ்சு வச்சுக் கிட்டிருக்கிற பரதைப்பயல் அவன்!"

"அத்தனையும் சுத்தமுங்க. நான் மறந்திடலே; மறந்திடவும் மாட்டேனுங்க !"

"பின்னே, நீ ஏதுக்கு இம்மாந்தூரம் அவதி அவதியா இப்பிடி ஓட்டம் பிடிக்கிறீயாம் ?"

" அதுங்க... வந்துங்க..."

"களவாணித்தனம் பண்ணுமச்சேதியைப் புட்டு வச்சுப்பிடு, பஞ்சவர்ணம் !"

"என்ன சொன்னீங்க ? நானுங்க களவாணித்தனம் பண்ணுறேன் ? இந்தமாதிரிப் பேச்சை இன்னொரு தக்கம் எங்கிட்டே பேசாதீங்க. நான் இப்ப அந்த முத்தையன் மச்சானைக் காணுறத்துக்குத்தான் போறேன் !"

"ஏனும் ?"

"அந்த ஆம்பளே உசிருக்குப் போராட்டம் போட்டுக்கிட்டிருக்கிறதாலே, நானும் மனசு உள்ள பொம்பளே யிங்கிறதாலே, இப்பிடிப் பறியிறேனுங்க !"

" ஐய, பாவம்...!"

"நையாண்டியும் நைத்தியமும் பண்ணுறத்துக்கு இதுவா நேரம் ?" அகல்விளக்கின் முத்துச் சுடராய்ப் பொலிவு காட்டினுள்.

"பின்னே என்னவாம்? உன்னோட ஈவு இரக்கம் எல்லாம் நேரம் தப்பி உதிச்சிருக்குதே, அதை நெனைச் சாத்தான் எனக்கு வேடிக்கையாயிருக்கு!" நாற்றங்கா லில் பிடுங்கி எறியப்பட்ட களைகளென சொற்கள் நின்றன.

"ஒங்க தாக்கலே என் மனசுக்கு மட்டுப்படலை யுங்களே?"

"அல்லாம் முடிஞ்சு போச்சுது, புள்ளே!"

"என்னுங்க இது?"

"அதான்...உம் மச்சான் முத்தையனோட கதை முடிஞ்சிருச்சுதாம்...!"

"ஆ...! ஐயையோ...!"

பஞ்சவர்ணம் எழுப்பிய ஓலம் வான்முகட்டை முட்டியது.

அந்த ஓலத்தில் பளிச்சிட்டுத் தெறித்து விழுந்து சிதறிய மின்னல் துகள்கள் அவளுடைய முகத்திரையில் சிந்தித் தேங்கின. இருவிழி முனைகளிலும் சுடுவெள்ளம் மாலை தொடுத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. சித்தம் பேதலித்த நிலையில் அவள் தடுமாறினாள்; கதறினாள்.

"ஏ பொண்ணு, பஞ்சவர்ணம்! ஒன்னை நான் திரவு சாப் புரிஞ்சுக்கிட்டேன்! நான் வாரேன்!' என்று முத்தாய்ப்பு வைத்த சடுதியுடன் திசை திரும்பி நடந்தான் கோலப்பன்!

# 9 தோழியின் தோழி

ஈர்வலியும் கையுமாக வந்தாள் கோவிந்தம்மா. வந்தவள், அந்தத் தேநீர்க்கடையை இமை வலிக்கப் பார்த்தாள்; பார்த்தவளுக்கு இமை மாத்திரம் வலிக்கவில்லை. நெஞ்சும் சேர்ந்து வலித்தது. வாளிப்பான மார்பகம் எம்பித் தணிந்தது. 'ஆமா. இங்கிட்டு ஒரு ஈ, காக்காயைக் காணமே?... அந்த அசலூர் மச்சான் காரரையும் காணோம்; பஞ்சவர்ணம் அக்காவையும் கண்டுதண்டிக்கிட ஏலலை. நடக்கிற கதை காரணங்களுக்கு ஊடாலே ஏதாச்சும் புதுக்கதை முளைச்சிருக்குமா? அல்லாம் மப்பும் மையமுமாகத் தோணுதே?' என்று நினைவுகளைச் சரம் கட்டித் தொடுத்தாள். மனமென்னும் பூஞ்செடியிலிருந்து எழுந்தது சுகந்தமா? அல்ல; வேதனை!

குழப்பம் விளைவித்த அல்லலும், அல்லலில் பிறந்த நெட்டுயிர்ப்பும் கூடி முயங்கிய தருணத்தில், கோவிந்தம்மாவின் மனம் நெகிழ்ந்தது. மன நெகிழ்வின் ஈரத்தில், ஈரம் தோய்ந்த வதனம் ஏந்தி வந்த பஞ்சவர்ணத்தைத் தரிசித்தாள். அந்தத் தரிசனம் பலித்தது. நெஞ்சிலும் நினைவிலும் ஒயிலாடப்பார்த்த பதுமையை நேருத்திரமாகக் கண்டாள். "அக்கா... அக்கா! என்ன, மூஞ்சி சோம்பிக் கிடக்குது?... ஏதாச்சும் தகவல் கிகவல் நடந்திச்சா?..." என்று மூச்சுவிடாமல் கேட்டாள்.

பஞ்சவர்ணத்திற்கு அழுகை முட்டியது. கழுத்தில் விழுந்திருந்த கருகுமணிச்சரம், எழில் கொழிக்கும் நெஞ்

சத்தில் தவழ்ந்து எம்பி எம்பி விளையாடிக் கொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்ட கோவிந்தம்மா ஏதோ ஒன்றை எண்ணமிட்டு, நாணிஞள். பிறகு, அவளது கண்நோக்கு, தன் தோழி பற்றியிருந்த மருதாணி இலைக் கொத்தின் பேரில் நிலைத்தது.

"கோவிந்தம்மா, அந்த மச்சுவீட்டு மச்சான் கதை முடிஞ்சிருச்சாமே? பாவம்!..."

"நெசமாவா?"

"ஊம்!"

முத்தையனின் பண்ணையைச் சேர்ந்த வில்வண்டி ஒன்று காட்டுநரிப் பாய்ச்சலில் ஓடியது.

விரைந்து சென்ருள் கோவிந்தம்மா. கற்ருழையின் கூர்மை அவளுடைய சேல்விழிகளில் ஒட்டிக்கொண்டது.

மறைந்து சென்றது ஆலத்தாம்பாடிக் காளே.

"ரொம்பப் பரிதாபந்தான், அக்கா!"

"ஆமா, தங்கச்சி!"

"மனுசன் இப்படி ஒரேமுட்டாக் கண்ணை மூடறதுக்குள்ள, ஏதுக்குத்தான் இம்பிட்டு வயித்தெரிச்சலை வேறே சுமந்துக்கிட்டுப் போய்த் தொலையணுமோ?"

"கண்ணை மூடினவங்களைப் பத்திப் பேசவேணும்ஞ, நாம கண்ணை முழிச்சுக்கிட்டு இருக்கிறதுதான் சிலாக்கியம்! முடிஞ்ச கதையை இப்பைக்குக் கிண்டிக் கிளறுறதிலே, நமக்குத்தான் மண்டை உடை மிஞ்சும்!"

"சரி, அக்கா !"

"கோவிந்தம்மா, என்னுலே அந்த மச்சானுக்கு அவப்பேர் உண்டாகியிருச்சு !"

"……………"

"அந்த மச்சான் கண்ட கறையை அழிக்கத் தலையெடுத்த மூதேவியின்னுதான் என்னைச் சபிச்சிருக்கும் அது !"

"……………"

"இப்பிடி ஒரு நடப்பு அந்த மச்சானுக்குச் சம்பவிக்குமின்னு தடயம் கிடைச்சிருந்தாக்கூட…"

"கிடைச்சிருந்தாக்கூட" என்று இடைமறித்துக் கேட்டாள், உற்றவள். சுண்டும் பொழுதுக்குச் சும்மா இருந்தவளா இவள் ?

" அந்த மனுசனை மன்னிச்சிருப்பேன் !" என்று முத்தாய்ப்பிட்டாள் பஞ்சவர்ணம்.

" நான் என்னமோன்னு…"

" அதைக் கண்ணுலம் கட்டிக்கிட்டிருப்பேன்னு ரோசிச்சீயாக்கும் ? ம்…கையிலே இருக்கிற இந்த மருதாணித் தழை ஒனக்கு எங் கதைகளை நினைப்பூட்டுது போலத் தோணுது! குத்தமில்லே, தங்கச்சி, குத்தமில்லே!"

பஞ்சவர்ணம் இருந்தாற்போல விக்கி அழுதாள் ; விம்மி வெடித்தாள்.

தோழி பதட்டம் காட்டினுள்.

“என்ன அக்கா இது? சின்னஞ்சிறுசு இப்பிடி அழு தாக்க, ஒன்னைக் கேலி செய்யமாட்டாங்க?”

“அதெல்லாம் எதுவும் நடக்கிறதுக்கு இனிமே வாய்க்காது!”

“அக்கா!”

“ஆமா, கோவிந்தம்மா, பழைய மச்சான் குறுக்கே விழுந்து தடுத்திச்சு. நான் திகைச்சுப் போனேன். அதுக்குள்ள, அது எங்கணயோ காத்துப்பட்டு மயங்கின தாட்டம் தலையை உசுப்பிக்கிணு வேறே பாதையிலே மறுகி ஓடியிருச்சுது!...”

தன்னுடைய கண்ணீரைத் துடைத்தவளைக் கைப் பற்றி முகத்தில் ஒற்றிக்கொண்டாள் பஞ்சவர்ணம். ஒரு நடப்பில், வேறு நிகழ்ச்சி நடைபயின்றது. ‘ஒருவாட்டி அந்த மச்சான் தன்னோடே தோட்டத்துப் பக்கம் வரச் சொன்னதுக்காக, நான் அது மேலே கோவிச்சுக்கிட, உடனே அது சின்னப்புள்ளை கணக்கிலே பொருமிச்சு. எனக்கு நெஞ்சு பொறுக்கலே. அது கண்ணீரை எம்பிட்டுச் சுங்கடி முந்தானையிலே துடைச்சடியுந்தான், அதுக்குச் சிரிப்பு வந்திச்சு!’ மறைந்தவனின் அழகு முகத்தை அவள் நினைத்துக் கொண்டாள். ஒரு வகைப் பட்ட பயம்தான் அவளுள் எழுந்தது. அவளையும் அறியா மல், அவளது பூங்கரங்கள் இரண்டும் குவிந்தன. அஞ்சலி முத்திரை வடிவம் கண்டது!

“இந்த முத்தையன் அண்ணச்சிக்கு என்ன வந்திச்சு?”

"அவுக வீட்டுக் கொல்லைக் கேணியிலே விளுந்திருச்சாம்! ஊர்ப் பஞ்சாயத்து நடந்துக்கிட்டிருந்தப்ப, அது மட்டுந்தான் ஆத்தா சந்நிதானத்துக்குப் பக்கம் நாடலே. இதைப்பத்தி கசமுசன்னு ஊர்ப்பெரிய புள்ளிங்க காதைக் கடிச்சுக்கிட்டிருக்கையிலே, வளவிக்காரத் தாத்தா ஓடியாந்து இந்த விசயத்தை விளக்கிக் காட்டிஞக! ஆனுக்க, அந்த ஆளான ஆளு ஏன்தான் இப்பிடிச் செஞ்சாருன்னுதான் விளங்கலே, கோவிந்தம்மா!"

சுள்ளாப்பு குறையாமல் எரித்த அனல், புழுக்கத்தை ஏற்படுத்தியது.

குவிந்த குவளை இதழ்கள் காற்றைக் குவித்தன.

"எனக்கு ஒண்ணு தோணுது."

"சொல்லு!"

"அவுகவூட்டுக்குப் போயிட்டுத் திரும்புவம். நீயும் கூட வருவீயா?"

இருவரும் ஒட்டுத்திண்ணையை விட்டு எழுந்தார்கள். அப்பொழுது, ஈச்சந்தட்டி வழியே ஏதோ முகம் ஒன்று தெரிந்து மறைந்ததைக் கண்டாள் கோவிந்தம்மா. 'முக்காலும் கோலப்பன் மச்சாஞகத்தான் இருக்க வேணும். அந்தக் கண்ணு அப்படித்தான் இருந்திச்சு!' இவ்விஷயத்தை அவளிடம் சொல்வதா, வேண்டாமா என்கிற தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தபோது, பஞ்சவர்ணம் கோவிந்தம்மாளின் இதழ்களைக் கட்டிவிட்டாள்!

அந்தச் சாயாக்கடை வாசலில் ஈயப்பூட்டு ஒன்று காட்சியளித்தது!

அவர்கள் - கூட்டாளிப் பெண்கள் இருவரும் ஒரே கிளையில் குந்தியிருக்கும் பாசப்புறாக்களுக்கு நேராக கைகோத்து நடந்தார்கள்.

அப்போது உச்சி வெய்யிலின் உக்கிரம் உடைபட்ட வேளை; உருமம் கடந்த காலம்.

கோவிந்தம்மா வாய் சும்மா இருக்காது. கருவேல மரத்துக் கோந்துப்பிசின் வைத்து ஒட்டினால் கூட ஒட்டாது. ஆனால் அவள் மனம் இளகு பான்மையைப் பழகியிருந்தது. கண்டதும் கவர்ந்து விடுவாள்; கண்டதும் கவரப்பட்டு விடுவாள்! 'பின்னே என்னடி பூவாயி! இந்த மேலக்குடியிருப்பிலே நம்ம வயசொத்த குட்டிங்க எத்தனையோ வெள்ளக்காடான பேருங்க குறுந்திண்ணை முந்தலிலே குந்தியிருக்கையிலே, எனக்கு இந்தப் பஞ்ச வருணத்தை மட்டுக்கும் மனசுக்கு ஒப்பிப் போயிருச்சுதின்னு, எனக்கே அது அதிசயமாத்தான் இருக்குது .. அதுக்கும் அப்பன் ஆயி இல்லே; நானும் அப்பிடித்தான். எனக்காச்சும் மேலு காலு வலிச்சாக்க இஞ்சித்தண்ணி வச்சுத்தர வாச்சும் பெரியத்தா ஒருத்தி படுகிடையாக் கெடக்கிறு. பாவம், இவளுக்குத்தான் யாரும் சதம் இல்லே. இப்ப மூக்குடியிலவோ, இல்லே எங் கணையோவோ இருந்து வந்து, பஞ்சவர்ணத்து மனசான மனசை, சொக்குப்பொடி தூவி மசக்கி வச்சுக்கிட்ட அந்த மச்சானுக்கும் இப்ப கிறுக்கு மூண்டுப்புடுச்சாமே? ஆமா, இந்த ஆளு நெசமாவே வாய்க்கு மெய்யானவுகதானு? இல்லே, புறக்குடிப் புள்ளிதானு? என்னமோ, அக்கா நம்பியிருச்சு. அது மனசு வைரத்துக்குச் சமதையாக்கும்! வைரம் லேசுபாசிலே கைக்கு ஆப்படுமா? அதாட்டம் தான் எங்க பஞ்சவர்ணக்கிளியும்!' என்று அவள் கீழத்

தொங்கல்வாரித் தேக்கத்திலிருந்து வடகரை ஊர்ப் பிள்ளையார் கோவில் குளம் வரை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம்-அல்லது, வாய்ப்புக்களை உருவகப்படுத்திக் கொள்ளும் நேரமெல்லாம் பஞ்சவர்ணப் புராணம் படிக்கத் தப்பவே மாட்டாள். அவள் தப்பிப் பிறந்தவள்!

நாகுடிச் சாமியாடி வீட்டுத் திருப்பத்தில் பஞ்சவர்ணமும் கோவிந்தம்மாவும் திரும்பினார்கள். தாடியும் மீசையும் விபூதிப் பட்டையுமாகக் திகழ்ந்த சாமியாடியை ஒருமுறை நோட்டம் பார்த்துக்கொண்டே இருவரும் நடந்தார்கள்.

“ஆமா; இந்தச் சாமியாடி அம்பலகாரர் அசலார் சொத்துக்கு ஆசைப்பட்டுக்கிடக்கிறாராமே!...”

“ஆமா, ஆமா; சாமியாடி ஆட்டம் போட்டுத்தான் அம்மாம் சொத்துப்பத்தை வசப்படுத்தி வாய்க்குள்ளே போட்டு வச்சிருக்காரும்... அசலான் சொத்தைத் தின்னவனை ஆத்தா வழிப்படுத்தி யிருக்காளா?...இந்தப் போகுடி மனுசங்கூடத்தான் ஒருவகையிலே பாத்தாக்க, எனக்குச் சொந்தம் சோவாரியாட்டம்தான்! எங்க நகை நட்டும் நிலமும்கூட இந்தக் கிழம்கிட்டே ஆப்பிட்டுக் கிடக்குது!...ம்!...”

“அப்பிடியா? அது கெடக்கட்டும்! ஆமா, இன்னொரு சம்சயம். இந்த வளவிக்கார ஐயா ஒனக்கு ஏதாச்சும் ஒறவுமுறையா அக்கா?” என்று பஞ்சவர்ணத்தின் பதுமை நிகர் எழில்விழிகளில் மயங்கிக் கேட்டாள்.

“என்னைப்பத்தி அத்துபடியாப் புரிஞ்சவ நீ, ஒனக்கே இப்பிடி யொரு ஐயம் கிளம்பியிருக்குது. கோவிந்தம்மா, என்னைப் பெத்த வங்கமுஞ்சிகூட எனக்கு ஞாபகமில்லே.

இந்த வளவிக்கார ஐயாதான் எம்பேரிலே அந்தக் காலந் தொட்டு உசிரையே வச்சுக்கினு இருப்பார்னு எங்க ஒண்ணுவிட்ட அப்பத்தாக் கிழவி முந்திச் சொல்லும். அதுதான் எனக்குப் புரிஞ்ச கதை. புரியாத மிச்சத்துக்கு ஆயி மகமாயிதான் ஆதாரம்!"

மெய்யப்பத் தேவர் சவுக்கத் தோப்பு விடைபெற்றது.

இருவருக்கும் எதிர்ப்பட்டு வந்த ஜனங்கள் அவரவர்கள் போக்கில்-அவரவர்கள் மனத்தடத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

முத்தையனின் வீடு நெருங்கிக் கொண்டேயிருந்தது.

வீடு நெருங்க, நெருங்க, பஞ்சவர்ணத்தின் மனம் 'திக், திக்' கென்று அடித்துக் கொண்டது.

அப்பொழுது, "தங்கச்சி!" என்று கூப்பிட்டவாறு எதிர்ப்பட்டார் வளையல்காரக் கிழவர். "ஒனக்குச் சேதி தெரியாதில்ல? எங்க சொந்தக்காரப் பொடிசு அக்கரைச் சீமையிலேருந்து திடுதிப்பின்னு குதிச்சிருச்சு. வெள்ளன அங்காலே கூட்டிக்கிட்டு வாரேன்!" என்று சொற்களைப் பறக்க விட்டதுடன் நிற்காமல், அவரும் பறந்து கொண்டிருந்தார்.

"அந்தாலே வந்திருச்சு ஒங்க மச்சான் வூடு!" என்று கோடி கூட்டிப் பேசிச் சுட்டிக் காட்டினுள், சுட்டிப்பெண் கோவிந்தம்மா.

பஞ்சவர்ணத்தின் நினைவுகளெல்லாம், முத்தையனின் வாழ்க்கையைஉள்ளடக்கிக் காட்டிய ஆரம்பத்தையும்

முடிவையுமே பற்றிச் சுற்றிக் கொண்டிருந்தன. ஆகவே சினேகிதியின் பேச்சை ரசிக்கும் நிலையில் இல்லை அவள். கூரைக்கட்டில் வேயப்பட்டிருந்த சீமை ஓடுகளின் செந் நிறம் அவளுக்கு அச்சத்தை வளர்த்தது; ஆதங்கத்தை வளர்த்தது. வீடு நெருங்க நெருங்க, அவளுக்குக் கால் ஓடவில்லை; இருதயத் துடிப்பும் கட்டுமீறி இயங்கியது; நொடிக்கு நூறு தரம் பெரு மூச்சைப் பிய்த்தெடுத்து வெளிப்படுத்தி விட்டாள்.

அதோ, முத்தையனின் இல்லம்!

என்ன விந்தை இது?

ல வ லே ச ங் கூ ட சத்தம்-சந்தடி இல்லையே? சுடுகாட்டு அமைதியைப் பிரதிபலிக்கிறதோ அந்த வீடு? கங்காணி கொடிகட்டி வாழ்ந்து, எட்டுக்கண் வீசப் புகழ் சேர்த்து விளங்கிய விவரங்கள் நேற்றைக் கதைதானே?

எடுத்த எடுப்பில் பஞ்சவர்ணத்தின் பார்வை வாசற் புறத்துக்குத் தாவியது. தீவினைக்குரிய எந்த ஓர் அடை யாளமும் அங்கு காட்சி கொடுக்கவில்லை!

நாகுடிச் செம்மறிக் கூட்டம் காட்டுக் கத்தலாகக் கத்திக் கொண்டிருந்தது.

மறுபகுதியில், வெள்ளாடு தலைச்சலுடன் தத்தி விளையாடிக்கொண்டும், அரசங் கொழுந்தைக் குதப்பிக் கொண்டும் கட்டுத்தறிக் கயிற்றுடன் 'மல்லு' பிடித்துக் கொண்டிருந்தது.

சேந்தங்குடிச் செவலைக் காளைகள் இரண்டும் தீவனத்தில் கண்ணும் கருத்துமாயின.

பஞ்சவர்ணத்தின் இதழ்க்கங்கில் நீண்டபொழுது கழித்து, மலர்ச் சிரிப்பு தவழத் தொடங்கியது. அவள் கோவிந்தம்மாவைப் பார்த்தாள். அவளும் நகைபூத்த நங்கையாளுள்! முளைத்த குதூகலக் களிப்பில், ஏதோ ஒன்றைக் கெலித்துவிட்ட கருவம் அவள் வதனத்தில் நிழலாடியது, விதியை வென்ருளா? வேதனையைக் கெலித்தாளா? இல்லை, அவளுடைய புது மோகத் தவிப்பைத்தான் ஜெயித்தாளா?

தோழியின் கன்னத்தைக் கிள்ளிச் சிரிப்புச் சிந்தினுள் தோழி!

முத்தையனைப் பெற்ற தாய் வாசலில் கிடந்த சாணி பொறுக்கி, குப்பைமேட்டை வசமாகக்கொண்டு வீசிக் கொண்டிருந்தாள். உழைத்த மேனி ஓயுமா, பின்னே?

"அயித்தை!" என்ருள் பஞ்சவர்ணம். விட்ட சொந்தத்தைத் தொட்ட உணர்வால் அவள் மேனி நடுங்கியது.

கிழவி அவளை இமைக்காமல் விழி பிதுங்கப் பார்த்தவாறே நின்ருள். பின்னர், அண்டிவந்து பஞ்சவர்ணப் பதுமையின் பதும முகத்தை அலுங்காமல் தொட்டு நிமிர்த்தினுள். "ஆத்தாடி! எங்க பெரிய அயித்தை பேத்திப் பொண்ணில்ல... பஞ்சவர்ணமில்ல!" என்று மகிழ்வின் அலைகளில் நீந்தினுள் முதியவள் சீரங்கம்.

"ஆமாங்க, அயித்தை!"

"காத்திகைப் பொறை கண்டதுமாதிரி இருக்குதே ஒன்னைக் கண்டடியும்! மேலுக்குச் சொகமா இருக்கியா?"

"ஆமாங்க, அயித்தை!" என்று அவள் பதில் மொழிந்து கொண்டிருந்த சமயம், உள்ளேயிருந்து

திரும்பினுர் பூவத்தக்குடி சொ. மு. செட்டியார். அவரைக் கண்ட மறுகணத்தில் இன்னெரு முகத்தையும் பஞ்ச வர்ணம் கண்டாள். 'ஆ மச்சான்!" என்று தன்னையும் மீறிய பாவனையாக, வாய்விட்டுப் பேசிவிட்டாள். நிலைப் படியில் தொங்கிக் கொண்டிருந்த முதற் கதிர் வரிசையை விலக்கிவிட்டு, முகம் நிமிர்த்திப் பார்த்தபடி நின்றுன் முத்தையன். சுருட்டைமுடி விம்மிக் கிடந்தது. மீசை துடித்தது. நெற்றி மேட்டிலே 'கட்டு' ஒன்று போடப்பட் டிருந்தது. அவன் அவளைப் பார்த்தான். நெஞ்சின் கனிவைத் தூவி நின்றுளு? வஞ்சத்தின் கனியை ஏந்தி நின்றுளு?

பஞ்சவர்ணத்தின் தலை தன் போக்கிலேயே தாழ்ந் தது. ஒதுங்கி நின்ற கோவிந்தம்மாவை உடனழைத்துக் கொண்டு புறப்படத் தொடங்கினுள். "நான் போயிட்டு வாரேங்க!" என்று சொல்லிக்கொண்டாள்.

"நானுகூட ஒன் வூட்டை நாடி வாரேன் தாயி!" என்று பொக்கைவாய்ச் சிரிப்புடன் வார்த்தைகளைக் கொட்டினுள் முத்தையனின் அன்னை.

பஞ்சவர்ணம் மூரல் நகை முகிழ்த்து, வழி திரும்பி, விழி மீண்டு, வழி திரும்பினுள். நிழலும் தொடர்ந்தது!

பஞ்சவர்ணத்தின் இதழ்க்கங்கில் நீண்டபொழுது கழித்து, மலர்ச் சிரிப்பு தவழத் தொடங்கியது. அவள் கோவிந்தம்மாவைப் பார்த்தாள். அவளும் நகைபூத்த நங்கையாளுள்! முளேத்த குதூகலக் களிப்பில், ஏதோ ஒன்றைக் கெலித்துவிட்ட கருவம் அவள் வதனத்தில் நிழலாடியது, விதியை வென்ருளா? வேதனையைக் கெலித்தாளா? இல்லே, அவளுடைய புது மோகத் தவிப் பைத்தான் ஜெயித்தாளா?

தோழியின் கன்னத்தைக் கிள்ளிச் சிரிப்புச் சிந்தி ஞள் தோழி!

முத்தையனேப் பெற்ற தாய் வாசலில் கிடந்த சாணி பொறுக்கி, குப்பைமேட்டை வசமாகக்கொண்டு வீசிக் கொண்டிருந்தாள். உழைத்த மேனி ஓயுமா, பின்னே?

"அயித்தை!" என்ருள் பஞ்சவர்ணம். விட்ட சொந்தத்தைத் தொட்ட உணர்வால் அவள் மேனி நடுங்கியது.

கிழவி அவளே இமைக்காமல் விழி பிதுங்கப் பார்த்த வாறே நின்ருள். பின்னர், அண்டிவந்து பஞ்சவர்ணப் பதுமையின் பதும முகத்தை அலுங்காமல் தொட்டு நிமிர்த்திஞள். "ஆத்தாடி! எங்க பெரிய அயித்தை பேத்திப் பொண்ணில்ல... பஞ்சவர்ணமில்ல!" என்று மகிழ்வின் அலேகளில் நீந்திஞள் முதியவள் சீரங்கம்.

"ஆமாங்க, அயித்தை!"

"காத்திகைப் பொறை கண்டதுமாதிரி இருக்குதே ஒன்னேக் கண்டடியும்! மேலுக்குச் சொகமா இருக்கியா?"

"ஆமாங்க, அயித்தை!" என்று அவள் பதில் மொழிந்து கொண்டிருந்த சமயம், உள்ளேயிருந்து

# 10 கொண்டல் கண்ட மயில்!

தேநீர்க் கடையில் நெரிசல் தாளவில்லை.

"என்ன தங்கச்சி, காலம்பற முச்சூடும் ஒன்னைக் கண்ணுப்புறத்தாலே காணமுடியலே; 'கையிலே காசு வாயிலே தோசை'ன்னு சொல்லிச் சொல்லி என்னோட வவுத்தை ரொப்பி வந்த நீ, இன்னிக்கு இத்தனை பொழுது வரைக்கும் என்னைக் காயப்போட்டுப்புட்டியே? காயலாக் கெடந்தவனாச்சுதே நான்?" என்றான் கணக்கன் விடுதியான்.

"சரிங்க; இனிமெ இப்படி தாமசம் உண்டாகாது பெரியய்யா!" என்று சமாதானம் சொன்னாள் பஞ்சவர்ணம்.

"நேரம் உண்டன ஆகிருச்சு; சுடுதண்ணி போட்டுக் குடு, ஆயி!" என்று துடித்தான் இளவட்டம் ஒருவன்.

சுடுதண்ணீரை ஊற்றி ஆற்றி ஈயக் குவளையில் நிரப்பி நீட்டினாள் கடையின் சொந்தக்காரி.

இளவட்டத்தின் முகம் வாட்டமுற்றது. "நீ இன்னா அக்கா, இப்பவந்து என்னைச் சோதிக்கிறே? சுடு தண்ணின்னா, தேத்தண்ணின்னு அர்த்தம்! பினாங்குச் சீமையிலேருந்து வந்த வழக்கம் இது; அட, வாங்க நாகுடிச் சாமியாடி ஐயா!" என்று தன் கவலையுடன் போராடிய அவன், வந்தவரையும் வரவேற்கத் தவறவில்லை.

இவ அப்பன்-அதான் என்னோட ஒண்ணுவிட்ட பங்காளி மகன் எங்கையிலே அவன் சிண்டைக் குடுத்துப்புட்டு பட்ட பாடுகளை இந்தப் பொண்ணு அறிஞ்சிருக்குமோ? சே! இதுக்கு அப்ப பால்குடி கூட மறந்திருக்காதே? இதுக்கு தன்னோட ஆயி அப்பனையே சரிவரத் தெரியவே நியாயமில்லையே? சரி, சரி, வரட்டும்! இந்தக் குட்டி எங்கனே தப்பமுடியும்? இது நேசம் வச்சுக்கிட்டிருக்கிற அந்தப்பய மவன் கோலப்பன் இப்ப என்கையிலே சிக்கிக் கிட்டான்! இல்லாங் காட்டி, அவனுக்கு தங்கத்தாலிச் சரட்டுக்கு வக்கு ஏது?'

டீ குடித்தார் நாகுடிக்காரர்.

"மாரியப்ப அம்பலம்! கும்பிடு வருதுங்க!" என்று கைகூப்பிவந்தார் பட்டாமணியக்காரர் ஆவுடையப்ப அம்பலகாரர்.

மாரியப்ப அம்பலம் என்ற நாம கரணம் சூழ, நாகுடிச் சாமியாடி என்ற பட்டப்பெயர் சூட்டிக்கொண்ட பெரியவர், கி. மு. வைக் கண்டதும் சாயாக் குவளையுடன் எழுந்தார். மணியக்காரர் அமர்ந்ததைக் கண்டதும், அவரும் அமரலானார்.

புதிதாகச் சுட்ட உளுந்து வடைகளை ஆவுடையாா கோவில் சுளகில் வைத்துக் கொணர்ந்து, முகப்பில் இருந்த அலங்காரப் பலகையில் வைத்துவிட்டு, வேர்வையைத் துடைக்கக்கூட நினைவிழந்து கடைப்பக்கம் பார்த்த போது, ஆவுடையப்ப அம்பலகாரரைக் கண்டு, ஓர் அரைக்கணம் அசந்து போய்விட்டாள். 'ஐயா பெரியவுக அத்திபூத்தாப்பிலே இங்காலே வந்திருக்காங்களே?' என்ற ஆச்சரியக்குறியை ஏந்தி விழி பரப்பலானாள்.

அவருக்குக் 'கைகூப்பு' தெரிவித்தாள். சுட்ட வடைகளை இட்டு நிரப்பினுள். குடிக்கப், பாலேவனம் பானைத் தண்ணீரை வைத்தாள் பஞ்சவர்ணம்.

எல்லாவற்றையும் ஜாடையாக ஓரக்கண் பதித்துப் பார்த்த நாகுடியார், தேநீருக்குச் சில்லறை கொடுக்காமல் நகரவே, "ஐயா, காசு!" என்று நாசூக்காகக் கேட்டு வாங்கி முன்றூனைச் சுருக்குப் பையில் போட்டுக்கொண்டு லேசான புன்முறுவல் தழைக்க, பக்தி பூர்வமான பாவனை தப்பாமல், மணியக்காரருக்குச் சேவை செய்தாள் பஞ்சவர்ணம்!

அந்தி சாய்ந்தது.

பட்டாமணியம், அந்தப்பெண் பஞ்சவர்ணத்தை நெருங்கி அவளுடைய செவிகளிலே ஏதோ கமுக்கமாக ஓதினுர். பிறகு, திரும்பிச் சென்றுர்.

கொண்டல் கண்ட கலாபமயில்ஆனுல் பஞ்சவர்ணம்!

# 11 அசல் நாட்டான்

இட்டுக் கட்டிச் சொன்ன பொய்யைப்போல, அந்திச் செவ்வானம் விளங்கியது.

மறு அரைக்கால் நாழிகைப் பொழுதிற்குள்ளாக, வானத்தின் செவ்வர்ணம் மறைந்து, குழைத்த கறுப்பு ஒட்டிக்கொண்டது. பொய்யின் நிலை புலனாகி, உண்மை வெளிச்சமான கையுடன், பொய்யனின் முகத்தில் கரி பூசத்தானே செய்வார்கள் ?

கொண்டல் கண்ட கலாபம், எழிலாடும் பல் வண்ணத் தோகை விரித்து, வானவில்லுக்கு மறு பதிப்பாக ஒயில் சேர்த்து ஆடி மகிழ்வது இயல்பு.

பஞ்சவர்ணம் சிரித்தாள். எடுப்பாக அமைந்த நாசியின் இடது பக்கத்து மூக்குத்தியின் ஒற்றை வெள்ளைக் கமலத்தில், கமலத்தின் ஒளி ரேகை ஓடியிருந்தது. அவ்வழகு, அவளது முகத்திற்கு மட்டுமல்லாமல், முகப் பரப்பிற்கே ஓர் அந்தமாக அமைந்து, ஓர் அந்தஸ்தையும் கொடுத்தது. அழகு கை கூடி வருவதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். அந்த இனப்படி பார்த்தால், ஆவணத்தாங் கோட்டையில் ஒற்றைத்தனி விண் மீன் எனும்படி திகழ்ந்த பஞ்சவர்ணத்திற்கு அழகு இருந்தது போலவே அதிர்ஷ்டமும் இருந்து, இப்பொழுது அந்த நல்லதிர்ஷ்டம் தன் சுய ரூபத்தைச் சுட்டிக்காட்டியது. அழகும் பாக்யமும் ஒரே புள்ளியில் அமைந்திட்ட இரு குணக் கலவைகள் ஆயின. பின்னர், அவளது 'சுக்கிரதசை' யின் மகிமைக்குக் கேட்கவும் வேண்டுமா ?

அவள் வெளிவாசலுக்கு வந்தாள். எங்கும் வெறிச் சோடிக் கிடந்தது. அடுத்த குப்பத்து மச்சு வீட்டில் செவலேக்கிடாரி காட்டுக் கத்தலாகக் கத்திக் கொண்டிருந் தது. தொழுவம் நோக்கிப் பாய்ந்து சென்றது அண்டை வீட்டுக் காரரின் வெள்ளேப்பசு. பெட்டைக்கோழி ஒன்று செம்புழுதியில் வசமிழந்து தலேயை அமுக்கியபடி சிலுப் பிக் கொண்டிருந்தது. சாயாக்கடை லாவாரம் இனி அம் புட்டுத்தான்,' என்று தன்னுள் ஒரு முடிவை வைத்து, வியாபாரக் கணக்கிற்கு ஒரு புள்ளிக் கணக்கு போட்டுப் பார்த்து, 'கல்லா'வை இழுத்து, காசு பணத்தை உள்ளங் கையில் கொட்டி எண்ணி, பிறகு, ஞாபகத்துடன், உண்டிக்கலயத்தை எடுத்து அதில் ஓர் எட்டணு பணத் தைப் போட்டுவிட்டு, அதே ஞாபகத்தின் நினேவுடனே ஒருவகைப்புட்ட எக்காளப் பெருமூச்சையும் விடுவித்தாள், நெடுமூச்சின் நெடுந்தடம் மாருமல் மறுகாமல் உள்ளே சென்ருள். மூடி திறந்து கிடந்தது கள்ளிப்பெட்டி ஒன்று. அதை அண்டினுள். தலேவசமாகத் தெரிந்தது கொட்டடி ரவிக்கை. அதில் குறுக்கு மறுக்காக மஞ்சள் புள்ளிகள் தட்டுமறித்திருந்தன. மேற்படி புள்ளிகள், புள்ளிமயில் வாகனனை ஓர் உருவத்தை அவளுள்ளாகச் சமைத்துக் காட்டியிருக்கவேண்டும்! ஆயாசம் மண்டிய கிலேசம், புகை நெருப்பானது. துயரத்தைச் சுமைதாங்கியாக்கி அவள் அதில் ஓய்வுபெற விழையாமல்,இனிய நினேவின் நிழலேத் தேடி ஓட்டியவள், கையுடன் எடுத்துச் சென்ற ரவிக்கையை இரண்டு கைகளிலும் பிரித்துத் திணித்து, மார்பகத்துச் சேலேத் துணியை நழுவவிட்டவளாக, அதே சடுதியுடன் ரவிக்கைக் கைகளே மடக்கிவிட்ட வண்ணம், தன்னில் தெரிந்த தன் எழில் மயக்கத்தில் பொட்டுப் பொழுது மயங்கிப் பின் தெளிவு கண்டு, மார்பகத்தில் துணி நிறைந்ததும் மனம் நிறைந்து, அப்புறம் 'மாராப்பு

முகதலவை' இழுத்து விட்டுக்கொண்டு, சுவரில் பதிந்திருந்த கண்ணாடித் துண்டத்தில் கண் பதித்துச் சொக்கிப் போன அஞ்சனமணிக் கண்களைக் கொக்கி போட்டு இழுத்துத் தன் வயமாக்கியவளாக, வெளிப்புறம் வந்தாள்.

நல்ல இருட்டு.

இருட்டினை ரசிப்பதற்குப் பழகியவள் அவள். சுடுகாட்டில் பாதிச்சாமத்தில் பேய்க் கணங்களோடு தானும் குந்திக் குமைந்து, விதியின் 'நாடி' பார்க்கத் தவம் இருப்பானுமே கம்பளத்தான், அவனுடைய வர்க்கமாகக் கூட அவளும் இடம் பெறலாம்-இருட்டினை அனுபவிக்கும் பாங்கிலே!

நாட்டாமைக்கார ஐயா சொன்ன பேச்சு கைக்குமெய்யான தாக்கலாத்தான் இருக்கோணும்; அப்பிடி மட்டுக்கும் விதியும் லவிதமும் விதிச்சிருந்தாக்க அப்பாலே, என்னை சுத்தியிருக்கிற ஏழைரை நாட்டான் பயணம் சொல்லிக்கிடாமக்கூட காடே வீடுன்னு பறிஞ்சிடும். ஆமா, ஆமா!...... ஆத்தாளே, ஒரு பொட்டை-ஒன்னை ஒடத்தவ இம்மாந் தூரம் பட்ட பாடு பத்தாதாங்காட்டி? எண்ணிக்கிடு மூத்தவளே, நீ கல்லு இல்லேங்கிறதை!... மத்தவங்க மனசுதான் செம்பூரங் கல்லாக்கும்! ... நீமூத்தவ!...'

ரவிக்கையைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் பஞ்சவர்ணம். ஆனல், ரவிக்கையை வியாழச் சந்தையில் வாங்கி வந்து கொடுத்த கோலப்பனைப் பார்க்க முடியவில்லை. கோலப்பனைப் பற்றி நினைத்தபொழுது. அவனது அன்பு ஒரு பக்கமும், ஆத்திரம் மறுபக்கமும் குரல் கொடுத்தன. அன்பின் காரணத்தைக் கண்டவளுக்கு, ஆத்திரத்தின் காரணத்தை இனம் காணமுடிய

வில்லே. தாபமும் தவிப்பும் சுழித்தோடின. கைவிளக்கைப் பொருதி வைத்துக்கொண்டு, குந்தினுள். எஞ்சியிருந்த சாயத் தண்ணீரைக் கலந்து ஒரு மிடறு குடித்து வைத்தாள். ஊறவைத்திருந்த அரிசியும் உளுந்தும் அவளுக்கு உண்டான கடமைகளைத் தொட்டுக் காட்டின போலும்!

மருக்கொழுந்துப் பூச்சரமும் தங்கச்சரடும் அவளுடைய அழகை வளர்த்தன; வாழ்த்தியும் இருக்க வேண்டும்!

அடுப்பின் ஒரு பக்கத்தில் நெருப்பை மூட்டி, உலை வைத்துவிட்டு மறுபகுதியில் ஆக்கின குழம்புச் சட்டியை வைத்துச் சுண்டவைத்தாள். பின்னுல், கடமையில் கண் பதிந்தது கடமைக்கும் கண் உண்டு!

நொடிக்கு நூறு தரம் அவள் ஏனே மணியக்காரர் ஆவுடையப்ப அம்பலகாரரை நினைத்துக் கொண்டாள். வாழ்க்கையின் அனுபவ முதிர்ச்சியினுல் நரை திரண்ட கேசத்தை நினைத்தாளா? ஐம்பது பிராயத்தைக் கடந்த அயர்வின் தயக்கம் பிடிபடாமல், நிதானமாக வாழ்ந்து வரும் அவரது இல்லறப் பாங்கைக் கருதினுளா? எதை நினைத்தாளோ, எதை மறந்தாளோ? ஆனுல் ஒன்றை மட்டும் மறக்காமல் நினைத்தாள். அந்த ஒன்றுதான், அம்பலகாரரின் விலை மதிப்பற்ற-தேடக் கிடைக்காத அன்பு எனும் செல்வம்!

ஆவுடையப்ப அம்பலகாரர் நேருத்திரமாகச் செப்பினுர்:

இந்தாப் பாரு பஞ்சவர்ணம்! எம் பேச்சை ஓங் காதிலே வாங்கிக்க. அன்னிக்கு ஊருப் பஞ்சாயம் வச்சேன், முத்தையன் வம்பு தும்பு நாளுக்கு நாள் வளர்ந்

துக்கிட்டுத்தான் இருக்குது. அவன் வினை அவனையே நாணச் செஞ்சிருக்கும் போல. அதொட்டித்தான் அவன் பஞ்சாயத்துக்கு மூஞ்சியைக் காட்டக்காணோம்!... இந்த வாட்டி வலுக்கட்டாயமா அவனை சமிச்சுப்புடலாம். அதுக்குள்ளார, ஒம்புட்டுக் கழுத்திலே தாலி ஏறிடுச் சின்னுக்க, அப்பாலே ஒனக்கு இன்னமும் அனையமான பலமும் துணையும் கெடைக்குமில்லே!— இவனுகளை பொறகு பழி வாங்கலாம், ஆனபடியாலே இதை பதிச்சுக் கிடு... ஆமா, பஞ்சவர்ணம்!... ஒன் கண்ணாலம் மூசு மூசுன்னு நடந்திடவேணும். அப்பத்தான் ஒனக்கும் நல்லது; எனக்கும் நல்லது. ஏன் தெரியுமா, ஆயி? ஒங் கண்ணை மட்டும் இளவட்டங்க குறிவைச்சுச் சுத்தலே. ஒன் கண்ணான கண்ணாலத்தைக் குறி வச்சுத்தான் கையிலே கவண்கல்லோடவும், மடியிலே பணங்காசோட வும், மனசிலே ஒம்புட்டு தங்கமான அழகு மூஞ்சியோட வும் சுத்தி அலையுறாங்க. ஒட்டன் வீட்டு குச்சி நாய்க்கும், தேசிங்கு மகராசர் பஞ்ச கல்யாணி குதிரைக்கும் வெளி லோகத்தைப் பத்தி எப்பவும் அக்கறை இருக்காதாம். அதாட்டம் ஒங்கதை!... ஆனபடியினாலே, முதலிலே ஒன்னைப்பத்தி நீ ஒரு முடிவுக்கு வந்து, ஒங் கண்ணாலத் துக்கு ஏத்த கல்யாண ராமரை நீ சாமர்த்தியமாத் தேர்ந்தெடுத்து, முகூர்த்தத்துக்கு வேளை குறிச்சுப்புடு. அந்த மூச்சிலவே, ஒங்கையிலே எம் பணமா நூத்தம்பது ரூவா காசு தாரேன். எனக்குன்னு ஒரு பொட்டைக்குட்டி இருந்திருந்தாக்க, அதுக்குச் செலவளிப்பேனில்ல, அதே பாசத்தோடதான் இந்தச் சமாசாரத்தைச் சொல்லு றேன். இதிலே ஊரு ஒலகம் ஒண்ணும் மூச்சுக்காட்ட வாய்க்காது. ஆனா ஒண்ணு! மாப்புள்ளையைத் தீர்மானம் செய்கிற பொறுப்பும் சொந்தமும் ஒனக்கேதான் உண்டு!..."

இறுதியில் களத்துமேட்டு வாய்மடையில் கங்காணப் புள்ளி கணக்கிடுவது போல சொன்ன பெரியவரின் உறுதி படிந்த பேச்சின் முடிவை வைத்து, தன்னுடைய முடிவைப்பற்றி எண்ணமிடலானுள் பஞ்சவர்ணம் ஆகவே, அவள் தன் கதையின் ஆரம்பத்தை எண்ணினுள். விணுத் தெரியாப் பருவமதில் நடந்து ஓடி ஒளிந்து கொண்ட பாசத்தின் கதை, தொடர்பு விட்டுப்போன ஏற்றக் கயிற்றின் அவிழ்ந்து பிரிந்த நார்த்தொங்கல் போல, இமை நடுவிலேயே அறுந்துவிட்டது. பிறகு, அவள் தன் பருவத்தின் வசந்த விழாக் கோலத்தை ஆராய்ந்தாள். பல இளவட்டங்களைச் சற்றே விலக்கி விட்டு, கோலப்பன் என்ற 'அசல் நாட்டான்' தோன்ருமல் தோன்றினுன். அவனுடன், அவன் பரிசளித்த அந்தத் தங்கச் சரடும் தோன்றியது. அதே இமைப்பில், நாகுடிச் சாமியாடியும் அங்கு தோன்றினுர்!

அந்நேரத்திற்கென்று,தெருநாய் வீரிட்டு அலறியது, 'கெட்ட காற்று' பட்டதும் அலறுமே கைப்பிள்ளை, அது மாதிரியாக!

விசுக்கென்று காட்டேரியின் பாய்ச்சலுடன் துள்ளி வந்தாள் பஞ்சவர்ணம். கைவிரல்களில் ஒட்டியிருந்த மாவு கீழே சொட்டுச்சொட்டாக வழிந்துகொண்டிருந்ததை லவலேசமும் சட்டை செய்யாமல் வாசலுக்கு வந்த போது, உள்விளக்கின் மங்கலான வெளிச்சம் ஆளைப் பிடித்துக் காட்டியது. "வாங்க சாமியாடி ஐயா!" என்று வரவேற்ருள். முடிபோடாமலே கிடந்த ரவிக்கையை 'பலக்க' முடிச்சிட்டாள். "குந்துங்க," என்ருள்.

வந்தவர் பதிலுக்கு, "ம்," என்று சொல்லிவிட்டு, "தங்கச்சியோ, கோலப்பனைக் கண்டு தாண்டிக்கிட்டுப்

போவலாம்னு ரோசிச்சு இங்கிட்டாலே நாடி வந்தேன். வந்தாக்க, ஆம்பளையைக் காணலே..." என்று பேசிக் கொண்டிருக்கையில், வெட்டுக்கறையானின் வடிவமெடுத்து, அத்துடன் பேச்சை பாக்குவெட்டி போடாமலேயே வெட்டித் தள்ளிவிட்டு, அதே சுருக்கில், "இந்தப் பொம்பளையைத் தான் காண முடிஞ்சிச்சுதாக்கும்!..." என்று செல்லமாகச் சொல்லி, வினய பாவத்துடன் சிரிப்புக் கூட்டி நின்ருள் அவள். "என்ன சங்கதியுங்க எம் மச்சான் கிட்ட?..." என்று கேட்டுவிடத்தான் 'துறுதுறுப்பு' பாய்ச்சல் காட்டிற்று. அதற்கு உரிமையுள்ளவள்தான். என்ருலும், நெஞ்சுக்கும் வாய்க்கும் எப்போதுமே ஒத்துப்போய்விட முடிகிறதா, என்ன?

"சரி. வெள்ளன கருக்கலோட வந்து அந்தப் புள்ளையாண்டானைக் கண்டுக்கிடுறேன். தலைக்கு மேலே உள்ளாப்பிலே ஒரு தவசல். அதான் வந்தேன்," என்று பூடகமாய்ச் சொல்லிவைத்தவராக அந்த மனிதர் அங்கிருந்து நகர்ந்தார்.

அவள் திரும்பி உள்ளே வழி நடந்தாள். தொங்கலில், கோலப்பன் படுத்துக் கிடக்கும் பாய் காலில் இடறியது. அது அவளது நெஞ்சயே இடறிவிட்டது.

அள்ளிக் கொட்டிய குதிர் நெல் அள்ளாமலே குறைந்துவிட்ட பான்மையில், அமைதியின் 'கங்காணப் புள்ளி'யில் இடுக்கல் முடுக்கல் கண்டு, அதன் விளைவாக, அவளது 'அயிரைமீன்'விழிகள் இரண்டும் நீந்தி விளையாட ஊற்றுத் தோண்டத் தொடங்கின!

# 12 கல்லில் அகலிகை

“ஏண்டி பஞ்சவர்ணம்! காதிலே விளுந்தாச்சா சேதி?...” என்று கொண்டையை இடது கைப்பெருவிர லால் முடிந்து, கொண்டை ஊசியைச் செருகிக்கொண்டே கேட்டாள் பவளக்கொடி.

“அப்பிடி யாதொரு துணுக்கும் வந்து சேரலேயே, பவளம்! என்னடி சங்கதி? சொல்லப்புடாதா? கோடி வூட்டு சுபத்திரைப் பொண்ணு சடங்காயிருச்சா? இல்லே, ஒனக்கு சிலட்டூர்ச் சம்பந்தம் சாடிக்கை தெகைஞ்சு வந் திருச்சா? சொல்லடி குட்டி!” என்று சிரிப்பைக் கக்கினாள் பஞ்சவர்ணம்; கைவளைகளை உருவிவிட்ட வண்ணம். தேரோட்டத்தன்று வாங்கி வந்த கத்தரிப்பூ வர்ணப் பொட்டும் ஜிகினாத்தூளும் அவள் நெற்றிக்கு கண் இல் லாத குந்தகத்தைப் போக்கி விலக்கின. இடம் பெயர்ந்து வழிவிட்ட விழிகளின் பார்வையின் தீட்சண்யத்தில், பவளக்கொடி சுற்றினாள். குடை ராட்டினத்துக்குக் காசு கொடுக்காமலே சுழன்றாள். பணம் மிச்சம்!

“நீ என்னடி ஆத்தே, ஊருச் சங்கதியைப்பத்தி தலையாரி கணக்கு ஒப்பிக்கிறது கணக்கிலே கேட்கிறே? நான் பேச வந்தது நம்ம ஊரைப்பத்தி இல்லே; ஒலகத்தைப் பத்தி யாக்கும்!”

“ஆத்தே பவளம்! அப்பிடிச் செப்புடி தில்லானே! ஒலகத்தைப் பத்திப் பேசறதை ஒங்க ஒண்ணு விட்ட அண்ணாச்சி வூட்டுப் பொறத்தாலே ஒண்டி நின்னு ஒட்டுக் கேட்டுப்புட்டு ஓடியாந்து எங்கிட்ட சொளத்தப்

போறீயாக்கும்? ம், சொல்லு! நீ வாயைத் தொறந்தா, அங்காடிக் கூடைக்காரி களத்து மேட்டுப் பொட்டலிலே ஆப்பக்கடை பரப்பின கதையிலேயில்ல ஒரேமுட்டா சேதிங்களைக் கொட்டித்தீருவே?..."

"அதுப்படி ஒண்ணும் நடவாது. அச்சப்படாதேடி ஆத்தே!"

"ஊம்; பொட்டன புட்டுவை சேதியை!"

"நம்ம நாட்டுக்கு ஆசைப்பட்ட வெள்ளைக் காக்கையை அடி மண்டையிலே அடிச்சுப் போடாம, அது மூளையிலே தட்டிவிட்டு, அவங்க சொந்த மண்ணுக்குக் கப்பல் ஏத்தி வச்சுப் புட்டாங்களாம் நம்ம நாட்டுக் கதரு வேட்டி காந்தி தாத்தா!... எங்க முத்தையன் அண்ணுச்சி தான், நீ ஊகம் வச்சாப்பிலே, சேதிக் காயிதத்தைப் படிச்சுச் சொல்லிக்கிணு இருந்தாக, காலம்பற, அந்திக்கு நம்ம கோயிலு பஞ்சாயத்துத் தரையிலே கூட்டமாம்; காங்கிரசுக் கூட்டமாம். ஊருப்பட்ட காலத்துக்கு நாம இத்தனை கோடிப் பேருங்களும் கொத்தடிமைகளாத்தான் இருந்திருக்கோமாம். இதுக்கூட அவுகசொல்லித்தான் எனக்கு மட்டுப்பட்டுச்சு," என்று அதிசய முத்திரை பதித்துப் பேசினாள் பவளக்கொடி.

"இந்த நடப்பைச் சொல்லத்தான் இம்மாந் தொலைவு கால் கடுக்க நடந்தாந்தியா? கெட்டுச்சுப் போ!... இந்தத் தாக்கலெல்லாந்தான் எனக்குப் பழங்கதை யாச்சுதே?... பூவத்தக்குடி ஆசாரி ஐயா கொண்டாந்து போட்ட சேதித் தாளிலேதான் அம்புட்டு வெசயமும் வெட்ட வெளிச்சமாய் போட்டிருக்குதே? ப்பூ...!" என்று அகம்பாவத்தைக் காட்டியும் காட்டாமலும், தன்னைச் சமாளித்துப் பேச்சுத் தொடுத்தாள் பஞ்சவர்ணம். அந்த நாளென்றால், தனக்

குத் தெரிந்த விடுதலையின் சரித்திரத்தை அத்துபடியாக ஒப்புவித்து விட்டுத்தான் வாய் எச்சிலைத் துப்புவாள். ஆனால், இப்பொழுது அவளை வந்தணைந்த அனுபவங்கள் அவளுடைய நெஞ்சத்தின் தற்பெருமைக் கனலை அணைத்து விட்டிருந்தன.

"ஒனக்கு என்னடியாத்தே நாலுஎழுத்துப் படிச்சவ. நீ இதுவும் பேசலாம். இன்னமும் பேசலாம். புலந்திரன் களவுமாலை, தேசிங்கு ராசன் கதை, மதனகாமராசா கதை அல்லாத்தையும் ராகம் போட்டுப் படிச்சுக் காட்டி, படிச்சுக் காட்டியே ஊரு வயசுக் குட்டிங்களையெல்லாம் கைக்குள்ளார போட்டு மடக்கி வச்சுக்கிட்டிருக்கியே ? அது கெடக்குது. ஆமா, ஓம் மச்சான்... அதான் புதுமச்சான் காரரு அவங்க ஊரு நாட்டுப் பக்கத்திலேருந்து இன்னம் திரும்பலையா ? யாதாச்சும் விசயம் காத்திலே பட்டு வந்திச்சா?..அஞ்சாறு கிழமை படிதாண்டிப் போயிருச்சே பஞ்சவர்ணம் ?..."

இந்த ஒரு வினா, ஒன்பது வகைப்பட்ட உணர்ச்சி பேதங்களை எழுப்ப, அந்த முக மாறுதலின் காரணமாக, பஞ்சவர்ணத்தின் கவர்ச்சி மிக்க கண்களும் உதடுகளும் துடிக்கத் தொடங்கின. அத்துடிப்பை வெளிக்காட்டாமல், ஆனால் குமிண்சிரிப்பை மட்டும் வெளிக்காட்டியவாறு அவள் பேசலுற்றாள்:" நீ இந்த ஊரிலேதானே இருக்கே? ஒனக்கு ஒண்ணும் படலையா? 'அவுக' வந்துக்கிட்டும் போயிக்கிட்டுந்தான் இருக்காக, ஊரிலே அறுப்பு, கங்காணம் அல்லாம் சுமந்து கிடக்குதாம். எல்லாம் முடிஞ்சடியும், எங்க கண்ணாலம் நடக்கப் போவுது. நம்ப ஊரு மணியக்கார ஐயாகூட போன மாசம் எனக்கு ஒத்தாசை செய்யிறதாச் செல்லிப் போனாங்களே !..."

"ரொம்பச் சந்தோசம், பஞ்சவர்ணம். அப்பன்ணு எனக்குக் கண்ணுலப்பறுக்கை வெரசாவே கெடைச் சிடும்னு சொல்லு!"

"கண்ணுலத்துக்கு ஊரு ஒக்க ஒண்ணு கூடாத வங்க கழுசடைன்னு நம்ப பக்கத்திலே ஒரு பேச்சு இல்லியா? அதொப்ப நாமளும் நடக்கமாட்டமா?... ஒனக்கு மட்டுமா விருந்து? ஊரு விருந்து வைக்க வேணும்னு கூட எங்க மச்சான்காரரு ஆசைப்படுருரு. அவுகளுக்கென்ன, களத்துமேட்டு நெல்லு இன்னம் நாலுவூட்டுக் கண்ணுலத்துக்குக் காணுமாமே?..."

"ஆத்தாடி! நீ கொடுத்துவச்ச புண்ணியவதி தான்.

ஆமா, நீ அந்த ஆம்பளையை முன்னவே அறிவியா?"

"முன்னே அறிஞ்சாத்தான் நேசமா?"

"அதுவுஞ் சரிதான், பஞ்சவர்ணம்! முன்னே அறிஞ் சவங்க நேசம்தாம் காத்தோட காத்தாப்பூடுச்சே?"

"பழங்கதை அத்தோட தொலையட்டும்?"

"அதுவும் மெய்தான், இந்தக்கோலப்பன் ஆம்பளை யைப்பத்தி எங்க முத்தையன் அண்ணச்சியும் அது சேக் காளிங்களும் புரளி பண்ணிணுங்களே, அதைப்பத்தி ஒனக்கு ஏதும் கவலை இல்லை தானே?..."

"ஆமா, நான் ஏதுக்குக் கவலைப்படணும்? இந்த மச்சான் நல்ல ஆளு இல்லைன்னு, போன சந்தைக்கெடு வப்பக் கூடத்தான் ஒரு சேதி விழுந்திச்சு, எனக்கு என்னமோ, இந்த மச்சான் பேரிலே ஒரு நம்பிக்கை விழுந்திருச்சு. எங்க கஷ்டமெல்லாம் இவுகளாலேதான் விடியப்போவுதின்னு எனக்கு ஒரு திடம்."

"மெய்தான், மெய்தான். மனசுகொண்டது மாமாங்கம், ஆமா, ஒருவாட்டியாச்சும் உம் புது மச்சான் ஊருக்குப் பயணம் போய் வந்தியா?"

"இல்லே, இல்லே. கண்ணாலம் கட்டி முடிஞ்சடியும் தான் அழைச்சுக்கிட்டுப் போகும். இப்பிடித்தான் அவுக அப்பவேபுடிச்சு சொல்லி வாராங்களே!...

"ஆமா, ஆமா. நீ கெட்டிக்காரி. கெட்டிக்கார ஆம்பளேக்குள்ள புத்திசத்தியும், அனுபவப்பட்ட பொம்பளேக்கு உண்டான யுத்திரோசனேயும் கொண்டவ நீ. உன் மச்சான் மனசைப் பார்த்துக்கிட்டவளுக்கு, அவுகளோட ஊரைப் பார்த்து என்ன ஆகப்போவுது?... என்னமோ. ஆத்தா பெரியவ யாதொரு விக்கினமும் வில்லங்கமும் வைக்காம உன் கண்ணாலத்தை மோக்களாவா கொட்டு மோளத் தோட நடத்தி வைக்கோணும். அப்ப, நான் வரவா, பஞ்சவர்ணம்?" என்று விடை வாங்கிக்கொண்டாள் பவளக்கொடி.

பவளக்கொடி போனதும், தொல்லேகளின் தோழி போனதாக அவள் பொருள் கொள்ள வில்லேயா? அடியில் சகதி தேங்கிக் கிடந்தாலும், மேல் பரப்பில் தெளிநீர் துலங்கக் காணப்படுமே சிற்ருேடை, அதைப் போன்று தான் இருந்தாள் பஞ்சவர்ணம்—இந்தச் சில நாட்களாக! ஆனால், ஓடையில் கல் விழுந்தது. கல்லானாள் பவளக் கொடி. அதன் பலனாக, பஞ்சவர்ணம் கல்லாகி விட்டாள்.

கல்லான அகல்யாவின் சாபவிமோசனத்துக்கு மட்டுந்தான் ஸ்ரீ இராமபிரானின் பாததூளிகள் பயன் ஈந்தனவோ?...

# 13 கொம்புத் தேன் அவள்

கல்லினுள்ளே உறைந்திட்ட அகல்யைக்கு விடி பொழுது உதித்தது.

அதுபோல, பஞ்சவர்ணமும் ஒருநாள் இல்லா விட்டால் ஒரு நாள், உதயத்தின் செக்கர் ஒளியைத் தரிசிக்கத்தான் போகிருள்! உண்மை மொழியா இது? அவ்வாறுதான் பூவத்தக்குடி காந்திஜி சங்கக் காரிய தரிசி சோமசுந்தரம் நம்பினர். பஞ்சவர்ணத்தின் நல்வாழ்வுக்காக தெய்வத்திடம் தண்டனிட்டு 'நேந்து' கொண்ட புண்யாத்மாக்களில் அவரையும் சேர்க்க வேண்டும்.

நல்லவர் பொருட்டே மழை.

ஆவணத்தாங்கோட்டைச் சார்பிலும் மழை பொழிந் தது. பின்னர், அதுவே கால மழையாகவும் ஆனது.

துன்ப அனுபவங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்த மட்டில் வேண்டுமானல், நஷ்டக்கணக்கு ஆகும். ஆனல், இதே துயரக் கீற்றுகள் இல்லையென்றல் வாழ்வில் சுமை ஏது, சுவை ஏது? இவை அத்தனையும் லாபப்புள்ளியில் அல்லவா எழுதப்பட வேண்டும்?

அப்படிப்பட்ட நினைவை உருவாக்கத் தெம்பு பெரு விட்டால் கூட, அப்படிப்பட்ட நினைவு தன்னையும் அறி யாத விதத்தில் தன் குறுதி நாளங்களிலே குத்திட்டு நிற்பதைப் பரவலாக உணராமல் இல்லை பஞ்சவர்ணம்.

'முன்னேக்கு இப்ப நான் எம்புட்டோ மாறிப்புட்டே ணுக்கும்!' என்று அவளுக்குள்ளாகவே இத்தகையதொரு நினைப்பு சில தினங்களாக அவளுள் எழுந்து பரவிக் கொண்டுதான் இருக்கிறது.

தேர் புறப்பட்டால், அது நிலைக்கு வராமல் தப்ப முடியுமா? ஆனால் காலத்தேர் அப்படி நிலைக்கு வருவது சாத்தியமா?

'இந்த நாப்பது, நாப்பத்தஞ்சு நாளும் எப்பிடித்தான் மாயமா மறஞ்சுதோ? புரியவே மாட்டேங்குதே?' என்று பூத்தொடுத்த பூவை, மறுவினாடியில், 'இத்தனை நாளிலே ஒரு வாட்டி கூட மச்சான் வரக் காணலியே?' என்று எண்ணமிட்ட தருணத்திலே, நினைவுப்பூவின் வாடையில் துயரத்தின் நெடிதான் நொடியாய் அமைந்திருந்தது. நொடியில் குடம் சாய்ந்த தட்டு வண்டியாளுள் அவள். குப்புற விழுந்தவள் முகத்தைத் தடவிக்கொண்டு எழுந் ததைப்போல இருந்த இருப்பிடத்தினின்றும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

நல்ல வெயில் பொசுக்கிற்று.

வாசல் தடத்தில் வழி மறித்து நடந்த பவளக்கொடி யைக் கண்டதும், அவள் தன் தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டாள். 'அன்னிக்குப் புளுகினது போதும். அதாலே எனக்கு வந்த மண்டைக் குத்தும் நெஞ்சு வலியும் போதும். இப்ப வேறே வந்து எம்புட்டு உசிரை வாங்கப் போரு....!'

ஐந்து நாட்களாக அவளுக்கு மேலுக்குச் சுகமில்லை. பாயும் படுக்கையுமானுள் அவளுக்குத் தோழியான கோவிந்தம்மா, அவளது தொழிலுக்கும் தோழியாளுள்.

சுட்டு வைத்துச் சென்ற இட்டலிகளில் மிச்சம் மீதி இருந்ததைத் துகையலுடன் குழப்பி, இரண்டு கவளமாக உருட்டிப் போட்டு, வெந்நீர் குடித்தாள். 'மச்சான் ஏன் இங்கிட்டு வரலே ? எம்மேலே கோவமாத்தான் இருக் கோணும். அதுக்காவ, இப்பிடித் தண்டு முறிஞ்சாப்பிலே, உருமாலே சாத்தின சன்னுசிச் சாமியா சொந்த பந்தத்தை விட்டுப்புட்டுப் பறிஞ்சிடலாமாக்கும் ? கண்ணுலத்துக்கு முந்தி இப்பிடி கோபப்பட்டு போனது சரி, மாப்பிள்ளே முறுக்குன்னு, பின்னே லேசா ?....ஆனு, கண்ணுலம் கட்டினதுக்குப் பொறகாலே இதே ஆம்பளே என்னே இதுபோல விட்டுப்புட்டுப் பறிஞ்சிராதிங்கிறது என்ன நிச்சயம்?... ஊக்கும்!...அப்படிக்கொத்த ஆசாமி இல்லே எங்கமச்சான் !... நல்லவுக... ம் !...

இந் நினைவு முகிழ்த்ததற்கு நேரான பொழுதில், பஞ்சவர்ணம் அன்றைக்கு-மனிதாபிமானம் கொண்டு முத்தையனின் இல்லம் நோக்கிப் பாய்ந்த அன்றைக்கு கோலப்பன் வெஞ்சினம் பூண்டு அவளிடம் சொன்னு னல்லவா, அந்தப் பேச்சு-"ஒன்னே நான் திரவுசாப் புரிஞ் சிக்கிட்டேன் !" என்று கோபம் கொந்தளிக்கப் பேசிய அப்பேச்சு தோலுரித்துக் கொண்டு எதிரொலி பரப்பியது.

வந்தவர்கள்-போனவர்களிட மெல்லாம் என்னென் னவோ 'சாக்குப் போக்கு' சொல்லித் தப்பித்தாள் பஞ்ச வர்ணம். "மச்சானுக்கு அறுப்புக் காலம்," என்ருள் ஒருத்தி யிடம். "அவுகளுக்குக் காயலாம் ?" என்ருள் இன்னெருத் தியிடம். "பொறக்கு மாசம் ஆத்தா சந்நிதானத்திலே எங்க ரெண்டு பேருக்கும் கண்ணுலம் !" என்று மூன்ரும் நபரிடம் இயம்பினுள்.

அனைத்தையும் நம்பினார்கள். நம்ப வேண்டியவர்கள் ஆனார்கள்.

ஏனென்றால், கோலப்பன்–பஞ்சவர்ணம் நேசம் அப்படி; நினைவு அப்படி; நடப்பு அப்படி!

"ராத்திரிப் பொழுது போக, சொச்ச நேரமெல்லாம் எனக்கு எம்மச்சான் இல்லாட்டி பொழுதே ஓடாது," என்று கோலப்பனுக்கு 'மச்சான்' என்று உரிமைப்பட்டம் கொடுத்துப் பேசித் தீர்த்த காட்சிகள் ஒன்றா, இரண்டா?

ஓய்வாக ஓலைப்பாயை எடுத்துப் போட்டுக் குந்தினாள் அவள். ஓய்வில்லாமல் சுற்றிக்கொண்டிருந்த செக்கடிச் சத்தம் அவளது மன உளையில் நசுங்கியது. 'ஆமா மூக்குடிமச்சான் எப்படிப்பட்ட ஆளு? ஒன்னும் தடயம் புரியலையே? அது காசுபணம் இல்லாத ஆளாணுக்கூட பாதகமில்லே? ஆ௵. ஆம்பளை நாக்குச் சுத்தம் உள்ள தாயிருந்தா அதுவே போதுமே!... பின்னே, எதுக்கு அது அப்பைக்கு அந்த முத்தையன் மச்சான் செத்துப் பூட்டதா பொய் பேசிச்சு? பொறுமையிலவா?... ம்... அதோட மூஞ்சியை முதல் முதலிலே கண்டடியும் எனக்கு ஒரு மயக்கம் விளுந்திடுச்சு!...ம்!...'

அவள் ஊருக்குப் பயந்தாள். அதுக்குச் சமமாக தன் மனத்துக்கும் பயந்தாள். 'என் குட்டு அம்பலமாகிப் புடாம இருக்கோணுமே சாமி!" என்று கும்பிட்டாள். யாருக்கும் தெரியாமல் சந்தைப் பேட்டையில் வாங்கி வந்த ரவிக்கைத் துண்டை வைத்துக்கொண்டு, "எம் மச்சான் ஆள்வசம் குடுத்து அனுப்பியிருக்காக," என்றாள். அப்பொழுதுதான் அவளைத் தேடிக்கொண்டு நாகுடிச் சாமியாடி வந்து சேரலானார். 'இந்த ஆளு-

மலே முழுங்கி மகாதேவன். எதுக்கு எம் மச்சானைத் தேடிக்கிட்டு வராரு? என்று நொடிக்கு நூறு மூச்சு ஐயப்படலானாள்.

அவள் கேட்ட கேள்விக்கு, "சும்மாதான் கோலப்பனைத் தேடிக்கிட்டு வந்தேன். அந்தப் புள்ளேயோட காணிகரை லாவாரம் விசயமாய்ப் பேசவேணும். அவ்வளவுதான் துப்பு." என்று அடைத்து விட்டார் அவர்.

பிறகு, அடுத்த நான்காம் நாள், அவள் சாமியாடியை வலியத் தேடிச் சென்று, தனக்கும் தன் நேச மச்சான் கோலப்பனுக்கும் இடையே முளைத்திட்ட பிணக்கின் கதையை விஸ்தாரமாக விவரித்தாள். அத்துடன் அவள் இன்னொரு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தாள். "நீங்க எனக்குச் சொந்தம் சோவாரிக்காரக. அதாலே, மனந்துணிஞ்சு ஒரு காரியத்தை ஒங்க தோளிலே ஒப்படைக்கப்போறேனுங்க. எனக்காகப்பரிஞ்சு பேசி, எம்மச்சான் கோவத்தை ஆத்திக் கையோடவே இட்டுக்கிட்டு வந்துப்புட வேண்டியது ஒங்க பொறுப்பு, ஆமா, சொல்லிப்பிட்டேனுங்க," என்றாள்.

சாமியாடி சாமியாட்டம் போட்டுக் காரியத்தைத் தீர்த்து விடுவார் என்று முக்காலும் நம்பினாள் அவள்.

நம்பிக்கை வீண் போவதில்லேதான்!

போனவர் திரும்பினார். போன மச்சான் திரும்பி வந்தால்தானே பூ மணம் கமழ்ந்து கொழிக்கும்?

"என்னாங்க?..."

"ஒண்ணும் பதட்டத்துக்கு இடமில்லே!"

"பொறகு?..."

"உம் மச்சான் காதிலே உம் மனசான மனசையே புட்டுவச்சுப் பேசினேன். அந்த ஆளு பொறி கலங்கிப் போய்க் குந்திட்டாரு. உம்மேல மன வருத்தம் துளியும் இல்லையாம். தண்ணி இறவையப்ப கால் சுளுக்கிக் கிடுச்சாம். அதாலே அங்கிட்டு இங்கிட்டு ஒரு தப்படி நகர ஏலலையாம். மத்தப்படி, யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லையாம். படிச்சுப் படிச்சுச் சொல்லிச்சு," என்றார் கிழவர்.

"வேற எதுவும் மூச்சுக் காட்டலைங்களா?"

"ஒனக்கு என்னமோ தங்கத்தாலிச்சரடு தந்தாராமே, அதைப் பத்திரமாக் காப்பாத்தி வச்சுக்கிட வேணுமாம். இதையும் நினைப்பூட்டச் சொன்னாரு!"

"நல்லதுங்க!..."

"அப்பறமா, இந்தப் பத்து ரூவாக் காசை ஒங் கையிலே நீட்டச் சொன்னிச்சு!"

"மெய்யாலுமா?"

"பின்னே?"

"அல்லாம் நல்ல சகுனந்தானுங்க. ஒங்க முகராசி ஒசத்திதானுங்க!"

"இன்னெண்ணு!"

"சொன்னாக் கேக்கிறதுக்குத் தவம் இருக்கேனுங்க!"

"ஐப்பசித் தொடக்கத்திலவே கண்ணாலத்துக்கு 'டும் டும் மோளம்' கொட்டிப்புடணும்னு ஒத்தைக் காலாலே நிக்கிறாரு!" சொல்லாடல் நிகழ்த்திய வேளையில் ஏனோ அவர் முகம் இருளடைந்தது.

"ஆமாங்க. இன்னொரு காலுதான் சுளுக்குப் புடுச்சுப்போச்சே! பாவம், ஒத்தைக் காலாலே தானுங்களே நிக்கவேணும்?"

நாகுடிச் சாமியாடி குபீரென்று சிரித்துத் தள்ளினர். "நல்லாப் பேசுறீயே, தங்கச்சி, கிச்சுகிச்சுத் தாம்பாளம் மூட்டுருப்பிலே!"

பஞ்சவர்ணத்திற்கு தன்பேச்சே இப்பொழுதுதான் பிடிபட்டது. நகைச்சுவையின் ரசிப்பில் பிடிபட்ட பிடியாளுள். மதமதப்பு ஓங்கியது; தன்னடக்கம் மிஞ்சியது.

கொம்புத்தேன் அவள்!

வந்தவர் புறப்பட ஆயத்தப்பட்டார். சுருக்குப் பையில் கிடந்த வெற்றிலைக் கிழிசலை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு பாக்கையும் சுண்ணும்பையும் துளி துளியாகப் போடலானுர். தலைகீழ்ப் பாடமான ஆசாமி போலிருக்கிறது!

பொழுது பட்டது.

புரட்டாசி வெள்ளியென்ருல், சொக்கப் பச்சைக்கு உள்ள மதிப்பு.

அகல் விளக்கு ஏற்றிவைத்தாள் பஞ்சவர்ணம். பூவத்தக்குடி நடராசர் கோயில் திருநாள் மண்டகப்படியில் பிட்டுக்கு மண் சுமந்த விஷேசத்தைக் கண்டு வர வேணுமென்று அவள் தன் தோழிகளுடன் திட்டம் புனைந்திருந்தாள். குளித்து முழுகி, புதுசு உடுத்தியிருந்தாள். கன்னியாகுறிச்சி மஞ்சள் காவி காவியாக முகத்தில் ஏறியிருந்தது. இப்போதெல்லாம் பிடிசோறு கூடுதலாகவே உண்ண ஆரம்பித்தாள். எண்ணம் சுமக்கவில்லையெனில், பசி சுமக்கத்தானே செய்யும்?...

கோலப்பனை நெஞ்சிலும் நினைவிலும் ஏற்றி வைத்து, ஏற்றம் அமைத்து, கைதொழுது, களிப்புச் சிந்து பாடி வந்த பைங்கிளியின் விழிவீச்சில் அரிக்கன் விளக்கின் தீபஒளி பட்டுத் தெறித்து விலகியது. வெற்றிலை வாயைக் குதப்பிக்கொண்டே வாசலுக்கு வந்தாள். இளவட்டம் ஒன்றின் முகம் நிழல் படமாகத் தென்பட்டது. ஆளை இனம் காண முடியவில்லை அவளால். அந்த உருவம் வாசலில் நின்ற வேப்பமரத் தடியில் நின்றது. உடன் வந்தாள் முதியவள் ஒருத்தி. அவள் வீட்டின் முகப்புப்படிக்கட்டை மிதித்துக்கொண்டே "ஆயி, பஞ்சவர்ணம்!" என்று குரல் கொடுத்தாள்.

கைவிளக்கும் கையுமாக, மலர்ச் சிரிப்பும் மைவிழியுமாக விரைந்து வந்த பஞ்சவர்ணம், அங்கே கிழவி சீரங்கம் நிற்கக் கண்டாள்! ஆமாம், சீரங்கம் பெற்ற பிள்ளைதான் முத்தையன்.

"யாரு, அயித்தையாங்கிறேன்? வாங்க, வாங்க, தடயம் காட்டாம வந்திருக்கீகளே? சொல்லிவிட்டிருந் தாக்க, நானே ஓடியாந்திருக்க மாட்டேனு, பின்னே?"

"அதுக்கெல்லாம் நேரம் காலம் வேணுமா, ஆயி?... இப்ப நாந்தான் ஒன்னைத்தேடி வரவேணும்! இதான் நாட்டு வளமை!" என்று சொல்லி வந்தாள் முதியவள்.

அப்போது அவள் ஏந்திவந்த வெற்றிலை பாக்கு, பழச்சீப்பு, கற்கண்டு, சேலைமடி ஆகியவற்றின் கொத்துப் பூவான அந்த மரவைத் தட்டைப் பார்த்தாள் பஞ்ச வர்ணம். அவளுக்கு ஒரு கணம் திகீரென்றது.

மறுபொழுதில், கண்காணாத சந்துஷ்டி ஓடிவந்து அணைத்துக் கொண்டது. 'என்னைப் பொண்ணு கேட்கிறதுக்கில்ல இந்த அயித்தை வந்திருக்கிருப்பிலே படுது!... அப்படின்ன, வாசல்புறத்தாலே தெரிஞ்ச இளவட்டம் அந்தப் பழைய மச்சான்தான் போலே!...' என்று சிந்தித்து முடித்திருக்கமாட்டாள். அதற்குள் கங்காணி சம்சாரம் சீரங்கம் நீட்டிய மரவையைக் கை ஏந்தி வாங்கிக் கொண்டு, அப்படியே தன்னை மறந்தவளாக நின்று கொண்டிருந்தாள் !

# 14 கம்பசித்திரம்

கங்காணி காத்தமுத்துச் சேர்வைக்காரருக்கு வாழ்க்கைப்பட்டு, முந்தானை விரித்த சீரங்கம், அந்த நிகழ்ச்சிக் கனவை எண்ணி எண்ணிப் பெருமைப்பட்டு, அந்தப் பெருமையிலேயே, காலத்தையும், காலன் கொண்டு சென்ற தன் கணவரையும் பற்றிய நினைப்பை மறந்து, 'சிவனே' என்றுவாடிக்காட்டு மோர்க்காரி சுவரில் கரிக் கோடு கிழித்து நாட்களைக் கணக்கிட்டுச் சொல்வதைப் போன்று,அவளும் எஞ்சியிருக்கும்தன்னுடையமிச்சம்மீதி நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில், இப்படிப்பட்டதொரு சுபச் சடங்குக்கு தான் துணிகாரம் பூண்டு வந்ததானது அவளுக்கே அதிசயமாக இருந்தது; அதேமாதிரி, அவதியாகவும் இருந்தது.

'கட்டுக்கழுத்திதான் பொண்ணு கேக்கப்போகையிலே வெத்தலை பாக்குத் தட்டுக்களைக் கொண்டாரது ஊரு வளமை. அதுப்படி செய்யிறத்துக்குத்தான் நானும் ரோசிச்சிருந்தேன். அதுக்காவத்தான், எங்க கோவிந் தம்மாவையும் ஒரு குரல் கூப்பிட்டேன். ஆனுக்க, எம் மவன் என்னையேதான் தட்டுக்களை சாடாவும் தூக்கியாரச் சொல்லிப்புட்டான். அழிஞ்ச நெத்திப் பொட்டு மேலே அவனுக்கு நம்பிக்கை அத்துப் போனுக்கக்கூட. அழியாத எம்பிட்டுப் பாசத்துமேலே எம்புள்ளைக்கு அசலான நம்பிக்கை இருக்குது. அதுமட்டும் நல்லது தான். ஊம்; சரி!... வந்த காரியம் கை கூடி வந்துப் பிடுச்சினுக்க, அப்பாலே, எங்கட்டையும் வரிசாக் காட்டிலே வெந்துப்பிடும். எம் மகனை மகனுக்கும் இந்தப்

பஞ்சவர்ணத்து பேரிலே இருக்கிற 'மாகை'யும் வேப்பிலே அடிச்சதாட்டம் சமந்தரையாகிப்பூடும். ஆத்தாதான் கடைக்கண்ணு தொறக்கணும்!'

அம்மன் கோயில் ஊருணியில் மீன்பிடிப்பு நடக்கும் பொழுது, கரைகட்டி, திட்டுகட்டி, லேஞ்சுவிரித்து, அதில் 'நரிப்பிரி' வைத்துப் பிடித்த மீன்களைக் கொட்டினுல், அவை ஒவ்வொன்றும் முரண்டு பிடித்துச் சீண்டிருவம் செய்தபடி துள்ளித்துள்ளிக் குதித்து விழும் ஜாடையில், வயது வந்த கிழவியின் நினைவுகள் அமைந்திருந்தன.

சீரங்கத்துக்குச் சுய உடம்பு வந்தபோது, பஞ்சவர் ணம் சுய உணர்வை இழந்து விட்டிருந்தாள்.

வாழ்ந்தவளின் கூர்ப்புப் பார்வைவாழவேண்டியவளை 'பிறி' கட்டி அணைத்தது. பஞ்சவர்ணம் ஆடினுல்தானே? அசைந்தால்தானே ? அவளுடைய பூங்கரங்கள் வெற்றிலைபாக்குத் தட்டுக்களை ஏந்தியது ஏந்தியபடியே இருந்தன.

நீராணிக்கம் முடிந்ததும், உழைப்பாளி ஓய்வு கொள்ளும் நேரம் கழிந்திருக்கும்.

தூண்டிவிடப்பட்டிருந்த அரிக்கன் விளக்கின் ஒளி, பஞ்சவர்ணத்தின் கனவுகளைத் தூண்டிவிட்டதோ என் னவோ? கெட்ட கனு கண்டு திகைத்துத் தடுமாறித்திசை கெட்டு விழிப்பதற்கு அனுசரணையாக, அவள் திகைப் பூண்டை மிதித்தவளாகத் தட்டுத் தடுமாறினுள். முக மெங்கும் வேர்வை. கச்சைப்பக்கம் நனைந்துவிட்டது.

பஞ்சவர்ணம் கிழவியைப் பார்த்தாள்.

முதியவள், இளையவளை நோக்கினுள்

பார்வைக்குப் பார்வை 'பதவிசு' மாறியிருந்தது.

கொணர்ந்தவள் கொவ்வைப்பழமானாள்.

ஏந்தியவள் இலந்தைப் பழமானாள்.

" ஆயி பஞ்சவர்ணம்! உள்ளுக்குத் தாய்வூட்டுக் குள்ளாற வச்சுப்புட்டு அகல் ஏத்திவச்சு கை தொழுது புட்டு வா. சல்திபண்ணு. பதமா, பதனமா சோத்தங் காலை தூக்கி வச்சுக்கிட்டு நட. நம்ம சாதிசனங்க கட்டிக் காத்துவந்த நாட்டு நடப்பு அல்லாத்தையும் தவிடுபொடி யாக்கிப்புட்டுத்தான் இப்பைக்கு நானு இங்கிட்டாலே வந்திருக்கேன். தாம்பாளத்துக்கு அடியிலே வெத்திலை பாக்குக்கு மேலே நூறு ரூவாத் தாளு ரெண்டு கைவிரல் வீக்கத்துக்குக் காணும்படியா வச்சிருக்கோம். இதான் எங்கவூட்டுப் பரிசப்பணம். அக்கரைச் சீமையில எட்டுக் கண் விட்டெறிய, நகரம்-பாலைவனம் பானையப் பட்டுக்கு ஒசத்தியா வாழ்ந்து, இக்கரைச் சீமைப்புறத்திலே கியாதி கட்டி வாழ்ந்த கங்காணிவூட்டு மருமகப் பொண்ணு வரப் போற ஒனக்கு இதுக்குக் கொறைஞ்சா நாங்க பணம் மொய் எழுதுவோம்? ஒங்கதை காரணங்களை மறந்துப் பிடு; இனிமேலே, எங்கவூட்டு நடப்புக்கரைக்குத் தான் ஒனக்குப் பொளுது காணும். சரி, சரி, நானு வயசு போனவள்; தொணதொணன்னு பிளுத்திக்கினு நிக்கிறேன். ஒங் காலு வலிக்கும்; போயிட்டுத் திரும்பு' சுருக்கண வா; தம்பி இன்னும் ரவ்வைக்குச் சோத்துப் பருக்கை உண்ணலலே. இந்த விசயம் பொட்டியும் போழையுமா முடிஞ்சிதின்னுத்தான் அதுக்கு ஒடம்பிலே உசிருஒட்டும். மண்ணிலேவும்ஒட்டுதலைஉண்டாக்கும்!..."

விட்டுக் காட்டாமல், ஒட்டிக்காட்டிய அத்தை உறவுக் காரி, இது பரியந்தம் காசி-ராமேசுவரம் பயணம் சென்றி

ருந்தாற் போன்று 'கம்'மென்று இருந்துவிட்டு, இப்பொழுது வந்து கதை படிக்கக் கேட்டதும், பஞ்சவர்ணத்துக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் புரியவில்லை. கையில் ஏறியிருந்த தட்டுகள் நெஞ்சில் பளுவை ஏற்றின கண்களில் பட்ட ரூபாய்த் தாள்கள் கருத்தில் சுட்டன.

ஒன்றைக் கண்டாள்; ஒன்றை எண்ணினாள். 'இந்தா தங்கச்சி! பத்து ரூவாக்காசு இருக்குது. உம்புட்டு மூக்குடி மச்சான்காரர் எம் மூலமாக் குடுத்துவுட்டுச்சு!' என்று கட்டி வெல்லப்பாகுச் சேதியை ஒட்டி வைத்துச் செப்பிச் சென்ற நாகுடிச் சாமியாடியைப் பற்றின ஞாபகம் அவளைப் போர்த்தியது. தட்சணமே, அவளுக்கு மெய்ச்சிலிர்ப்பு உண்டாயிற்று.

"அயித்தைகாரங்களே!"

"என்ன மருமகப் பொண்ணே மவராசி!"

"சொந்தம் அப்பாலே குந்தட்டும். இப்ப வெசயத்துக்கு வருவமா?"

"சொந்தம் குந்தியிருக்கிறதாலதானே இப்ப நானு விசயம் பேசிக்கிட காத்திருக்குறேன்!"

"வந்து..."

"இந்தாப்பாருலே!... போயி அல்லாத்தையும் உள்ளாற எடுத்து வச்சுப்புட்டு வந்து, எங்கிட்ட கொட்டுக்கடையை எடுத்து நீட்டி துண்ணறு வாங்கிப் பூசிக்கிட்டு, அப்பறம் ஆயிர ரூவாப் பணத்தை எடுத்து அஞ்சறைப் பொட்டியிலே போட்டு மூடிப்புட்டு ஓடியா. ரவ்வைக்கு எங்கவூட்டிலே தான் ஒனக்கு விருந்துச் சாப்பாடு மோக்களாவா ஆக்கி வச்சிருக்கேன்!"

"அயித்தை!"

"சொல்லு, தாயி!"

"நானு ஒங்க வூட்டுக்கு மருமகளா வரவேணுமின்னு ஒருகாலத்திலே சொப்பனம் வளர்த்தது மெய்தான். பொய் சொல்லநாக்கு மடங்காது. ஆனா, இப்பநடப்பு தடம் மாறிப் போச்சு. ஒங்க சுருட்டை முடிக்கார ராசா ஒரு காலத்திலே என்னை நேத்திர மாட்டம் நேசிச்சு, எம்மேலே இச்சை வச்சு நடந்திச்சு, ஆனா, கெட்டதுங்க சவகாசத்திலே அதுக்குப் புத்தி மாறிப்போச்சு. மனசு மாறுறவுங்களை கட்டிக்கிட வேணும்னு எனக்கும் மனசு மாறிப்புடுச்சு. இப்ப எனக்கு ஊரு, உலகம், சாமி, சனம் சத்தியம், தண்ணி அல்லாமே எங்க மூக்குடிக்காரதான். ஐப்பசிலே கண்ணாலம். இந்தாப்பாருங்க, அவுக குடுத் தனுப்பிச்ச இந்தக் கொஞ்சப் பணந்தான், ஒங்க அம்மாம் பணத்தைக் காட்டி ஒப்பனையாவும் ஒசந்ததாவும் உள்ளாசை கொண்டதாகவும் எனக்கு மட்டுப்பட்டு நிக்குது. என்னைச் சமிச்சுப்புட்டு, நீங்க போயிடுங்க. அவுங்க அவுங்க லவிதப்படி தானுங்களே கண்ணாலம் கார்த்திகை அல்லாம் நடந்து முடிய வாய்க்கும்?..."

படைப்பு விதிக்குப் போட்டியிடும் கலைஞன் கல்லுக்கு உயிர் ஊட்டுகிறான். ஆனால், படைப்பின் தந்தையாக, பனிதூங்கும் வரை விளிம்பில் வீற்றிருந்து விளையாடும் ஆண்டானின் சக்தியினால் உயிர் கொண்டிலங்கிய கங்காணி சம்சாரத்துக்கு உயிர்ப்பு இற்று விட்டதாகவே தோன்றிற்று. எடுத்த எடுப்பில், அவளுடைய குழி விழுந்த கண்பார்வை வாசற்புறம் ஓடியதா? ஓடமுடியுமா? தத்தித்தத்தி நடந்தது. 'எங்கே தம்பி முத்தையனைக் காணலே?'

வினு புறப்படுவது சுளுவு.

தொண்டு கிழமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த சீரங்கத்தின் நெற்றிப்பொட்டு விட்டுவிடுவது போலத் தெறித்து விழுந்தது. "ஆத்தா! ஒன்னைப்பத்தி ரொம்ப நெனைச்சி வந்தேனே?..." என்று அவள் பஞ்சவர்ணத்தின் முகவாய்க்கட்டையைத் தொட்டு நிமிர்த்திப் பேசிய தருணத்தில், அங்கே அவள் கையைத் தட்டி விலக்கி விட்டு நின்ற முத்தையனின் இளந்தளிர் மீசை துடித்தது. சுருட்டை முடிகள் அந்தம் சேர்ந்தன.

"ஆயி! நீ மறுதப்படி ஒன் வாயைத் தொறக்காதே! இடம் தெரியாத இடத்துக்கு வந்தது தப்பு. நீ நட. நான் உம்பின்னடியே வாரேன்!" என்று கோபக் கங்கின் கங்கைப் பிடித்துக்கொண்டு சீறினன் இளவட்டம்.

"நீயும் வா, தம்பி!" என்று கெஞ்சினுள் தாய். 'தம்பி முசிடு. ஆத்திரத்திலே எதனுச்சும் தக்கா முக்கியா நடந்திருச்சின்னு...?'

"நான் இப்ப இந்தப் பஞ்சவர்ணத்தை ஒண்ணு ரெண்டு கேள்வி கேட்டுப்புட்டுத்தான் இதைவிட்டு நகரணும்!"

"அப்பிடி என்ன மச்சான் கம்பசித்திரமாக் கேக்கப் போறே?..." என்று கேட்டுக்கொண்டே வந்து நின்ருள் பஞ்சவர்ணம். மாராப்பை இழுத்துவிட்டாள்."சொல்லுங் கங்கிறேன். நீங்க என்னத்தைக் கேக்கப் போறீக என்கிறதையும் நான் புரிஞ்சுக்காம இருந்தாக்க, போகுடிப் பயலுங்க விளையாட்டம் சுத்துற இந்த ஊருப் பக்கம் பொண்ணுப் பொறந்த நான் ஒருத்தி ஆயிரம் பாண்டியருக்கு ஒரு அல்லி கணக்கிலே ,நின்னு ஒங்க

சகலத்தயுே ஆளுங்களேயும் சமாளிச்சுக்கிணு வந்திருக்க முடிஞ்சிருக்குமா?...அந்த நாளேயிலே நீங்க என்மேலே நேசம் வச்சீங்க. நானும் ஒங்களே மனசொப்பி விரும்பினேன். இதுக்காக எம்புட்டு அசல்முறை மச்சான்... அதான் அவுக வீரப்பனேக் கூட முறிச்சுக்கிட்டேன். எனக்குத் துணிமணி, நகைநட்டு எல்லாம் கமுக்கமாகத் தந்தீங்க. அல்லாம் சரி. ஆனுக்க நீங்க கூடாதவுங்களோடகூடி தப்புத் தண்டாச் செய்யிற விவரத்தைப் புரிஞ்சிட்டடியும்தான், என் மனசிலேருந்து ஒங்களேத் தள்ளினேன். அப்ப ஊத்த ஆரம்பிச்ச கண்ணீர்த் தண்ணி இன்னமும் நிக்கலே! ஆனு, நீங்க எனக்கு வாங்கித் தந்த சாமானுங்களே வச்சுக்கிட்டு சூதுக் காயாக்கி, பொண்ணுப் பொறந்தவளேப் பத்தி இல்லாததும் பொல்லாததும் பேசவும் செஞ்சீங்க. அதுக்காகத் தான், நீங்க ஈவிரக்கமில்லாம எம்பிட்டு சோளக் கொல்லேப் பொம்மையிலே நெருப்பு வச்சப்ப நீங்க தந்தது அத்தனேயையும், அந்தத் தீக்கணப்புக்குள்ளே போட்டுப் பொசுக்கிப்புட்டேன். ஆனு, நான் தப்பிச்சுக் கிட்ட மாதிரி, என்னேட நல்ல மனசும் தப்பிச்சுது. அதாலேதான், அன்னிக்கு ஒரு நாளேக்கு நீங்க கிணத்திலே விழுந்து செத்துப் பூட்டதாத் தகவல் விழுந்ததும், கைகாலு பதற ஓட்டமா ஓடியாந்தேன் ஒங்களேத் தேடி. சாமி புண்ணியத்திலே நீங்க உயிர் பொழைச்சுக்கிணு இருந்தீங்க. எனக்கு மனசு கொள்ளாச் சந்தோசம் திரும்பிச்சு. நானும் திரும்பிட்டேன். ஆனு, ஒண்ணு! நீங்க தந்த துணிமணி நகை நட்டு அம்புட்டையும் திரும்பி வாங்கி, பொறக்கு மாசம் நானே ஒங்க வீடுதேடிக் கொண்டாந்து தாரேனுங்க!..."

சுண்டும் விரல் சுடு திவலேகளேச் சுண்டின.

முத்தையன் குரோதம் மங்காத பேய்ச் சிரிப்புடன், "இந்தாப்பாரு பஞ்சவர்ணம்! உன் பசப்புப் பேச்சுக் கெல்லாம் இனியும் இந்த முத்தையன் மசியமாட்டான். நாளைக்குப் பொழுது படுறதுக்குள்ள, எம்புட்டு பொருளுக முச்சூடும் எங்கைக்கு வந்து சேரவேணும். இல்லாங் காட்டி, எனக்கிண்ணு ஊர்ப்பஞ்சாயத்துக் கூட்டின ஒனக்கும் நாளைக்கு ஊருப் பஞ்சாயத்தைக் கூட்டாமப் பாயிலே தலே சாயமாட்டேனுக்கும்! நெனைப்பு வச்சுக்கிடு ஆமா!" என்று தீர்க்கமான குரலில் பொரிந்து தள்ளி விட்டு, ஐயனார் குதிரையின் சவாலுடன் பறந்தான். விரைவு பாய்ச்சிப் பறந்தவனுடன் அவனது கைவிரல் நகங்களில் தெளித்துக் கிடந்த மருதாணிச் சிவப்பும் பறந்துவிடவில்லை! அந்தச் செம்மை பஞ்சவர்ணத்தின் நெஞ்சில் ஒதுங்கியதோ?

முத்தையனுக்கு ஆத்திரம் வழிகாட்டியது.

சீரங்கத்திற்கு அழுகை வழியை மறைத்தது.

அலஞ்சிரான் காட்டுப் பேய்க்கணமாக இருட்டு உருமு, அந்த உருமலில் மனம் தாளாமல், மெய் தாளா மல் நரகவேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள் பஞ்சவர் ணம். 'எனக்கு எம் மச்சான் இருக்கையிலே, எந்தப்பய எப்படிப் பய முறுத்தினு, எனக்கென்னவாம்?... ப்பூ!... தூவே...!'

# 15 உருக்காட்டுப் படலம்

ஆடியில் தெரியும் அரிசி, உலேவைக்க உதவுமா? 'உதவாது' என்னும் உண்மை நிலேயினே உய்த்துணரு வதற்கு, பஞ்சவர்ணத்திற்கு இவ்வளவு நேரம் பிடித்தது. பித்துப் பிடித்தவளாகவே உருமாறியிருந்த அவள், இது வரை நினேத்திருந்தது ஒன்று: 'முத்தையன் மச்சான் மனசு விரும்பி நமக்குத் தந்ததுகளே அவ்வளவு சின்னத் தனமாவா வாய் துணிஞ்சு கேட்டுப்பிடும்? ஊகூம், கேட்காது!' என்றுதான் அவள் நம்பியிருந்தாள். அந்த நம்பிக்கை தோன்றித் தோன்றி, அவளேத் தெம்புடன் வாழச் செய்து வந்தது. ஆனல் அந்நம்பிக்கைக்கும், கண்ணுடியில் பிரதிபலித்துத் தெரியும் அரிசிக்கும் கடுகத் தனே வித்தியாசமும் கிடையாது என்பதை இப்பொழுது புரிந்து கொண்டாள்!

இரவு அவளுக்குச் சிவராத்திரி! விடிந்ததும், விடியா ததுமாக, அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்: வரவேண்டிய வள் ஆனுள்.

அம் முடிவு இதுதான்: 'வெள்ளக்காடாய் எம் பேரிலே பந்தமும் பாசமும் வச்சுக்கிட்டிருக்கிறவுக இப்பைக்கு எங்க மூக்குடிமச்சான் ஒருத்தர்; நாட்டாமைக் கார ஐயா மத்தவுக; வளவிக்காரத் தாத்தா மூணும் ஆளு இந்த மூணு பேரிலே, கைக்கு மெய்யாப் பேச வாய்க்காத வுக எங்க நேசமச்சான்காரக. ஏன்னு, கங்காணி மகன் விசயமாப் போயி, அவுக கிட்டே பணம் காசு மார்பத்துப் பண்ண முடியுமா? இதுக்கு முன்னுடியே அந்தப் பழைய

மச்சானை ஒட்டி எம் மேலே சம்சயம் விளுந்துகிடக்குது. இப்ப வேறே வம்பே வேண்டாம். அனல் சட்டிக்கு ஆடிக் காத்து சேடை கூட்டிஞுப்பிலே ஆயிப்பிடும். அப்பாலே வளவிக்காரப் பெரிய ஐயா இருக்காக. அவுககிட்ட எனக்குத் தேவைப் படுறமட்டுக்கு பணம் மிதந்தா கிடக் கப் போவுது? பாவம், வயத்துப்பசி வாயைவிட்டு வரப் பிடாதின்னு பேசுறவுங்களாச்சே! அத்தோடே, அவுக ஓடப்பொறந்தா மகன் வேறே விருந்துக்கு வந்திருக் குது. இப்ப செலவும் உண்டன ஆகும். ஆக, கூட்டு மொத்தமாப் பார்த்தாக்க, மணியக்கார ஐயா ஓர்த்தர்தான் என் கலிதீர்க்க வாய்ச்சிருக்கிற சாமியாட்டம் இருக்காரு. அவுகளுக்கு நூறு ரூவாக்காசு ஒத்தக்கடை கூந்தப்பனை உண்டியிலே போடுற சல்லிக்காசுக்கு ஒப்புத்தான். மிதந்த கை, ஆஞக்க, மேலுக்குத் தெரியுமா? ஊக்கும்! தெரியவே தெரியாது. எனக்கு வாக்குக் குடுத்திருக்கிற கடவுளரு அவுக. அவுங்களைக் கண்டு தண்டிக்கிட்டு வந்தாத்தான், இன்னைக்கு எம்மானமும் மருவாதையும் கப்பல் ஏருமத் தங்கும்! இல்லாங்காட்டி...!'

கேள்வி அரைகுறையாகவே நின்று விட்டது. ஆனல் வெடித்து வடித்த சுடுநீர்ச்சரம் மண்ணில் மாலையாக நீண்டது. நடக்கக்கூடாத ஒன்றை-அல்லது, நடந்தால் என்ன ஆகும் என்ற கற்பனையைப் பற்றிய முடிவை முடித்துப் பார்க்க விழையாத ஒன்றை யார்தான் அலங் காரம் செய்து பார்க்கச் சம்மதிப்பார்கள்? 'இல்லாங்காட்டி என்ற வினச் சுழிப்பில், 'இல்லாங்காட்டி நானு அந்த முத்தையன் மச்சான்காரர் கதையாக் கொல்லைக் கிணத்திலே விழுந்து செத்து மடிஞ்சு சிவலோகம் போயிற வேண்டியதுதான்!' என்ற விடை யின் தவிப்பு மிதந்து வந்தது.

அதே மின்வெட்டில், அவளை வேறொரு வேண்டாத கவலையும் பீடித்தது. 'அல்லாஞ்சரி' அந்த முத்தையன் ...ப்பூ! பேரை சொல்லிக்கிட்டா என்ன குடியா முழுகிப் பூடும்!...அந்த மச்சான் ராசா எதுக்கு கொல்லைக் கிணத்திலே குதிச்சாராம்? அண்ணைக்கு அதாலேதான் ஊருப் பஞ்சாயத்தைத் தள்ளி வச்சாக. அந்தப் பஞ்சாயத்து அந்தமட்டோட சரின்னு நினைச்சுப் புட்டாரோ, என்ன கதையோ?...வரட்டும், வரட்டும்? என்னைச் சோதிக்கிற இந்த ஆம்பளையை நானும் சோதிக்காமயா தப்ப விடுவேன்?'-மறுமுறை அவள் சிந்தனை வசப்பட்டாள். கூர் இருளில் அகப்பட்டதற் கிணங்க, அவளுள்ளே பயங்கரமானதொரு தவிப்பும், கூர்முள் முனையில் குதிகாலைத் தஞ்சம் புகச் செய்த வடிவில் தாளமுடியாத சடனையும் வேதனையும் கிளர்ந்தெழ, பஞ்சவர்ணம் தன்னுடைய சாயாக்கடையை விருந்தாடி போய் மீண்டிருந்த சிறுமி சின்னுத்தாளிடம் ஒப்படைத்துவிட்டு, படி இறங்கி நடந்தாள். விழி பார்த்து, வழி மிதித்து, மறுகியும் மாறியும் நடந்தாள் அவள். விட்டகதை தொடர்வது உண்டு. அதற்கு இசைவாக, அங்கு - குணபுலத் திட்டில் நின்ற மருதாணிச் செடி அவளைத் தடுத்தது. ஆனால் தடுத்தாட் கொண்டதா? அன்றைக்கு இதே தடத்தில் தடம் பார்த்து வழி கடந்த பொழுது, பாங்கி கோவிந்தம்மா தன் கையில் ஆட்டியபடி காட்டிய மருதாணித் தழையின் கதையை இப்பொழுது நினைத்துக் கொண்டாள். "ஆமாடி, பஞ்சவர்ணம்! நீ எப்பிடியடி இந்த மருதாணியை மறக்க ஏலும்? ஒரு தக்கம் நான் அரைச்சுக் குழைச்சுத் தந்த மருதாணியை நீ லபக்கினு எங்க முத்தையன் அண்ணுச்சி கை விரலிலே பூசப் போயி, அதை ஒண்டியிருந்து கண்டு நானு சிரிச்ச சங்கதி எனக்கு இன்னம் நெனைப்பிலே தங்கியிருக்குதே! இன்னெண்ணு இப்ப

நெஞ்சுக்குப் பாடம் சொல்லுது. ஒரு நாளு நீ மெய்ப் பனேக்கு கோவக்காரியாட்டம் பாவலா செய்யப்போக, எங்க முத்தையன் அண்ணுச்சி அது கையோட கொண் டாந்த மருதாணிச் சரக்கை உங்கை நகத்திலே பூசி விட்டு அழகு பார்த்திச்சுதே அதைத்தான் உன்னுலே அம்மாம் லகுவிலே நெஞ்சை விட்டோ, நினேப்பை விட்டோ ஓட்டிப்பிட வாய்க்குமா? என்னமோ, உங்க ரெண்டுபேர் கதையும் காரணமும் அதிசயக் கூத்தாத் தான் இருக்குது?" என்று சொல்லாமல் சொல்லி, செல்லாமல் சென்றுவிட்டாளே, குறும்புக்காரி கோவிந் தம்மா? வார்த்தையாடும் பொழுதில் அவள் நயனங்கள் எப்படி எப்படியெல்லாம் லயம் மாருமல், முத்திரை காட்டின!

பஞ்சவர்ணத்திற்கு இதயம் கலங்கி வந்தது போலவே, விழிகளும் கலங்கி வந்தன. கருத்தில் ஒருவன் விளேயாட, கண்ணில் ஒருவன் விளேயாடினுன். அன்பில் ஒருவன் ஆண்டாளுக நிற்க,ஆசையில்ஒருவன் அடிமை யாக உருக்காட்டி நின்றுன்! இருந்திருந்தாற்போல, அவளுக்கு இப்பொழுது புதிய ஐயப்பாடு தோன்றலா யிற்று. 'ஆமா; எனக்கு அந்த மச்சான் ஒசத்தியா? இல்லே, இவருதான் தரமானவரா?' என்று குழம்பி ஞள். ஆத்தாளேக் கூப்பிட்டாள். நெஞ்சு வெடிக்க, ஒடிந்த ஒதிய மரத்தடியில் எச்சில் துப்பிக் காயும் வரை நின்றுள். இராம தூதனுக்காவது சீதாப் பிராட்டியிடம், தான் இராமதூதன் என்பதை மெய்ப்பித்துக் காட்டி, அதற்குத் தோதாக உருக்காட்டிக் கொள்ளவும் முடிந் தது! ஆனல் பஞ்சவர்ணத்தின் முன் முத்தையனே, கோலப்பனே உருக்காட்டுப் படலம் நிகழ்த்த, விதி வந்ததா? விளே வந்ததா?

நடந்தாள் பஞ்சவர்ணம்.

வளர்ந்தது வழி.

அவளுக்கு முறை கொண்ட வீரப்பன் எதிர்ப்பட்டான். ராக்காச்சி அம்மன் காப்புக் கட்டுத் திருநாளின் போது, ஐந்தாறு இளவட்டங்களுடன் கட்சி சேர்ந்து கொண்டு மெனக்கெட்டு மல்லுக்கு வந்த சம்பவத்தை எண்ணிஞள். பற்களைக் கருவிக்கொண்டாள். அவனையே இமை விளிம்பு கூட்டாமல் பார்த்தவாறே நடந்தாள். அவளுக்குப் பதிலாக, அவன் குனிந்த தலை நிமிராமல் குறுகி நடந்தான். 'மச்சான் புத்தி தெளிஞ்சு போச்சுப் போல!'

மணியக்காரர் வீட்டை அடைந்தாள் பஞ்சவர்ணம். அங்கே வீட்டின் முன் பகுதியில் கும்பல் கூடியிருக்கக் கண்டாள். சதா பாயும் படுக்கையுமான மணியக்காரரின் துணைவியின் உயிர்நிலை கவலைக் கிடமாக இருப்பதை அறிந்தாள். நின்று நிதானிப்பதற்குள், உள்ளே இருந்த விளக்கு அணையக் கண்டாள்!

# 16 மருக்கொழுந்து ஆனுள்!

ஆசை வளர்ந்தால் கனவு வரும்; ஏமாற்றம் வளர்ந்தால், அழுகை வரும்.

ஆசைக்கும் ஏமாற்றத்துக்கும் ஊடாக வளர்ந்து-வாழ்ந்து வந்தவள் பஞ்சவர்ணம். பெற்றவர்களின் 'முகாலோபனம்' காணுதவள். இந்த ஒரு குறையே அவளுக்கு வாய்த்திட்ட பெருங் குறையாகவும், அதுவே அதிர்ஷ்டத்தின் குறையாகவும் எண்ணிக் கருதி, கருத்தழிந்திருப்பவள் அவள். பருவத்தின் திசைமாற்றப் பகுதிகளிலே அவள் சமாளித்த துணை நிகழ்ச்சிகள் ஏட்டிலடங்குமா? இப்பொழுது முத்தையன் அவளை வசமாக மடக்கி விட்டான்! அவள் தன்மானத்தைக் கட்டிக் காக்க எண்ணித்தான், மணியக்காரரை அண்டி அவர் 'காதைக் கடிக்க' முடிவுகட்டி யிருந்தாள். ஆனுல் அவள் கட்டிய மனக்கோட்டையை தர்மப்பிரபு கலைத்து விட்டான். உதவி கேட்க விரைந்தவள் 'கேதம்' கேட்டுத் திரும்பினுள்.

வெயில் சுள்ளாப்புடன் காய்ந்தது.

காய்ந்த அவள் வயிறு எரிந்தது.

எரிந்த கதிர்களிடை பாட்டொன்று பறந்தது.

பறந்த பாட்டில் பாவை சொக்கினுள்.

சொக்கிய பூவையைச் சுழல அடித்தான் சேகண்டிப் பண்டாரம்.

'காலம் என்பது கடுகு போலே ராசாதி ராசா!—அது
ஏலம் போட வாய்க்காதய்யா ராசாதி ராசா!—உன்
ஓலம் கேட்டு அஞ்சாதவன் ராசாதி ராசா!—அவன்
காலன் என்பான் அஞ்சிடாதே ராசாதி ராசா...!'

சாவில் தொடங்கும் வாழ்க்கைச் சொப்பனமாக அந்தப்பாட்டுஅவளுக்குப் பட்டது. பட்டமரமானுள். பட்டமரம் நடந்தது; நறுவிசாகத் துளிர்த்தது. அந்தம் பொதிந்த ஏற்றப் பாட்டின் சந்தம் அவளை அலாக்காக எங்கோ தூக்கிச் சென்றது. கனுப் போன்ற கட்டங்களை கண்கள் மறத்தல்லேசா? லேசான இதயம் சுமை தாங்கியானது. பட்டிக்காட்டு மண் வளர்த்து வாழ்த்திய சேரிக்காதலர்கள் இருவர் தென்பாங்குப் பாடி, கஞ்சிக் கலயத்தைக் காலி செய்துகொண்டிருந்தார்கள். சுடு வெயில்; சுடும் கஞ்சி; சுடும்விழிலாகு. ஆம்சூட்டில்;குளுமை பிறந்தது போலும்!

பஞ்சவர்ணம் தோள் எலும்பைத் தடவி விட்டுக் கொண்டாள். வழி நடந்தாள். அவளுடன், நடந்த கதையும் வழி நடந்தது.

ஒரு சமயம்: பூவத்தக்குடி காளியம்மன் திருநாள்

பஞ்சவர்ணம் பூத்த மலராக ஆவதற்குச் சில தினங்களுக்கு முன்னதாக ஒருநாள். அப்போதைய பருவநிலை, போதை ஏற்றத்தானே பார்க்கும்?

வந்தான் முத்தையன். லேஞ்சும் துப்பட்டாவும் இளமீசையும் செழித்துக் கொழித்தன. 'பணம் காய்க்கிற மரமும் நெல்லு காய்க்கிற மரமும் ஒங்ககிட்ட இருக்குது; நீங்க ராசா மவன் ராசாதான்! என்று 'நைத்தியம்' படித்தபடியே வந்தாள் பஞ்சவர்ணம். தாழம்பூச் சித்தாடையும் கிளி மூக்குச் சவுக்கம் ரவிக்கையும் அவளது

பருவத்தைக் கட்டிக் காத்தன. அவள் அவனைப் பார்த்த சடுதியில், அவனது பார்வையின் 'கோல வெறி'யைக் கூர்மையாகக் கணித்து விட்டாள்.

"இந்தாப் பாருங்க, ஒங்க கண்ணை எடுங்க. எனக்கு வெட்கம் வருது!" என்றாள் அவள்.

"நான் எதுக்கு இப்ப எங் கண்ணை எடுக்கோணுமாம்?" என்றான் அவன்.

"என்னையே உறுத்துப் பார்க்காம இருக்கத்தான்...!"

"ஐய!...நான் ஒன்னைப் பார்க்கிறதிலே கூடவா ஒனக்கு வெக்கம் வந்திருச்சு...வெக்கம்?..."

"நீங்க என்னைப் பாத்தாத்தான் குத்தமில்லையே?..."

"பொறகு?"

"வந்து ... எம்பிட்டு...ஆத்தாடியோ...நானு சொல்லப்புடாது!" என்று ஓடிவிட்டாள்.

ஆம்; அன்று விளையாட்டாக ஓடியவளை, இன்று தொல்வினை வினையமாக ஓட்டி விட்டதே!

ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை என்பார்கள்.

ஆனால் அவளது உள் மனம், காலத்தின் கோடுகளால் உருவான காதல்பாட்டு ஒன்றைப் பாடச் சொன்னது. முத்தையன் பாடினால் இன்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாமே!

அவன் பாடினான்:

"வெத்தலை பாக்கு போட்டுக்கத் தாரேன் —
அம்மான் மகளே நீ,
வாத்தாலைத் தண்ணி ஒடுறதாட்டம் —
சிரிக்கப்புடாதா?"

அவள் அவனிடமிருந்து வெற்றிலே பாக்கை எதிர் பார்க்காமலேயே சிரித்துவிட்டு எதிர்ப்பாட்டுப் பாடலானுள் :

"ஒண்ணு குடுத்து ஒண்ணைக் கேட்டால் —
அத்தை மகனே நீ,
ஒலகம் என்ன சொல்லுமிண்ணு
ரோசிக்கப்புடாதா?"

மறுபடியும் ஆண் குரல் ஒலி கிளப்பிற்று :

"நம்மகதை ஊருக்குப் புரியும் பெரிய பொண்ணே நீ
சும்மா வந்து கண்ணைக்காட்டு சொக்கு பொடிதூவ!"

பருவ மமதை சுழித்திட்ட கருவண்டுக் கண்கள் இரண்டையும் அவன் தொட, அவள் மனம் லயித்தாள். பெண் மனம் குரலெடுத்தது :

"கண்ணெதுக்கு காதெதுக்கு? ஆசைமச்சானே! உன்
கண்ணுன நானே ஒனக்கு நேசமச்சானே!"

இருவரும் காதலொருமித்து, ராக்காச்சித் தாயின் சந்நிதானத்திலே 'கையடித்து'க் கொண்டு, இசைவுப் பரிவர்த்தனை நடத்திக்கொண்ட அந்தச் 'சுபவேளை' எங்கே ஒளிந்து கொண்டதோ?

முட்டின்றி காலம் ஊர்ந்தது.

முட்டி தூக்கிவந்த கோவிந்தம்மா அது தருணம் பஞ்சவர்ணத்திற்குச் சுய உணர்வைத் தெளிக்க, தண்ணீர் தெளித்தாள். "ம...ச்" என்ற வாய்ச்சறுக்கு லுடன் நல்ல காலம், தப்பிவிட்டாள். இல்லாவிட்டால், சுட்டிப்பெண் அவளைத் தப்ப விடுவாளா, பின்னே?...

பஞ்சவர்ணத்தின் மனக்கூத்து ஆடிய விந்தைப் பேயாட்டத்தை அவளது முகத்திரை வழியே அவள்

பாங்கி ஊகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்! அதனால்தான், கிட்டத்தட்ட அவளும் மௌன நிலையைக் கைப்பற்றினாள்.

"என்னாலே, ஒட்டிக்கு ரெட்டியா லாவம் கெடைச்சவுகளாட்டம் சத்தம் காட்டாம நிக்கிறே?"

"எனக்கு லாவமாவது, மண்ணாவது? நீ என்னமோ அல்லாமே மண்ணாப்பிலே மனசொடிஞ்சி நிக்கிறீயேன்னுதான் நானும் ஒக்கு மத்தாச் சும்மா நிக்கிறேன், பஞ்சவர்ணம்!"

"ஒனக்குச் சங்கதி தெரியாதா, கோவிந்தம்மா?

"எதைச் சொல்லுறே? எங்க முத்தையன் அண்ணைச்சிக்கு சிலட்டூர் சேர்வைகாரர் வகையருவிலே பொண்ணு தெகைஞ்சிருச்சாம். கைக்கு ஒசத்தியான எடமாம். மிதப்பான பசையாம்!...ம்!..."

பஞ்சவர்ணத்திற்கு'ஊம்'கொட்டக்கூடத் தெம்பில்லை தேள் கொட்டினாற்போன்று அல்லற்பட்டாள். எதையோ ஒன்றை-இழக்கக்கூடாத தொன்றை இழந்து விட்ட பரிதவிப்பு குருதிச் சேர்க்கையில் ஓடியது. கால் பெருவிரல் தரையில் முளைத்திருந்த பூண்டுச் செடிகளை நெருடிவிட்டது. புல் சிதர் ஒன்று அவளது விரல் பட்டு நெளிந்து மீண்டும் உயிர்பெற்றது.

"பார்த்தியாலே! வணங்கின புல்லு பொழைச்சிக்கிடு மிங்கிறது அச்சாப் போச்சுது?...' என்றாள் தோழி.

கோவிந்தம்மா எதையோ சொன்னாள்.

பஞ்சவர்ணம் வேறு எதையோ எண்ணம் பொருத்தினாள்.

மணியக்காரர் மனைவியின் மரணத்தைச் செப்பினுள் சாயாக்கடைப்பெண்.

வந்தவளும் மனம் வெந்தாள்.

இருவரும் பிரிந்தார்கள்.

பூக்காரப் பண்டாரங்கள் வதியும் வட்டத்தைச் சுற்றி நடந்து விலகினபோது, நாகுடிச் சாமியாடியார் வீட்டின் முன்னே திமிலோகப்பட்டது. நெற்றிப் பொட்டில் கை மட்டத்தை அமைத்துப் பார்த்ததும்தான், அவளுக்குச் சாவதானமான மூச்சுக் காற்று வந்தது.

'வரகம்' ஆட்டம் நடந்துகொண்டிருந்தது.

அதுதான் அப்படிக் கூட்டம். சந்தைக்கூட்டம் கணக்குத்தான்!

கன்னி கழியாப் பெண்ணுக்கு கள்ள விழியைப் போலவே கள்ள வழியும் புலப்படும் என்பார்கள்.

சுத்தம்தான்!

'ஆமா; நம்ம நாகுடிச் சாமியாடி ஐயா கிட்டக்க இந்தத் தாக்கலைப் போட்டாக்க, ஒரு விடிசாமம் வரதா?... வரும்... வரும்!'

உருமம் நெருங்கியது.

பஞ்சவர்ணம் நலியாமல் கொள்ளாமல் காத்திருந்து நாகுடிச் சாமியாடியைப் பார்த்தாள். விஷயத்தைப் பிட்டுப்பிட்டு வைத்தாள்.

"இப்ப கையிலே மடியிலே ரொக்க சக்கம் ஏதும் இல்லியே, தங்கச்சி?" என்று மென்று விழுங்கினுர் முதியவர்.

அவளுக்குக் கழுத்தைச் சுட்டாற்போலிருந்தது. கருகுமணி வளையத்தில் வளைந்த கை விரல் அவளுக்கு கோலப்பன் அளித்த தங்கத் தாலிச் சரட்டை நினைவூட்டியது. 'தங்கத் தாலிச் சரடாச்சே அது? அதையா அபசகுனம் பிடிச்சதொப்ப அடமானம் வைக்கிறது? ஆமா; வைக்கத்தான் வேணும். இல்லாங்காட்டி, எம் மானமில்ல மானத்துக்குப் பறிஞ்சிடும்!... அப்பாலே, எங்க மூக்குடிக் காரக பூட்டாங்கயிறு அறுந்த பூரணிக்காளை ஆகிப் புடாதா?...'

"அய்யா!..."

"என்ன தங்கச்சி?"

"தடயம் விழுந்திருச்சு, இது கமுக்கமானது," என்றாள். பிறகு, சேதியை சாமியாடியின் செவிகளில் போட்டார்.

அடுத்த ஒரு நாழிகைப் பொழுது கழிந்ததும், பஞ்சவர்ணம் தங்கத் தாலிச்சரட்டுடன் வந்து,சாமியாடியிடம் நீட்டினாள்.

"சபாசு!..." என்று விரல் சொடுக்கினார்; நெட்டி பறித்தார். குடுமியை முடிந்து கொண்டு வெளியே புறப்பட்டார். திரும்புகையில், அந்தப் பெரியவர் ஏந்தி வந்த மங்குத் தட்டில், முத்தையன் அன்று பரிசளித்த அதே அச்சுக்கொண்ட சேலை, ரவிக்கை, நகை, நட்டு எல்லாம் இருந்தன.

எங்கிருந்தோ வந்த காளவாய் நாற்றம் நாசியில் ஏறியது!

பஞ்சவர்ணத்திற்குக் காண்பது கனவா, இல்லை, நனவா என்றே புலனாகவில்லை. புலனடங்காக் களிப்பு ஊறியது. கொழுந்தோடிப் படர்ந்த மருக்கொழுந்து ஆனாள் அவள்!

# 17 ஆம் ; சுந்தரக் கனு

மணக்கும் மருக்கொழுந்து ஆனாள் பஞ்சவர்ணம். கொழுந்தின் பசுமையும் பவித்திரமும் ஒருருக் கொண்டு நாட்டுப்புற மோகினியாக உருக்கொண்டன. கிள்ளிய இடத்தில் எல்லாம் மருக்கொழுந்தின் வாடை தெரியும் அவள் நிலையும் அப்படித்தான் ஆயிற்று. விட்ட இடத்தைத் தொட்டு எண்ணமிட்ட நினைவெல்லாம் அவளுக்கு இனித்தது: இன்பம் ஈந்தது; கனவாகப் பரிமளித்தது.

அமைந்து விட்டால், வாழ்க்கையைப்போல சுகக் கனவு வேறு என்ன இருக்கிறது ?

அவளுக்குப் புதிது புதிதான நினைவுகள் சொக்கட்டான் ஆயின.

கையில் தவழ்ந்த பீங்கான் தட்டுச் சாமான்கள் சாமான்யமானவையா ? அவளது தன் மானத்தைமெய்யுடலின் மானப் பண்பைக் கட்டிக்காத்துவிட்ட அதிசயப் பொருள்களாயிற்றே !

கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலத் தோன்றியது.

வணக்கத்திற்கு 'வாடிக்கை' கோரி, மனக் கிழியில் யார் யாரோ தோன்றாமல் தோன்றினார்கள்.

'அவுக...ப்பூ...முத்தையனுங்காட்டி ?...பூ !'

சிரிப்பில் சினம் தடம் பதித்தது.

'அவுங்க...எங்க ஆசை மச்சான் காரக...!'

கோலப்பனை வணங்கப் பிறந்தவளல்லவா?

நாகுடிச் சாமியாடியின் பிம்பம் தெரிந்ததுதான் தாமதம், அவளுள் களி, களிக் கூத்துப் போட்டது. 'எம்பிட்டு சென்ம சென்மத்துக்கு இந்த ஐயாவை மறக்க ஏலாது எனக்கு, சாமியின்னு, அதுக்கின்னு வேசம் போட்டுக்கினு சாமி வரும்?...அப்பிடி வாரதுக்கு ஆரம் பிச்சிட்டாக்க, அப்பாலே, மனுசங்களைப்போல, ஆண்டவனும் வெறும் வேசதாரி ஆகிப்பிட மாட்டானு?...மனுசங்க கிட்டே ஒசந்த கொணமும், ஒசத்தியான தன்மையும் வாய்ச்சிட்டாக்க, அதுக்குப் பொறகாலே, அந்த ஆளுங்க தேவருங்க கணக்குத்தானே?... இப்பைக்கு, என்வரைக் கும் ஆபத்துக்கு உதவிசெஞ்ச இந்த ஐயாவை நெறைஞ்ச வயித்தோட சதா நினைச்சுக்கிட்டு இருப்பேனுக்கும்!... ஆமா. நன்னி உள்ள குட்டி நானு!...'

அழிந்த அந்தியை அழித்துக்கொண்டே, பஞ்சவர்ணத்தின் வளர்ந்த கனவு வளர்ந்துகொண்டே வழி நடந்தது!

'பள்ளச்செய்' வந்தது; ஒதுங்கியது.

குதிகாலைப் பதம் பார்த்த நெருஞ்சி முள்ளைப் பிடுங்கினுள்; தலையைச் சுற்றி மடங்கினுள்.

மழை முகம் கண்டது.

மஞ்சள் வெயிலில் தூற்றல் 'சதுர்' ஆடிற்று.

இயற்கையை வாழ்த்தி வளர்க்கும் அந்த மண்ணை வாழ்த்தியவளாக அவள் விழி மலர்த்தி, வழி விலக்கி நடை தொடர்ந்தபோது, அந்த மண் நெடியும் அவளுடன் கைலாகு கொடுத்துத் தொடர்ந்தது.

ஊர் எல்லை வந்தது.

ராக்காச்சி அம்மனை வணங்க நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள்; எழுந்தாள். தனது அடிமனத்தின் அடிவாரத்திலே முத்தையனின் ஈவிரக்கமிழந்த பேய்க் குரல் பிசிறு வெட்டி எதிரொலிப்பதை உணர்ந்தாள் அவள்.

'இந்தாப்பாரு பஞ்சவர்ணம்! உன் பசப்புப் பேச்சுக்கெல்லாம் இனியும் இந்த முத்தையன் மசியமாட்டான். நாளைக்குப்பொழுது படுறதுக்குள்ள, எம்புட்டு பொருளுக முச்சூடும் எங் கைக்கு வந்து சேரவேணும். இல்லாங்காட்டி, எனக்கிண்ணு ஊருப்பஞ்சாயத்து கூட்டின ஒனக்கும் நாளைக்கு ஊர்ப் பஞ்சாயம் வைக்காம நானு பாயிலே தலைசாய மாட்டேனுக்கும்!...'

கண் அடிபட்டு, பின்னர், கல்லடிபட்ட கட்டு விரியனைப் போல, அவள் நெஞ்சில் வெஞ்சினம் தாங்கி, விழி நோக்கில் வழி புரிந்த பாவனை தாங்கி, இதழ் நகைப்பில், தன் மானத்தைக் கட்டிக் காத்துக்கொண்ட பூரிப்புப் பெருமிதம் தாங்கி, ஏறு நடை நடந்தாள்.

அவள் மனை அடைந்தாள். கை விளக்கைப் பொருதினாள். முகம் கழுவிக் கொண்டாள். சாந்துப் பொட்டு இட்டுக் கொண்டாள். 'கோடாலி முடிச்சு' போட்டுக் கொண்டை முடித்து, மல்லிகைப் பூச்சரம் சூட்டிக்கொண்டாள். சுவரில் தெரிந்த கண்ணுடியில் அவளது கண்ணுடி வதனம் தெரிந்தது. முகம், கண், மூக்கு என்று அங்கம் பிரித்து, அங்கம் பார்த்து அழகு பார்த்தாள் பாவை. கழுத்தை நோக்கினாள். கண்கட்டு கழற்றப்பட்டதைப் போன்று கண் கலங்கினாள். 'மச்சான்' ஆசையா வாங்கித் தந்த அந்தத் தங்கத் தாலிச் சரட்டை அவுகளோட கைராசிக் கையினாலே என் கழுத்திலே

பூட்டிப் பூரிக்கிறதுக் குள்ளாற, இப்பிடி அதைத் காடு மாத்திப்பிட வேண்டிய தவசல் வந்திருச்சே!...நாளைக்கு அவுக வந்து...' அதற்குமேல் எண்ணக்கூடவில்லை. பூவத்தக்குடி நவராத்திரித் திருநாளின் மண்டகப்படிக் கான சங்கம் முழங்கியது. 'சரி, பொழுது கடந்திருச்சு. நானு பறிஞ்சுபோயி, அந்தப் பழைய மச்சான் மூஞ்சியிலே அவுகளோட ஒசத்தியான சாமான் சட்டுக் களை வீசிப்புட்டு, திரும்பிப் பார்க்காம திரும்பிப்புட வேணும்!' கச்சை முடிச்சை கஷ்டப்பட்டு முடிந்து கொண்டு புறப்பட்டாள்; கையில் தட்டு; தட்டில் பொருள்கள்!

அந்த நாளையில் ஆசை மச்சானுக நேசம் புனைந்து திகழ்ந்த ஆணிமணிப் பொன்னழகன் முத்தையன், அன்றைய நாளையில் தன் நெஞ்சில் குடியிருந்த நேசக் காதலி பஞ்சவர்ணத்திற்கு அன்புப் பரிசில்களாகக் கொடுத்த பொருள்கள் சாமான்யமல்லவே!...

# 18 ஆரியக்கூத்து ஆடினலும்...!

கனவுகளுக்கென கண்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.

ஆனல், கண்களுக்காக கனவுகள் காத்திருப்பது கிடையாது.

சுந்தரக் கனுக்கள் சுந்தரமாக ஆடிப்பாடி மகிழ்ந்த நிலையிலும் நினைவிலும், பஞ்சவர்ணம் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க விழையவில்லை. ஆனலும், அந்த மனையில் அவள் பாதம் பதிக்க வேண்டியவள் ஆனள்.

கிழவி சீரங்கம் அவளைக் கண்டு சொக்குப் பொடி கண்டு மயங்கியவள்போலானள். 'பாவம், அயித்தை மறு தக்கமும் ஏமாந்திடுவாங்க போலேயிருக்கே!... என் மூஞ்சியைக் கண்டடியும் ஏதுக்கு இம்மாந் தொலைவு குதூகலிக்குருக?... பொறக்கு மாசம் அப்பசியிலே தான் எம் மச்சான்காரகளுக்கு நான் வாக்கப்பட்டுப்புடப் போறேனே?...அதுக்குள்ள, இந்த அயித்தை திரும்ப ஒரு கடுத்தமும் என்னைச் சோதிச்சிடாம இருக்கவேணும். ஊம்! ...மூக்குடி மச்சான் நாகுடிச் சாமியாடி அய்யா மாரலிலே சங்கதி சொல்லியனுப்பினதாட்டம், அவுக என்னைத்தேடி வரத்தான் போருக. பாவம், அவங்க மேனி ரொம்ப மெலிஞ்சிருக்குமோ? இன்னம் ஒரு கிழமை வராட்டி, நானே அவுகளைத்தேடிப் போயிட வேண்டியதுதான்!... ஆனு...அவுக வீடு...

நல்லவுக ரெண்டுபேரைக் கேட்டாக்க, காதும் காதும் வச்ச கதையிலே மச்சான் வூட்டைக் காட்ட மாட்டாகளாக்கும்!...ஆனுக்க...அந்தத் தங்கச் சரட்டுக்கு என்ன கடவு செய்யிறது?...பூ! இதுக்குத்தானு, மாயம் புரியாது?...மணியக்கார ஐயா மனக்கிலேசம் தெளிஞ்சடியும், அவுககிட்ட சேதியைப் புட்டுச் சொல்லி, பணம் காசு வாங்கி,அதை எடுத்துக்கிட்டுப்போயி நாகுடிச் சாமிகிட்ட கொடுத்துப்புட்டு, அடகு வச்சிருக்கிற எங்க மச்சானுேட அந்தத் தாலிச்சரட்டை மீட்டுக்கிட்டு வந்திர வேண்டியது தான்! ஆனு ..சே...என்னு இந்தப் பேய் மனசு பேயாட்டம் போட்டுக்கிட்டு, சும்மா சும்மா சம்சயப் பூதங்களை ஏவிக்கிணே இருக்குது! எனக்கு அந்த முத்தையா மச்சான் அந்தக் காலத்திலே சீரளிப்புத் தந்த துணிமணி பொருள் கணக்கிலே அப்பிடியே அச்சுக் குத்தினதொப்ப இதுக அம்புட்டும் எப்பிடி இந்த நாகுடிச் சாமியாடி அய்யா கையிலே கெடைச்சிருக்கும்?... சரி, சரி; அல்லா குட்டும் அப்பாலே வெளிச்சம் காட்டாமயா தப்பப் போகுது?... ஆத்தா மூத்தவளே! எப்படியோ என் மானத்தை மட்டுமரிவாதையோட காப்பாத்தினியே, அதுவே எனக்கு லெச்சாந்தரம்!...'

ஒளி கக்கின மருதாணி நகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பஞ்சவர்ணத்தின் விழிக்கடையில் அவளுக்கும் தெரியாத வகையில் சுடுநீர் வேலி கட்டியிருந்தது.

"பஞ்சவர்ணம், இந்தாலே...எதுக்கு நீ ஒம்பாட்டுக்கு தனியே குந்திக்கினு கண் கலங்குறே?" என்று கேட்டவாறு அங்கு வந்தான் முத்தையன். வயலில் நீர் இறவை முடிந்து திரும்பிய அவனுக்கு சோர்வு மூண்டிருந்தது.

முத்தையனின் குரலைக் கேட்டதும், அவனது அன்பை உணர்வதற்கு அவளுக்குப் பொழுது காண

வில்லையானாலும், அவளது கண்ணீரை உணர்ந்திட நேரம் காத்துக்கிடந்தது. அவளது மலர் விரல்கள் விரைந்து, சுட்ட நீரைத் தொட்டுத் துடைத்தன, அவள் எழுந்து நின்றாள். "இந்தாலே இருக்குது ஒங்க சாமான் சாடாவும் கணக்குப் பார்த்துக்கிடுங்க. இப்பவே மூதலிச்சுப் பேசிப் பிட்டேன்...!" என்றாள். தோல்வியின்பின் விளைந்த கடைசி வெற்றிக் களிப்பின் ரேகை அவளது இதழ் மருங்கில் ரேகை பாய்ச்சிற்று.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, அவள் கொணர்ந்தவற்றை சாவதானமாக உற்றுநோக்கினான். ஆரியக்கூத்தாடினாலும், காரியத்தில் கண்வைத்திருந்த முத்தையன், இருந்திருந்தாற்போல பேயறை பட்டவனை யொப்பச் சிரிக்க முனைந்தான்.

"பாவம், பொண்ணாய்ப் பொறந்தது நீ!...யார் யாரை எல்லாமோ நீ நம்புறே! அதுக்குண்டான பலாபலனை நீ கைக்கு மெய்யாப் புரிஞ்சுக்கிட வேண்டிய நேரமும் காலமும் கூப்பிடு தொலைவிலே தான் இருக்குது! ம்...பஞ்சவர்ணம்! நான் முன்னே ஒனக்குத் தந்த சாமான் சட்டுகளை நாக்கிலே நரம்பில்லாம மறு வாட்டித் திருப்பிக்கேட்டதை வச்சு நீ என்னை இழிவாத்தான் நெனைச்சிருப்பே. அது எனக்கு அத்துபடிதான். ஆனா, நானு இப்பிடிச் செஞ்சதுக்குத் காரணம் என்ன; தெரியுமாலே? அப்பிடியாச்சும், ஒம்மனசு மாறி, அது எம்பக்கம் மடங்கித் திரும்பாதாயிங்கிற நப்பாசைதான் அதுக்கு உண்டான காரணம்!...இப்ப சொல்லு. நாளைக்கே நம்ப கண்ணாலத்துக்குப் பரிசம் வச்சுக்கிடலாம்!..."

இப்பொழுது பஞ்சவர்ணத்திற்கு பேய்ச்சிரிப்புச் சிரிக்க 'கெடுவு' போலும்!

"ஒறவு முறிஞ்ச நேசம் இனிமே ஒட்டாதுங்க!... நான் போயிட்டு வாரேனுங்க!" என்று முழங்கினுள் அவள்.

"அப்பிடியா? ... ம் ... இந்தாப் பாருங்கிறேன் புள்ளே!... இந்தச் சாமான்களா நானு ஒனக்குத் தந்தது? நான் ஒனக்குத் தந்தது அத்தனையும் பிறுங்குச் சாமான் களாச்சுதே?...ராவுலே கொண்டாந்து ராங்கி பேசிக் கொடுத்தாக்க,மாத்துப் புரியாதின்னு ரோசிச்சுப்புட்டியா? பலேடான்னுனும் பவுசுக்காரப் பயமவன்!..."

வெம்புலிக் கொடுமைச் சித்தனு அவன்?

கன்னி மனத்தைக் கன்னி இருட்டு விழுங்கிக் கொண்டிருந்தது!

மணமாலையை ஏந்த வேண்டிய ஏந்திழையாள் கண்ணீர் மாலையை ஏந்தினுள்!

போதுமா ?

முடிந்ததா கதை?

# 19 "ஆத்தா சத்தியம்!..."

முடிந்து விடுமா அந்தக் கதை? இல்லை, முடிந்து விடக்கூடியதா, பஞ்சவர்ணத்தின் கதை? வளமுடைத் தஞ்சாவூர் உருட்டுப் பொம்மையைப் போல அவள் தலை சுற்றிக் கொண்டிருந்தது. விரி காவிரியின் புதுப் புனலுக்கு அவளது நயனங்கள் வடிகாலாக ஆயின, தண்ணீர் இறவை காணுமல் 'சோகை' பிடித்துக்கிடக்கும் நாற்றங்கால் தளைகளுக்குச் சமதையாக அவளுடைய முகம் வெளிறிப் போனது. ஏகாலி 'காணியாட்சி' பாத்தியதை கொண்டாடும் துறைக்குரிய செம்பூரான்கல் அவள் மண்டையில் ஒண்டியது. நைந்து பிய்ந்து கிழிந்த ரோஜா மலராயிற்று அவள் வாழ்வு. ரோஜாப் பூவின் மணத்தை அமுக்கி விட்டி வேடிக்கை காட்டி வேடிக்கை பார்த்து 'நமட்டுச் சிரிப்பு' சிரித்தது, ரோஜாவின் அடியில் ஒட்டியிருந்த முள் ஒன்று.

முள்ளும் மணமும் நிறைந்தது தான்; வாழ்வும் வாழ்வின் மணமும்.

அதற்காக, முள்குத்தாமல் இருக்குமா?

முள் குத்திஞல்தான் மனம் சாம்பித் திரியலாமா ?

மணத்தை நுகர மனம் இருக்கையில், முள்ளையும் நுகர மனம் இருக்க வேண்டாமா?

பாவம், பஞ்சவர்ணத்திற்கு வாழ்க்கை எனும் ஆடு களத்தின் சூட்சுமமோ, அன்றிச் சூத்திரமோ அவ்வளவு

தொலைவுக்குத் துல்லியமாகத் தெரிந்துவிடக் கூடுமா, என்ன?

கூடிப்பிடித்த 'மஞ்சிவிரட்டுப் பொலி காளை' யாக ஆவணத்தாங் கோட்டை வட்டத்தில் வட்டமிட்டு, தன்னைச் சூழ ஓர் இலட்சுமணன் கோட்டையும் கிழித்துக் கொண்டு, தன்னைப் பிடிக்க உப்புக்கோடு மறித்து 'பலீஞ் சடுகுடு' விளையாடுக் கொண்டிருந்த நாட்டுப்புறத்து மன்மத ராசாக்களுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டு, காலத்தை ஓட்டியவாறு, வாழ்க்கைப் பந்தயத்தின் முடிவை 'இலக்கு' வைத்து ஓடிக் கொண்டிருந்த அவளுக்கு வாய்த்திட்ட ஆசை மோகங்கள் ஒன்றல்லவே இரண்டல்லவே?...

வழிந்த விழிநீரை வழித்து விட்டபடி, அவள் தலையை நேர்வசமாகத் திருப்பினாள்.

வாழ்க்கை திரும்பவில்லை. வழி வகையும் திரும்ப வில்லை. ஆனால், முத்தையன் திரும்பிவிட்டிருந்தான். தன்னுடைய வாய் மொழிச் சொற்களை அவ்விடத்தே மண்ணுளிப் பாம்பாக வளையவிட்ட வண்ணம்!

'பாவம், பொண்ணுப் பொறந்த நீ, யார் யாரை யெல்லாமோ நம்புறே! அதுக்கு உண்டான பலா பலனை நீ கைக்கு மெய்யாப் புரிஞ்சுக்கிட வேண்டிய நேரமும் காலமும் கூப்பிடுற தொலைவிலே தான் இருக்குது!...'

பஞ்சவர்ணத்தின் அடிமனம், அடிபட்ட வலி தாள மாட்டாமல் வாட்டம் கண்டு. ஆனால் வடிவுமீள மாட்டா மல், வீங்கிப் பொருமிக் கண்ணீர் கழித்தது. கண்ணீரின் முள் முனையிலே அவளது எதிர்காலம் மட்டுமா ஊச

லாடியது? அவளுக்குரிய மானம் மரியாதை அனைத்தும் ஊடும் பாவுமாகச் சேர்ந்தல்லவா அல்லாடித் தள்ளாடின?

'நாளைக்குப் பொழுது படுறதுக்குள்ளே, எம்புட்டு பொருளுக முச்சூடும் எங்கைக்கு வந்துசேர வேணும். இல்லாங்காட்டி, எனக்கிண்ணு ஊருப்பஞ்சாயம் கூட்டின ஒனக்கும் நாளைக்கு ஊருப்பஞ்சாயம் வைக்காம நானு பாயிலே தலைசாய மாட்டேனுக்கும்!...'

சேலைத் தலைப்பை எடுத்துச் சுருட்டி, வாயில் திணித்துக்கொண்டாள். அதற்கு மசிந்து விடவில்லை வாய் அழுகை. எங் கஷ்டம் முடிஞ்சி போயிருச்சுதின்னு, சாமியாடி அய்யா சாமான்களைத் தந்தடியுமே நெனைச்சு, திகைச்சு சந்தோசப்பட்டுப்போய், தொம்பங் கூத்தாடிச்சி கணக்கா மானத்துக்கும் மண்ணுக்குமாக் குதிச்சேன். ஆனா, இப்ப எங் கஷ்டம் முடியலே; என்னோட கதை தான் முடியப்போவுது! இந்த மச்சான் இப்பிடி ராவணக் கோவம் கொண்டு, என்னைப் பாடாப் படுத்துதே?... பொட்டைக் குட்டியின்னுக்க, பிசாசுகூட புளியங்கொம்பிலேருந்து இறங்கிவந்து, மனசும் இரங்குமின்னு ஒரு வாக்கு நிலைக்குது. இப்பைக்கு இந்த ஆம்பளை என்னைப் பழிக்குப்பழி வாங்கப் பாக்குதே! அன்னிக்கு ஒரு நாளைக்கு இவுக எனக்குத் தந்த சாமான் சட்டுகளாட்டமே தானே இந்தச் சாமான்களும் ஒரே அச்சாயிருக்குது! நாகுடிச்சாமியாடி அய்யாகூட அப்பிடித்தானே சொல்லி, எம் மனசுக்கு வல்லமை ஊட்டுனுக! 'இதுகளும் பினுங்கு சீமை சாமான்கதான், தங்கச்சி! இதைக் கண்டதும், முத்தையன் மனசு மலைச்சுப்போயிரும், எப்பிடி இம்மாஞ் சாமானும் ஒங் கைக்கு கெடைச்சிதின்னு! கெடுவான் கேடு நினைப்பான்னு சும்மாவா சொல்லிப் போனுக?

ஐய்ய, ஒன்னை ஒரு வயசுப் புள்ளை இப்பிடிக்கொத்த வகையிலே அனுச்சாட்டியம் பண்ணுறது சாமிக்கே அடுக்காது!...'

'சரி, நீ போயிட்டு, அல்லாத்தையும் அவன் வூட்டிலே வீசிப்புட்டு ஓடியா, நாளைக்கே உன் ஆசை மச்சான் கோலப்பன் வந்திடுவான்; அப்பாலே, குந்தி ஞப்பிலே ஒன்னைத் தூக்கித் தலைமேலே வச்சுக்கிணு பம்பரமாச் சுத்துருனு, இல்லீயா, பாரேன்! ஐப்பசி பொறந்ததும், ஒனக்கும் நல்ல காலம் பொறந்திடும், பஞ்சவர்ணம்! மூத்தவன் நானு; என்னை நம்பு! ஊருக்கு மூத்தவ ஆயிமகமாயி! அவளையும் நம்பு! நீ நம்பியிருக்கிற நம்ப சாதிக்கட்டுக்கு உட்பட்ட அந்த மூக்குடி மச்சான்காரன் கோலப்பனும் ஒன்னைத்தானுக்கும் மலையாட்டம் நம்பியிருக்கான்! நாளைக்கே ஒங் கழுத்திலே திருப்பூட்டின கையோடவே, அவன் ஒன்னைத் தன் ஊருக் குடிக்காட்டுக்கே லாந்திக்கிணு பறந்திடுவான்; இனிமேயும் நீ இந்த மண்ணுப் புறத்தாலே கால் பாவுறது லாயக்கு இல்லே...சரி, நீ பறிஞ்சு போ!...' இன்னொரு சங்கதி, ஒரு நூறு ரூவாய்க்காசு தண்டுபண்ணிக் கொண்டாந்து தா. உம்பிட்டுத் தங்கத் தாலிச் சரட்டை மீட்டுத் தாரேன்!... சரி, நீ போ!" என்று வானம் அளந்த வள்ளண்மை பூண்டு பேசினர் சாமியாடி. முடிவோ, முத்தையனின் கல் மனத்தை அடிபெயர்க்கக்கூட தெம்பு பெறவில்லை.

ஆரம்பமும் முடிவும் ஒன்றுக்கொன்று ஊடாட முடியாத இரு துருவங்கள் தாம் போலும்!

பஞ்சவர்ணத்தின் பேதை மனத்திடம் அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்: 'இனிமே எங்கதி என்ன

ஆகுறது ?' அதே இமைப்பில், இமைபாவாத கண்ணின் மணிகளைச் சுற்றிலும் அந்நிகழ்ச்சி, நடந்து காட்டியது.

உதயம் இதழ் அவிழ்ந்த இனிய பொழுது அது. இரவில் கைவிரல் நகங்களில் அப்பிக்கொண்டு படுத் திருந்த மருதாணி அப்பொழுது படல்படலாகக் காய்ந்து உதிர்ந்திருந்தது, மருதாணி நகம் அழகாகக் காட்சி தந்தது. 'நம்ம சாதி சனம் தலைக்கட்டுக்குள்ள, நம்ம ஊருச்சட்டப்படிக்கு, ஊர் வெத்தலைபாக்கு வச்சு, பொண் ணுக்குப்பரிசம் போட்டு, திருப்பூட்டினதும், பொண்ணோட நகத்துக்கு மாப்பிள்ளை மருதாணி பூசுறது வளமை. மருதாணி நகத்துச் செவப்புப்போல, நெத்திச் செவப்புப் பொட்டும் அந்தம் மாரும இருக்கோணுமிங்கிறது சடங்கு. இப்ப, அதுக்கு முன்னாடியே, நானு ஒனக்கு மருதாணி பூசிப்புட்டேனுக்கும் !' என்று 'மௌட்டிகம்',வம்பு பேசிய முத்தையனைக் காணமற் போனாலும், அவனது வார்த்தை களைக் கண்டாள்.

எண்ணியதை எண்ணி நிறுக்கவிடாமல், வேறொரு நினைவு பஞ்சவர்ணத்தை ஆட்கொண்டது. 'இந்த ஒரு நடப்பை நானு எம்மாங் கடுத்தம் மனசுக்கு வாங்கி நெனைக்கப் பிடாதின்னு மெனக்கட்டுக் கிட்டிருந்தேன். இப்ப வந்து அது என் மனசை அரிச்செடுக்குதே!... முந்தி ஒரு நாளு, இந்த முத்தையன் மச்சானைப்பத்தி இல்லாததும் பொல்லாததுமாப் பேச்சு காதிலே விழுந் திச்சே! இந்த மனுசன் தன் அப்பன்காரக தேடிவச்ச அக்கரைச் சீமைப் பணத்தை குடி, கூத்தியின்னு கல்லாக் கரியாப் போக்கடிக்கிறதாச் சேதி வந்து, அன்னிக்குப் பொழுதண்ணைக்கும் தூங்காம, விடிஞ்சு எழுந்திருச்சதும் மனசு கிலேசப்பட்டுக் கிட்டே இருந்திச்சு, அந்த நேரத் திலே தானே மூக்குடி மச்சான் சாமி யொப்ப உருக்

கொண்டுகிட்டு வந்து, எம் மனசுக்கு உகந்த சாமியாகவே ஆயிட்டாரு!...சாமியே, இனிமே எனக்கு ஒங்களைத்தவிர வேறே போக்கிடம் இல்லே!...'

இவ்வாறு, அவள் ஆடி ஓடி வந்த நேராக நின்ற பொழுது, அவளுள் முடிவொன்று தோன்றியது. அந்த முடிவை ஆதரித்தால் நடக்கக்கூடியது என்ன, ஆதரிக்காவிட்டால் நடக்கக்கூடியது என்ன என்கின்ற ஆராய்ச்சி செய்யக் காலம் இல்லை. ஆனால், 'சரி; நடக்கிறது நடக்கட்டும்...என் மனசுக்கு ஒப்பத்தான் நான் இனிமே நடந்தாக வேணுமாக்கும்! என்று தீர்மானம் செய்தவளாக, அவள் தட்டை எடுத்துக்கொண்டு, திரும்பின நேரத்தில், கிழவி சீரங்கம் வந்து சேர்ந்தாள். கன்னிப் பாவைக்கு திகிற் பூண்டை மிதித்த மாதிரி இருந்தது. "விடிஞ்சடியும் வாரேனுங்க அயித்தை!..." என்று சொல்லிப் புறப்பட்டாள். அப்பொழுது, "நில்லுங்கறேன்" என்ற அதிகாரத் தொனி அவளுக்குத் 'தடைகல்' ஆனது. 'தடை கழிந்த மாதிரி, அங்கிருந்து புறப்படப் போனவளுக்கு மீண்டும் முட்டுக்கட்டை விழுந்தது.' திரும்பினாள்.

"பஞ்சவர்ணம்!"

"என்னாங்கிறேன்!"

"என்ன அழைக்கிறது துடுக்கா யிருக்குதே?"

"நீங்க என்னமோ முந்தானை போடப் போறவளைக் கூப்பிடுற ரீதியிலே கூப்புட்டதுக்கு பதிலுக்குப் பதிலுப் போல நானு ஒங்களைக் கூப்பிடுறேன். அம்புட்டுத்தான் கதை!"

"கதை அம்புட்டுமில்லே; இம்புட்டுமில்லே!"

"சும்மா வாயைக் கொட்டாதீங்க. கதை எல்லாம் முடிஞ்சு எம்மாங் காலமோ ஆயிருச்சுதே!"

"எவன் சொன்னது? இப்பத்தானே ஒங்கதையே புதுசா ஆரம்பமாகப் போவுது?"

"ஊம், ஒங்களோட எனக்கு என்ன பேச்சு? நானு நடக்கிறேன். ஒங்க மனசுப்படிக்கு நீங்க தந்த சாமான் சட்டுகளை இப்ப என்னாலே அப்பிடியே படைச்சுத் தந்துப் பிடுற சக்தி எனக்குக் கெடையாதுங்க! அதாலே...!"

"அதாலே...?"

"அதுக்கு உண்டான முடிவை நீங்கதான் சொல்லோணும்!"

"என்னோட சாமானுக பூராப் பொழுது கழியறதுக் குள்ளாற எங் கைக்கு வந்தாக வேணும். இல்லாங் காட்டி...?"

இல்லாங்காட்டி...?

"ஒம் மானம் மருவாதையை வாங்கறதுக்கு விடிஞ்சதும் விடியாததுமா ஊருப்பஞ்சாயம் கூட்டி, ஊருக் காருவார்க்காரங்களை தனது வச்சு ஒனக்கு கட்டுமானம் வச்சுப்புடுவேன்!" என்று அகங்காரத் திமிர் விரிந்த குரலுடன் முத்தையன் பேசி முடித்தான். அரும்பு பாய்ந்த மீசையை கைலாகு பிடித்துத் தடவி விட்டான். கைவிளக்கை பஞ்சவர்ணத்தின் வதனத்திற்கு நேர்வச மாகப் பிடித்தான். அப்போது அவன் சிரித்த அகம் பாவச் சிரிப்பை அவள் காணவும், அதே நேரத்தில் அவள் அலட்சியமாகச் சிரித்த ஆணவச் சிரிப்பை அவன் தரிசிக்கவும் ஒரு நல்லவாய்ப்பு கிட்டியது.

அவள் கைகளில், 'முத்தையன்' என்னும் பெயர் எழுதப்பட்டிருந்த அந்தக் கருக்கரிவாள் இருந்தது.

முத்தையன் வீறுகொண்டான்.

"இன்னு நெஞ்சழுத்தம் ஒனக்கு இப்பிடிச் சிரிக்கிற துக்கு? இல்லே, கேக்கிறேன்!" வீருப்புடன் கேட்டான்!

"ஏனுங்க மச்சானே! சிரிப்புக்குக்கூடவா நீங்க 'வாயிதா' போட்டிருக்கீங்க? ரவைப் பொழுதுக்கு முந்திவரை, நானு அழுதுக்கிணுதான் இருந்தேன். இனி அந்தக் காலம் மலையேறிப் போச்சுது. ஐயாவே, மச்சான்கார மவராசரே! ஒங்க மனசுப்படியே காலம்பற மம்மலோட பஞ்சாயம் வையுங்க. அப்ப வந்து நானு பேசிக்கிடுறேன். இப்பைக்கு இந்தச் சாமான் தட்டை மட்டும் கையோட கொண்டுக்கிட்டுப்போறேன்!" என்று உள்ளடங்கிய நைத்தியச் சிரிப்பை உதிர்த்து விட்டுப் பிரிய முனைந்து, கிழவியிடம் 'விடை' சொல்லிக் கொண்டாள்.

வெளிவாசலில் விளக்கெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் மங்கலான ஒளி ரேகை, வாசல் முகப்புத் தூணில் கட்டப்பட்டிருந்த செம்மறிக் கடாவின் முகத்தில் தெறித்தது. காகம் ஒன்று கரைந்தது. பசுவும் கன்றும் பாசப் பரிவர்த்தனையில் கட்டுண்டு குரல் கொடுத்தன.

அவள் வைத்திருந்த அந்தக் கருக்கரிவாளை மடக்கிப் பறிக்கவேண்டுமென்றிருந்தான். ஆத்திரம் அவன் நினைவைப் பறித்தது. ஏமாந்தான் முத்தையன்!

உச்சாடனம் பெற்றவனைப்போல வாசலுக்கு மடங்கினாள் பஞ்சவர்ணம். கொண்டைப் பூச்சரம் உதிர்ந்து விழுந்தது. கோதியமுடி கலைந்தது. செழித்துத்தழைத்துக்

காணப்பட்ட ரவிக்கையை 'மாரகச்சேலே' முனையினுல் அழுத்தி மூடிக்கொண்டு நடந்தாள். முருங்கைமரம் வழி விட்டது. காட்டுக் கற்ருழைச்செடி பாதை காட்டியது. இருட்டோ, அவளுடன் 'கண்ணுமூச்சி' விளையாடியது. நடந்தாள். நடை மெலிந்தது. நடந்தாள்; நடை வளர்ந்தது!

சக்திவேல் திடலை ஓட்டிவந்ததும், காலாரக் கொஞ்ச நாழிகை நின்ருள் அவள். இரைப்பு எடுத்தது. அருகிருந்த பாம்புப் புற்றை உற்றுநோக்கினுள். மெய் சிலிர்த்தது. மீண்டும் கிழக்குத் திசையை வசப்படுத்தியவாறு அடி ஒற்றி, அடிஎடுத்து, தடம் கண்டு, தடம் விலக்கி, ஒற்றையடிப் பாதைக்கு மருகின சமயத்தில், அவள் வீடு தென்பட்டது. அப்பொழுது, "பஞ்சவர்ணம்!" என்ருெரு குரல் கேட்டது.

அங்கே முத்தையன் காணப்பட்டான்.

"வல்லூருட்டம் ஏதுக்கு என்னைத் துரத்திக்கினு வாரீங்களாம்?"

"நான் வல்லூறு இல்லே, அம்மான் பொண்ணே! பஞ்சவர்ணக்கிளிக்கு உகந்த ஜோடிக்கிளி நான்! எம்புட்டு இந்த ஒரு சந்தேகத்துக்கு மட்டும் நீ சவாப்புச் சொல்லிப்பிடு, போதும்! என்னை நீ அந்தக் காலத்திலே களத்து மேட்டிலேயும், முதல் காளாஞ்சி வாங்கின தேர்த் திருநாளப்பவும், கூட்டாஞ்சோறு உண்ண சமயத்திலவும், கம்மாய்க்கரையிலேயும் நொடிக்கு நூறு கடுத்தம் கண்டு தண்டிக்கிட்டு ஆசையாப் பேசின நீயா இப்ப என்னை வைரியா நெனைச்சுப்புட்டே? நான் அன்னிக்கு-அதான், நீ என்னை விசாரிக்கிறத்துக்காவ பஞ்சாயம் கூட்டினப்போ-நான் திடுதிப்பின்னு கிணத்திலே குதிச்சேனே;

அது ஏன்னு தெரியுமா? ஒனக்கு என்னேப்பத்தின கவலே எப்படி இருக்கும்? நானே அதுக்குள்ள பதிலேயும் புட்டு வச்சுப்புடுறேன். என்னேப் பத்தி யாரோ கெட்டஎண்ணத் திலுலே உங்கிட்ட இல்லாததும் பொல்லாததும் சொல்லி அதை அம்புட்டையும் நீயும் நம்பின சங்கதியைக் கேள் விப்பட்டதும்தான், நான் அப்பிடிக் கிணத்துக்குள்ள குதிச்சேன். இதை நீ நம்பு; இல்லே, நம்பாம இரு. ஆனு, நீ நெனேக்கிறமாதிரி நான் தப்புத்தண்டா ஆசாமி இல்லே அந்த ஆளு கோலப்பன் விசயமா நடந்துக்கிட் டது கூட, எனக்குப் போட்டியா அந்த மனுசன் வந் தானேயின்னுதான்... அதாலேதான் இப்படிக் கொத்த குந்தகம் மூண்டிருச்சு. உன் சோளக்கொல்லேக்குத் தீ வைக்கச் செஞ்ச கெடும்புகூட அந்தப் பழங்கதையினு லேயே தான்! ம்... ஒன்னேத் தவிர, எம் மனசிலே வேறே எந்த ஒரு குட்டிக்கும் இடம் கெடையாது, பஞ்சவர்ணம்! ஆத்தா சத்தியம் இது!...ஆமாலே!"

முத்தையனுக்கு அழக்கூடத் தெரியும்!

அந்நேரத்திற்கென்று, வளேயற்காரக் கிழவர் அவ் வழியே திரும்பினுர். உடனே முத்தையனே நடுவழியில் நிறுத்திவிட்டு, விட்டவழியைத் தொட்டவளாக அவள் வழியைத் தொடர்ந்தாள்.

அப்பொழுது கிழவர் அவளிடம் சொன்னதாவது: "தங்கச்சி!...ஒங் கண்ணுலச் சோறு எப்பம்மா கெடைக் கும்? வேளே கூடிவரப் போகுதின்னு பேச்சு வந்திச்சு. உண்டனை சந்தோசப்பட்டேன். எங்க அக்கரைச் சீமைப் புள்ளேக்குக்கூட சம்பந்தம் சாடிக்கை திகைஞ்சிருச்சு. அதொட்டித்தான் எனக்கு அங்கிட்டுஇங்கிட்டு நகரவாய்க் கலே! இப்பத்தான் நெனேப்புக்கு வருது. முன் ஏர் போன

வழித்தான் பின் ஏருன்னு சொல்றதுண்டு. அதுபோலத் தான், இப்ப ஒன் கைக்குள்ளே கோலப்பன் இருக்குதாம். நாகுடிச் சாமியாடி கூட ஒம்பேரிலே ஒசந்த அளவுக்குப் பாசம் வச்சிருக்காரு; ஒன் அப்பனுக்குசெஞ்ச தீவினைக்குப் பரிகாரம் செஞ்சுக்கிட வேண்டித்தான் அவரு ஒன் விசயத்திலே கருக்கடையா இருக்காராம்!... முத்தையன் ஒனக்குத் தந்த சாமான் சட்டு மாதிரியே அவரு உங்கிட்டே சேர்ப்பிச்சாரே, அதோட கமுக்கம் ஒனக்குத் தெரிய வாய்க்காது. ஒனக்குத் தந்த சாமான்க போலவே இன்னொரு ரகத்தை அந்த முத்தையன் வச்சிருந்ததைத் துப்புக் கண்டு நாகுடிச் சாமியாடி போயி அவனைக் கேட்டுத் 'தனது' பண்ணிப் பேசி, ஒம் மனசை அவன் பக்கம் சாய்க்கிறதாகப் 'பொய்' சொல்லி, அல்லாத்தையும் சேகரம் செஞ் சிக்கிட்டு வந்தாராம். முத்தையன் கிட்ட அவனோட சாமான்களை உன் மூலம் வீசிப்புட்டாக்க, அப்பாலே ஒன் மானம் தப்பிப் பொழைச்சிடு மிங்கிற ஆசைதான் அவ ரோட இந்த விளையாட்டுக்குக் காரணம், தங்கச்சி!... இன்னொண்ணு! ஒருநாளு, கோலப்பன் உங்கிட்டே தந்த அந்தத் தங்கத்தாலிச் சரடுகூட, நாகுடிச் சாமியாடி யோடது தானும். அது அவருகிட்டவே வந்திருச் சாமே!...ஈடுக்கு வாங்கின அதைத் திரும்பி ஒனக்கே கோலப்பன் மாருபத்திலே தந்திட வேணுமின்னும் சொன்னரு. மணியக்கார ஐயாகூட, 'சாமியாடி இம்மாம் நல்ல புள்ளியான்னு' தெகைச்சுப் போயிட்டாராம்!..."

கவலையுடையார்க்குக் கண்ணுறக்கம் வராது!

பஞ்சவர்ணம் தன் வீட்டிற்குள் நுழைந்து புகுந்தாள்!

# 20 அழுகை சிரித்தது!

இருட்டில் புகுந்தவளுக்கு, வீட்டின் வெளிப்புறத்துக் காரைமுள் வேலிப்படல் தாழ்விலக்கிக் கிடந்ததைப்பற்றி எப்படித் தெரிந்திருக்கப் போகிறது?

அன்புப் பாங்கி கோவிந்தம்மா ஆர்வம் மிகக் குரல் கொடுத்து அலட்டினளே, அந்தப் பான்மையைத்தான் அவள் எங்கே புரிந்து கொண்டிருக்கப் போகிருள்?

கண்முன் வாழ்க்கை நடக்கிறது!

ஆனல் கண்ணுக்குப் பின்னே சம்பவங்கள் நடக்கின்றன!

வீட்டில் நுழைந்த பஞ்சவர்ணம், கைப்பதனமாக சுவர் மாடத்தைத் தடவிப் பார்த்து, தீக்குச்சியை எடுத்து, நிமிண்டிக் கொளுத்தினள். பற்றி எரிந்தது தீ. பற்றி எரிந்த வயிறு அதனுடன் மல்லுப் பிடித்தது. கை விளக்கை உரலில் வைத்துவிட்டு, உள்ளே இருந்த வண்ணமாக வெளியில் நோக்கினள். வானத்தில் அவளது கண்ணின் கறுமை இடம் பிடித்துக் கொண்டதாகப் பட்டது அவளுக்கு. அதன் காரணமாகத்தான், தனக்குப் பழுதான பார்வை உண்டானதோ என்று அவள் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை. ஆனல், அவள் மூளை, அவளது அந்த ஒரு முடிவை-பல முறை எண்ணி அழித்து, ஈரம் காய்ந்து, சிலும்பல் தட்டிப்போய்விட்ட அந்த ஒரு முடிவை மீண்டும் புத்துயிர் கொள்ளச் செய்தது. 'ஆமா; அதுதான் சாலக்கு.

இனிமெ எனக்கு இந்த ஆவணத்தாங்கோட்டை மண்ணு சரிப்படாது. ஆத்தா அப்பனைப் பறிகொடுத்துப்பிட்ட இடுசாமத்தைத் தந்த இந்தப் பட்டிக்காட்டு மண்ணுக்கு எங் கனவையும் நேசத்தையும் பலி குடுக்க ஒப்பவே மாட்டேன்! எம்புட்டு வாழ்க்கை விடியாமத் தப்பினாலும், பொழுது பளார்னு விடியாமத் தப்புமா? இல்லே, பொழுது விடியப்புடாதின்னு சாபம் குடுக்க நான் என்ன அனுசூயாத் தெய்வமா, என்ன? ஊம், விடிஞ்சடியும் என்னைச் சந்தியிலே இழுக்கிறதுக்கு அந்த முத்தையன் மச்சான்காரரு பஞ்சாயம் வைக்காம மூச்சுவிட மாட்டாக! ஆனபடியாலே, வெள்ளி முளைக்கிறதுக்குள்ளாவே, நானு இங்கணேயிருந்து பறிஞ்சு, மூக்குடி மச்சானைத் தேடி சதம்மின்னு புறப்பட்டுப்பிட வேணும். இந்த ஒரு பாதைதான் எனக்கு ராக்காச்சித் தாயி காட்டுற பாதையாத் தோணுது...பொட்டச்சி எம் மனசிலே! மூக்குடி மச்சான் இம்மா நாளைக்கும் மூச்சுக்காட்டாம இருக்கிறதுக்கு எது காரணமானுக்கூடபரவாயில்லே. எம்மூஞ்சியை கண்டதும், அவுக மூஞ்சியிலே நல்ல சிரிப்பு மூண்டுப்பிடும். அது போதும் எனக்கு! இம்புட்டுக் காலமும் நான் பட்ட பாட்டுக்கு விடிமோச்சம் கிட்டிப்புடும்! மானைக் காட்டி மானை லாந்திப் புடிக்கிறதுக்குக் கங்கணம் கட்டியிருக்கிற முத்தையன் ஆம்பளேயோட ஆசையிலே மண்ணு விழுந்திடப் போவுது! அல்லாம், விடிஞ்சதும் அவருக்கு மட்டுப்பட்டுப் போயிடும்...ஊம்!'

வளையற்காரக் கிழவர் கூறிய அத்தத் தங்கத்தாலிச் சரட்டின் விருத்தாந்தத்தை நினைவூட்டிப் பார்க்க அவளுக்கு ஞாபகம் உண்டாகவில்லை. அதேபோல, சாண் வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்த பசியைப் பற்றியும் அவளுக்கு நினைக்கும் நோக்கம் எழக்காணோம்.

மெல்லிய அரவம் கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஏதும் புலனாகவில்லை! வெளி இருட்டை ஒட்டிக்கு இரட்டியாகப் பெரிதாக்கிக்கிக் காட்டிக் கொண்டிருந்த விளக்கை ஒரு விரற்கடை தள்ளி வைத்து விட்டு விலகி, ஓலைப் பாயை எடுத்துப் போட்டாள். வழக்கமாக, கோலப்பன் படுத்துறங்கி, பெருமூச்சுடன் நீதியுடன் காலங்கழித்த கதையை அந்தத் திண்ணை முந்தல் அவளுக்குச் சொல்லியதோ? பேசாமல் சொள்ளாமல் அவ்விடத்தையே உறுத்துப் பார்த்துவிட்டு நகர்ந்தாள். உடல் புழுங்கியது, விளக்கை ஊதினாள். ரவிக்கையை முடி அவிழ்த்து வீசினாள். அவள் கை விரல்களில் இன்பம் விளைந்தது. வெறி கொண்ட பாங்கி னில், அவள் அப்படியே பாயில் புகுந்தாள்.

காலம் ஓடியது.

பஞ்சவர்ணம் தன்னை மறந்துஉறங்கினாள். படுத்துக் கண் வளர்ந்தவள், மேனி வெளியில் இன்பக் கிளு கிளுப்பை உணர்ந்தவளாக, கனக் கண்டு விழிப்பவள் போல, வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள். வேற்றானின் கை படவே, அவள் எட்டி அறைந்தாள்! தழும்பு படும் வரை அறைந்தாள்!

தீ சிரித்தது!

கோலப்பன் சிரித்தான்!

“ஆ!...” என்று ஓலமிட்டாள் பஞ்சவர்ணம்!

“பஞ்சவர்ணம்...!”

“எங்கழுத்திலே ஒங்க கையினாலே திருப்பூட்டுறது மட்டுக்கும் எம் மேனியைப் பத்தி நெனைக்கப்புடாதின்னு சகட்டு மேனிக்கு எவ்வளவு தக்கம் கிளிக்குப் படிக்கனே

படிச்சிருக்கேன் ஒங்களுக்கு? கடோசியிலே, எம்புட்டு இருப்பு புரியாம, இருக்கிறவுங்க எம் மானத்தை வாங்கி றத்துக்கு முண்டாசு கட்டிக்கிட்டிருக்கிறது பத்தாதின் னுட்டு, நீங்க வேறேயா இப்ப எம் மானத்தைக் குடிச்சு ஏப்பம்விட ரோசிச்சுஇப்பிடித் தீவட்டிக் கொள்ளைக்காரன் மாதிரி பூந்து வந்து இருந்து என்னைக் கெடுக்கிறத்துக் குப் பார்த்தீங்க? தூ!... துப்பில்லையா ஒங்களுக்கு? இதுக்காவத்தானு ஒங்க நிழலு இங்கிட்டாலே இத்தினை நாளும் படாம, ஒளிஞ்சிருந்தீங்க? ஐயையோ! இனிமே நானு இந்தப் பூமாதேவிக்குச் சுமையா இருக்கிறதே தப்புக் காரியந்தான்! ஆத்தா ராக்காச்சியோ!" என்று கூக்குரலிட்டபடி அங்கிருந்து ஓடத் தலைப்பட்டாள்.

அடுத்த இமை கொட்டும் பொழுதில், அவள் தலையில் மோதி வந்து நின்ருள் இன்னொரு பெண் - புதுப் பெண்!

பஞ்சவர்ணம் வெறியைக் கலைக்காமல், நிமிர்ந்தாள் 'யாரு இந்தப் புதுசு?...' வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்

"பஞ்சவர்ணம், நீ மெய்யாலுமே எந் தெய்வமாத் தான் தோணுறே. எங்கழுத்திலே மூணு முடிச்சுப் போட் டது போதாதின்னு, ஒங்கழுத்திலேயும் மூணு முடிச்சுப் போடறதுக்கு இந்தப்பாவி மனுசன் கூத்து ஆடின கதையே எனக்கு இப்பத்தான் அக்கா காதுக்கு விழுந்து தலைதெறிக்க ஓடியாந்தேன்!" என்று கதறிஞள் அந்தப் பெண்.

"ஆ! என்ன இது? நீ யாரு? நானு ஒங்கழுத்திலே மூணு முடிச்சுப் போட்டேனு? பஞ்சவர்ணம், இந்தச் சனியன் தாடகைக்குத் தங்கச்சி! இவளை நீ நம்பாதே!"

என்று விம்மியவாறு எழுந்தான் கோலப்பன். மறுகணம், அவன் நிலை சுழன்று தடுமாறித் தரையில் சாய்ந்தான்.

“ ஆத்தா! ” என்று பெருங்குரல் எடுத்துக் கூவினுள் பஞ்சவர்ணம். முடிந்திருந்த தலை முடியை அவிழ்த்து விட்டாள். அவிழ்ந்து கிடந்த கச்சையை முடிந்து கொண்டாள். மருதாணிச் சிவப்பு அழியாமல் இருந்த அந்த மருதாணி நகத்தை வெறி பிடித்துக் கடித்துத் துப்பினுள். உதிரம் சொட்டியது; சொட்டிய உதிரத்தை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தாள். “மூத்தவளே !.... நீயும் எம்மாதிரி ஒரு சமயம் ரத்தக் காட்டேறியா இருந்ததை ரூபிக்கவா இப்பிடி என்னை ஆட்டிப் படைச்சே?... ஐயையோ! இந்த ஊத்தைச்செம்மம் எனக்கு எப்பொறப்புக்கும் வேண்டவே வேண்டாம்! கேவலம், நொண்டி முடமானவன் கூட என்னைக் கொண்டுக்கிட வாய்க்காத கொடும்பாவியாகிப் புட்டேனே! ஐயையோ .... ஆத்தா!”

பஞ்சவர்ணம் பேய்ச்சிரிப்பை உதிர்த்துக் கொண்டே நடந்து வந்தாள். கோலப்பனையும் அந்தப் புதுப் பெண்ணையும் பரபரவென்று வெளியே இழுத்துத் தள்ளி விட்டு, மீண்டும் உள்ளே ஓடினுள். திரும்பவும் திரும்பினுள். கோலப்பனையும் அந்தப் பெண்ணையும் காணவில்லை!... மறுபடி உள்ளே பாய்ந்தாள். நாதாங்கியைப் போட்டாள். எரிந்த விளக்கை எடுத்தாள். சேலைத் தலைப்பைத் தீயில் நீட்டினுள். ‘நெசமான அன்பும் நேசமும் இல்லாத பொய்யான ஆளுகளுக்கு ஊடாலே, பொண்ணுப் பொறந்தவ நானு வாழ்ந்துப்பிடலாம்னு நெனைச்சதே குத்தமின்னு புரியறதுக்கு இம்மாங் காலமாயிருக்குது!’

அப்பொழுது: “ஐயையோ! பஞ்சவர்ணம்!... நானு முத்தையன் இங்கணே மச்சுக்குள்ளே ஆப்புட்டுக்

கிட்டுத் தவிக்கிறேனே! தீநாக்கு நாலு பக்கமும் சுட்டுப் பொசுக்குதே! ஒரு அசல் ஊர்ப் பொண்ணைக் கொண்டு கோலப்பனைப் பத்தி அவதூறு பேசி, பொய் சொல்ல வச்சுப்பிட்ட எம்பிட்டு நாக்கு இப்ப என்னையே சுட்டுப் பொசுக்குதே !...ஐயையோ, பஞ்ச வர்ணம்!... ஒன்னை ஒருத்தியையே மனசிலே நெனைச்சு நெனைச்சுச் சந்தோசக் கூத்து ஆடிப் பழகிக்கிட்ட எனக்கு நீயே 'மாகை' ஆனே! ஆனதாலே, ஒன்னை இம்மியும் மறக்க ஏலலே என்னாலே! அதொட்டி, முடிஞ்ச முடிவாய் ஒன்னை ஒரு வாட்டி 'பதம்' பார்த்துப்புட வேணுமிங்கிற கெட்ட நோக்கத்தோடே கங்கணம் கட்டிக் கிட்டு வந்தேனே...நானு மாபாவி! ஈன செம்மக்காரன் நானு!... என்னைச் சோதிச்சுப் புடாதே! எம்புட்டு தீவினை என்னைச் சுட்டுப் பொசுக்கி, கூண்டோட கைலாசத்துக்கு அனுப்பியிடும் போலயிருக்குதே?... ஐயையோ!... கண்ணுமண்ணு புரியலையே!... ஐயோ... தெய்வமே!... என்னைச் சமிச்சுப்புடு தாயே!..." என்ற அவலக் குரலை நெருப்புக் கணங்கள் செவிசாய்க்குமா?

விடிந்தது.

'பஞ்சவர்ணம் தேநீர்க் கடை' யின் முன்னே பெருங் கும்பல் கூடியிருந்தது.

நெருப்புக் கொப்பளங்கள் திகழ, முத்தையன் விசுப் பலகை ஒன்றில் கிடத்தப்பட்டிருந்தான். அவனுடைய விழிகள் இரண்டும் பையப் பைய திறக்க முயன்றன. "பஞ்சவர்ணம்!... பஞ்சவர்ணம்!...இந்தப்பாவிக்கு புத்தி சொல்லித் தாரதுக்கா இந்தக் குடிக்காட்டிலே வந்து பொறந்து, கடைசீலே நெருப்புக்குப் பலியானே?... ஐயையோ!... ஒன்னை நானு இனிமெ எப்பொறப்புலே

காணப்போறேன் ?...” என்று அரற்றினன் முத்தையன் கிழவி சீரங்கம், தேம்பினுள். அந்த அயல் ஊர்ப்பெண் விம்மினுள். கோவிந்தம்மா அழுதாள்.

மெய் நடுங்க எழுந்தான் கோலப்பன்.

“ஆயி பஞ்சவர்ணம்! எனக்கு லவிச்ச புதுக்கோலத் தோட ஒங் கண்ணுப் புறத்தாலே முழிக்கிறத்துக்கு அஞ்சி, வெட்கப்பட்டு, வெந்து, நொந்து தலே மறைஞ்சு கிடந்த எனக்கு எம்மாம் பெரிய தண்டனே குடுத்துப் புட்டே நீ? கடோசிலே, என்னுேட குலதெய்வமாவே மாறுறதுக்கா இத்தனே காலமும் கனக்கண்டே நீ? ஆத்தா பஞ்சவர்ணம்! அய்யோ! ராக்காச்சி ஆத்தா!” என்று கிறுக்குக் கொண்டு, அலறிக் கொண்டிருந்தான் கோலப்பன். தரையில் தென்பட்ட அந்தக் கைப்பிடிக் கம்பை தத்தித் தத்தி எடுத்து, உக்கிரம் அணைந்திருந்த தீக்கும்பலில் ஓங்கி வீசினுன். உடனே, அவன் வெறி மூண்டு விரைந்தான்; எழுந்தான்; நடந்தான்; ஓட முயன்ருன்; இடறி விழுந்தான். குச்சி உதவியது.

பாம்புப்புற்று அவனுக்கு வெற்றிலே பாக்கு வைத்தது.

நல்லபாம்பு அவன் கைவிரலே எட்டிப்பிடிக்க ‘வேளே’ கணித்துக் கொண்டிருந்தது.

“ஐயையோ, மச்சான்!... மச்சான்காரகளே! மச்சான்!...”

மூடிய கண்களேத் திறந்தான் கோலப்பன். “ஆ!...”

“என்னேப் பழிவாங்கிறதுக்கு ரோசிச்ச ஆம்பளேயை நானு பழி வாங்கிப்புட்டேன் ...! இல்லே ... இல்லே!

ஆத்தா பழிவாங்கிப்புட்டா... ...பாவம்!...ஆமா, ஆமா!... பாவம் செய்ய வந்த அந்த முத்தையன் மச்சான் பாவத்தைச் சுமந்துக்கிணு போயிட்டாரு! ம்... அந்த ஆசாமியோட கதை இப்பிடி அவலமா முடிஞ்சதுங்கிற கதைகூட ஊருக்கு இனிமேத்தான் புரியும் ..அவுக விதி அப்பிடி... தலைச்சுழி அப்பிடி! சரி, இனியும் நாம இந்தப் பாவ மண்ணிலே கால்பாவி நிக்கிறது பாவமுங்க!...ம், தெய்வம் நின்னு கொல்லுமினு சொல்ற மூத்தவுக வாக்கு மெய்ப்பட்டுப் பூடுச்சு!... ஊம்... மச்சான் உங்களுக்காவத்தான் ஆவணத்தாங் கோட்டை மண்ணைவிட்டு இங்கிட்டாலே காத்துக்கிட்டு இருக்கிறேனுங்க; என்னைப் பெரிய மனசு பண்ணிப் பொறுத்துக்கிட மாட்டீகளா?... ராவு அந்த முத்தையன் மச்சான் நான் மூட்டின நெருப்பிலேயே அகப்பட்டுக்கிட்டப்ப, அந்த மனுசன் தான் செஞ்ச குத்தத்தை ஒப்புக்கிட்டுக் கத்தினதை நானு கேட்கப் போவத்தான், ஒங்களோட மெய்யான நெலைமை எனக்குப் புரிஞ்சிது. நானும் உயிர் தப்பிச்சேன்... இதுகூட ஆத்தாளோட புண்ணியந்தான்!... மச்சான்... மச்சான்!..." என்று தேம்பி நின்ற பஞ்சவர்ணம், அவனது 'கன்னத் தழும்பில்' தன்னுடைய பரிசுத்தமான கண்ணீர்க் காணிக்கையை 'தாரை' வார்த்தாள். புதுப்பிறவி கொண்டாள். அவன் சிரிப்பில், அவள் சிரித்தாள்.

கோலப்பன் கோல் நகைபுரியக் கேட்பானேன்!

கடலைக் கொடிப்பூவைப் போல செஞ்சுடர்ச் செல்வன் மின்னினன். அந்த மினுமினுப்பால், அவளது முகம் துலாம்பரமான எழிற்கோலம் ஏந்தியது. கோலப்பன் அவளைப் பயத்துடன் அண்டினன்.

"என்னைப் பார்த்தியாலே!" என்று கெஞ்சினன், கோலப்பன். அவளைப் பயத்துடன் பார்த்தான்.

பஞ்சவர்ணம் அவனைப் பார்த்தாள்.

பாம்பு தீண்டிவிட்டதோ? என்ன அதிசயம்?

தீண்டிய நஞ்சினைக் கக்கி விட்டதோ? பஞ்சவர்ணம் வெள்ளைச் சிரிப்பைக் கக்கினள். அதில் அமுதம் துளித்தது. "மச்சான்! ஏதுக்கு இப்பிடிக் கண் கலங்கு றீங்க?... ஏதுக்கு உங்க மேனி குலுங்குது? மச்சான்! முதல் முதலிலே ஒங்களை நானு கண்டப்ப, நீங்க மம்முத ஞய் வந்தீங்க!... இப்ப நீங்க என்னேட சாமியாய் வந்திருக்கீங்க!... மெய்யான சேதியுங்க, மச்சான்!..." "தேங்கா பறிக்க ஏறினப்ப, காலு தவறி விளுந்துப் புட்டேன். எலும்பு உள்ளுக்குள்ளவே முறிஞ்சிருச்சுப் போல மேம்போக்கா இருந்திட்டேன். பொறை அடிச்சு. இந்த ஊனத்தை உண்டாக்கியிருச்சு. இதாலே எம்புட்டு பொல்லாப்பு மூண்டிருச்சு?... இந்த நொண்டிக் கோலத்தோடே உம் மூஞ்சியிலே முழிக்கிறதுக்கு நாஞ்சல் பட்டுக்கிட்டு அஞ்ஞாத வாசம் செஞ்சதாலே தானே ஒனக்கு இம்மாம் பெரிய ஐயறவு எம்பேரிலே விழுந்திருச்சு?... ஆத்தா கிருபையாலே அல்லாம் தீர்ந்துபோனமாதிரிதான்!... இந்த முடம் முன்னை மாதிரியே உம் மனசிலே இடம் பிடிச்சுக்கிட்டதுகூட மூத்தவள் செயலேதாருக்கும்!..." என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் பேசினன் கோலப்பன்; பிறகு அவன் தன்னுடைய முடமான வலது காலைப் பரிதாபத் துடன் பார்த்துக்கொண்டான். சுடுநீர் வழிந்தது.

அவனது கண்ணீரை அவள் துடைத்தாள். "மச்சான் காரக மனசு நொண்டி முடமாகாமத் தப்பிச்சதே,

எனக்குக் கோடிப்பணம் கொட்டிக் குடுத்தாப்பிலே அம்மாம் குதூகலமாயிருக்குது!... ஆத்தா மூத்தவ எப்படி யெல்லாமோ கூத்துக் காட்டுரு. ஆயி கூத்தைப் புரிஞ்சுக் கிடுறதுக்குக்கூட நம்மளுக்கு வயசு காணுது...அழுத தெல்லாம் போதுமுங்க... சிரியுங்க மச்சான்!..."

அவனைக் கைத்தாங்கலாகப் பற்றிக்கொண்டு அடி ஒற்றி, வழி ஒற்றி நடந்தாள் பஞ்சவர்ணம். சுருக்குப் பாதை மடங்கியது.

ராக்காச்சி அம்மன் சந்நிதி வந்தது.

கோலப்பனை கோயில் முகப்பில் வைத்துவிட்டு, அவள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து எழுந்தாள். "ஆத்தா, தாயே!" என்று தேம்பினுள். பிறகு, அடி மடியில் இருந்த மஞ்சள் தாலிக்கயிற்றை நீட்டி, தன் கழுத்தையும் கோலப்பனிடம் நீட்டினுள்.

பஞ்சவர்ணம் இப்பொழுது கோலப்பனுடைய சொத்து!...

இருவரும் சாமி கும்பிட்டார்கள். விண்ணில் பறந்த கருடனும் தரிசனம் ஈந்தது.

"மூத்தவளே! மேலேக்கு நாங்க ரெண்டு பேரும் மூக்குடியிலேருந்து கௌம்பி ஒஞ் சந்நதிக்கு வந்து, பள்ளயம் படைச்சுக் கும்பிடுறேம். எங்களை எப்பவும் கட்டிக் காத்துக்கிட வேண்டியது உம் பொறுப்பாக்கும். ஒன்னைத்தவிர எங்களுக்கு வேறே நாதி ஏது தாயே!"

"மச்சான்"! என்று பாசம் பொங்க, நேசம் பொங்க அழைத்தாள். பிறகு, தன்னுடைய தூய்மையான, எழில்

மண்டிய, வளப்பம் கொழித்த நெஞ்சத்திடை கோலப்பனின் நடுங்கிய கைகளை 'முட்டு'க்கொடுத்து அணைத்துக் கொண்டாள்.

"இந்தாப் பாருங்கங்கிறேன்! நான் ஒங்களுக்குத் துணைக்கு வந்ததுக்குப் பொறகாலே, இனிமே இந்த மரக் குச்சி எதுக்குங்க?" என்று சொல்லி, ஊன்றுகோலை வீசி விட்டு, கோலப்பனை நெஞ்சோடு நெஞ்சாக இறுகத் தழுவிக்கொண்டு, புத்துலகம் காணப் புறப்பட்டாள் பஞ்சவர்ணம். மேனியை அணைந்த தீப் புண்களின் உபாதை அவளை இனி ஒன்றும் செய்துவிட முடியாது!

பகல் செய்வோனின் கதிர் முத்தங்கள் மண்ணுக்குப் பரிசில்களாக அமைந்த விந்தையினை அதிருஷ்டம் என்பதா? அன்பு என்பதா? தியாகம் என்பதா?... இல்லை, கடமை என்பதா?...

நன்றி

JACKET PRINTED AT SHRIMATHI PRINTERS (S. R & Co.) MADRAS-2